ஸ்ரீ. பாரதியம்

அம்மானை

GNANAPRAGASAR LIBRARY
657/1, Hospital Rd
Jaffna
No.

அநாதிநம.

சந்தியாகுமையோரெனப்

பெயர்வழங்கும்

அர்ச். யாகப்பர்
அம்மானை.

இது

தெல்லிப்பழையில் வசித்திருந்த

பேதுருப்புலவனால்

1647-ம் வருஷத்தில் இயற்றப்பட்டது,

அதிசிரேஷ்டரனுமதியுடன்

முன்பதித்த பிரதிக்கிணங்க,

யாழ்ப்பாணம்

அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையிற்

பிரசுரிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

1930.

(2)

895
PED

005236

இந்நூலாக்கியோனின்
மாணுக்கரொருவரா லியற்றிய
பொதுப்பாயிரம்.

பெரியவியாக்கோபாய்ப் பிறங்கிடுசெந்த்யாகாய்
அரியயாகப்பரெனும் அன்பன்றிருக்கதையை
இலங்காபுரியிருக்கும் யாழ்ப்பாணராச்சியத்தில்
துலங்குமெண்ணுல்பதிக்குந் துங்கமுடிபோலுயர்ந்த
வல்லிக்கிராமமதில் வளர்ந்ததிருநகராம்
தெல்லிக்கிராமமெனுஞ் சீர்சிறந்தபேரூரில்
அம்புவியெங்கு மரியமுறைநடத்துங்
*கொம்பாஞ்யதேசேசுக் கூட்டத்திலுள்ளகுரு
காரிருள்போல்வந்த கனபகையைநீக்கிவளர்
பேர்சுவாங்கறுவாலாம் பெரியசன்யாசிகையால்
கல்வின்மேற்கல்லாய்க் கனகமுடிமூன்றுவைத்து
அல்லலுறுபாவ மவிழ்க்கப்பிணிக்கப்பிணிக்கவாம்
பெற்றசிட்டபேதுருவும் பேர்பெரியபாவுலுவும்
உற்றமறைக்காய்மரித்த வுண்மைமுகாந்திரத்தால்
கட்டியகோயில்தன்னிற் கர்த்தன்றிருவருளால்
சிட்டஞானஸ்நானஞ் சீருலவவேதரித்தோன்
தாணுயிருக்குஞ் சருவேஸ்பரன்மறையின்
ஞானகுருத்துணையால் நீதிக்கிறீஸ்தவனும்
ஆரியர்கோத்திரத்தோன் அன்புநெறிநீதியுள்ளோன்
சீரியபேதுறென்போன் சிந்தைமிகக்கொண்டாடி
நம்புங்கிரணமென நானிலமெங்கும்விளங்குங்
கொம்பாஞ்யதேயேசுக் கூட்டத்திலுள்ளகுரு
தவசெபங்களிற்சிறந்த தன்மநெறிநீதியுள்ள
சுவாங்கறுவால்லூயிசென்னுந் தூயோனுரைப்படிக்கு
எப்பொருட்குங்கர்த்தாவை எங்கும்நின்றவோனை
தப்பில்லாநீதியுறை தாய்மரியைப்பெற்றெடுத்து
ஆண்டாயிரமு மறுநூறுமாறேழும்
மீண்டுமோராஞ்சும் விளங்கவேசென்றவந்நாள்
கார்த்திகைமார்கழியாங் காணுமிருமாதமதில்
கீர்த்தியுள்ளசெந்தமிழாற் கிளத்திஞரிக்கதையை
அந்தமுடனிதனை அம்மானைப்பாவனையாய்ச்
செந்தமிழினுலறியச் செப்பினர்யாவருக்கும்
ஆனதினுலிந்த வரியகதைகாரணமாய்
மாநகரோரேகேட்டு மகிழ்ச்சியதுகொள்வீரே
இக்கதையைப்பாடினது என்னுடையஆசரியன்
தக்கமனதாய்க்கேட்டுத் தற்பானைப்போற்றிடுவீர்.

---

* சேசுசபைக் குருமாருக்கு அக்காலத் திச்சொல் வழங்கினது.

அநாதிகம்.

சந்தியோகுமையோரெனப்
பெயர் வழங்கும்

அர்ச். யாகப்பர் அம்மானை.

காப்பு.

வெண்பா.

பொற்புடைய மெய்த்தேவ புத்திரனார் தம்முடைய
பற்றுடைய சீடருள்ளே பண்புடைய—அர்ச்சியசிட்ட
யாகப்ப ரின்சரிதை இன்பமுடன் பாடுதற்கு
ஏகபரா என்னுள் ளிரு.

சிறப்புப்பாயிரம்.

அம்மானை.

நேர்தங்குநாதன் நிறைந்ததிருவருளால்
பார்தங்குரோமையெனும் பட்டணத்தில்வீற்றிருக்கும்
சீர்தங்குபாப்பின் திருமுடியுஞ்செங்கோலும்
பேர்தங்கிவாழ்ந்திருக்கப் பேருலகுதான்விளங்கச்
செங்கோல்முடிபுனைந்த சீர்வேந்தர்தாஞ்சிறக்க
மங்காக்கிறீஸ்துசபை மாநிலமெல்லாந்தழைக்க
ஆதிக்குவந்தேற்ற அன்பர்களுமீடேற
நீதிமுறைநடக்க நீள்புவியெங்குஞ்செழிக்க
கொள்ளைநோய்குட்டங் கொடியபகையாதியன
எள்ளளவுமின்றி யிருக்கவிந்தமேதினியோர்
மாரிபெய்துநெல்விளைய மாநிலமெங்குஞ்சிறக்க
வாரிமிகுந்தோங்க வையகத்தோர்கொண்டாட
பாலும்பழமும் பலசிறப்புமுண்டாக
மேலுஞ்சுகமாக மேதினியோர்வீற்றிருக்க
ஒன்பதுமாத முயர்பரனைத்தன்வயிற்றில்
அன்புடனேவைத்திருந்த அன்னைமரிக்கஞ்சல்செய்தேன்
வேதாவையீன்றுவைக்க வேறிடமில்லாததுபோல்
தீதாங்கழுதைபசுச் சேர்ந்தொதுங்குந்தொட்டிலிலே
தாதாவையீன்றுவைத்த தாய்மரிக்கேயஞ்சல்செய்தேன்
மாதாவாயாதி மகளாகிமானிலத்தில்

நீதில்லாஓர்வடிவாய்ச் சென்மமறுவில்லாமல்
ஏதமகலவந்த ராசகன்னிக்கஞ்சல்செய்தேன்
ஆதிக்கணக்க னரியனுக்கேசுவென்போன்
நீதியுடனுன்னுறுப்பை நேசமுடனோர்படத்தில்
உன்மகனார்சொல்ல வுவந்தெழுதப்பட்டதன்மை
மின்னுந்தவவடிவே மெய்யின்மணிவிளக்கே
உன்னுதவிகொண்டு உயர்சலோமைமைந்தனுக்கு
இன்னிலமேலம்மானை யான்பாடவேயருள்வாய்
அந்தமுறும்வானு மவனியதுந்தான்படைத்த
கந்தமுறுநீதிக் கடவுள்தனையேந்திக்
காற்றுமழைவெயிலுங் கானகமுந்தான்நடந்து
வேற்றூர்க்குப்போனீர்நீர் மேதினியோர்க்காகவல்லோ
வானோர்தம்முடனே மாநிலத்திற்றங்கியந்நாள்
சேனோர்போற்றத் தினம்பணிசெய்திருந்து
ஆறிருவருக்குமுத லாதிமறைக்காய்மரித்து
பேறுடையவானிருக்கும் பெரியயாக்கோபுவுடை
அம்மானைகற்றோர்முன் னவனிதனிற்பாட
எம்மாண்டவரையருள் ராக்கினியேமுன்னடவாய்
செபதேயுபெற்றெடுத்த திருமகனின்காதைசொல்லத்
தவயோகசோதியுடை தாயேநீமுன்னடவாய்
உன்தங்கையாகி உன்மேலேபட்சமுற்று
நன்தங்கையானமின்னாள் நற்சலோமைமைந்தனுக்கு
தூயதமிழாற்றெரிந்து தொல்காவியம்பாட
தாயாந்திருமரியே தயவாகமுன்னடவாய்
எம்மிறைவன்முன்னா யிருப்போன்கதைபாட
அம்மையிசவேலீன்ற அன்பனேமுன்னடவாய்
மாநகராம்பிக்க மகிமையெஸ்பானுதனில்
தானுபதியான தன்மன்கதைபாட
ஆனசுமாளிகையில் அன்றுசநகைபெற்றவனே
வானுதிதல்சுதனே வந்தெனக்குமுன்னடவாய்
எந்தவிதமோவறியேன் ஏகன்றிருவருளால்
செந்தமிழைப்புன்றமிழாற் செப்பத்துணிந்துகொண்டு
பாடுகிறேனென்சொற் பழுதாயிருந்தாலும்
தேடரியவிக்கதையைத் தீங்ககற்றியேற்பீரே
பாண்டிக்கரையதனிற் பரதர்கள்கோத்திரத்தோர்
வேண்டுசந்தியோகுகதை விருத்தப்பாவாயுரைத்தார்
வேறுமிதுவன்றி வேண்டும்பெரியோர்கள்
கூறினார்மெத்தக் குறிப்பானகாரியங்கள்

ஆனதெல்லாங்கற்றுணர்ந்து அற்புதத்தியோடுலகர்
தானறியவிக்கதையைச் சாற்றுகிறேன்கேட்டருளீர்
வாம்பரிமேலேறி மகிமைச்சுவடணிந்து
நாம்பணியநீதி நடத்துசந்தியாகுவுக்கு
எச்சரிக்கையாக விலங்கியயாழ்ப்பாணமதில்
பச்சிலைப்பள்ளியென்னும் பற்றிற்கிழாலியிலே
கொம்பாஞ்யதேசேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
நம்பிச்சமைத்துவைத்த நல்லாலயத்திருந்து
ஆருந்தமைத்தேடி அஞ்சலிக்கவாறவர்க்குத்
தேறுமனந்தரவுஞ் செய்தேயிருப்பதுமெய்
செய்நவத்தினூற்கோடி செனங்களிங்கேவாறார்கள்
ஐயமறவிங்குவந்தோ ராசையுற்றுக்கேட்பதற்கு
அம்புவியெங்கும் அரியகதிர்போல்விளங்கும்
கொம்பாஞ்யதேசேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
கூடலெனும்மதுரைக் கொற்றநகர்தன்னில்வந்து
பாடுமகவல் பழுதில்லாப்பாவாக்கி
இங்கனுப்பும்புல்தகமும் ஏற்றவர்சொற்படிக்கும்
சங்கத்தைச்சேர்ந்திருக்கும் சற்குருக்கள்சொற்படிக்கும்
எங்குமொருபொருளா மேகபரனருளால்
அங்கங்கிருக்கு மலரினுறைசெந்தேனை
தங்குமளியெடுத்துத் தானொன்றாய்க்கூட்டுதல்போல்
இங்கக்கவிதைசெய்யத் துணிந்தேனேயம்மானை

கதையின் வரலாறு.

விருத்தம்.

சர்ப்பத்தினுருவமாகித் தழலுறுமலகைமுன்னாள்
அற்பமாமதியையுள்ள அரிவையைமோசம்போக்கி
துற்குணம்வருத்துமந்தத் துயர்களையகற்றவந்த
அற்புதக்கிறீஸ்தின்சீஷ னரியசந்தியாகுவென்போன் 1

உதித்திடுபதியின்வாறு முவந்ததாய்தந்தைவாறும்
விதித்தவரிடத்தேசுத்தன் விரும்பியேவசித்துஞானம்
பதித்திடும்வாறுமீனப் பகைஞரைவென்றவாறும்
மதித்திடுமறைக்காய்த்துஞ்சி மகிமையையடைந்தவாறும் 2

திருவுடலிறந்தவாறுந் தீயவர்பகைத்தவாறும்
ஒருபொருளானவாதி யுதவியவாறும்மண்ணிற்
றருநவந்தன்னைநாளுந் தழைத்திடவருளும்வாறும்
வருவதேகேளும்மாந்தர் மனமதேமகிழத்தானே 3

அம்மானை.

இந்நிலத்தோர்நாள்தோறு மேத்துங்கலிலேநகர்
தன்னிற்பெருமைகளுந் தங்குசெபதேயு
மானுர்சலோமையுடன் வாழ்ந்தேயிருந்ததுவும்
தேனுரவள்வயிற்றிற் சிறந்தகருத்தோன்றியதும்
புத்திரனைப்பெற்றதுவும் போதவளர்த்ததுவும்
சுத்தசந்தியாகு தொழில்செய்துவாழ்ந்ததுவும்
கத்தனுடைமுன்னுன்கு காரியப்போர்தானுன
உத்தமவப்போஸ்தலரில் ஓராளாயுற்றதுவும்
ஏகபரன்றுஞ்சுமுன்னு மிவ்வுலகைவிட்டபின்னும்
ஆகங்களித்துலகி லன்பாய்நடந்ததுவும்
பன்னிருவர்துஞ்சமுன்னம் பாதகனேரோதைகையால்
உன்னிமறைக்கா யுயிரைவிடுத்ததுவும்
ஆத்துமம்மோக்கிஷத்தி லாதியிடஞ்சென்றதற்பின்
ஏத்துமிவர்சீஷ ரிழவுகொண்டாடியதும்
சுத்தன்றிருவுடலைத் தோணிதனிலேற்றியதும்
அத்துறையைநீங்கி அமலன்றிருவருளால்
ஏற்றவெஸ்பாஞவெனு மெண்ணரியமாநகரில்
தோற்றுமுருவுடனே சுத்தனுடல்வந்ததுவும்
அந்தத்துறையில்வந்து அரசாயப்பட்டணமாள்
கொந்தாரழகமங்கை கூறுமுலோப்பவிடம்
உத்தாரங்கேட்க உறுதவத்தோர்சென்றதுவும்
வித்தாரமின்னளும் வேந்தனிடம்விட்டதுவும்
முப்பொழுதுந்தானுன முதல்வன்றிருவருளால்
அப்பொழுதுசுத்தனுடல் அங்கிருந்தகாரணமும்
அவ்வரசன்ருனு மதிகமுனிவோடு
செவ்வையுள்ளோரைப்பிடித்துச் சேமத்தில்வைத்ததுவும்
அன்றிரவிலாஞ்சுவந்து அவரைவிடுத்ததுவும்
சென்றவரைப்பின்பிடிக்கத் தீயனனுப்பியவர்
பாலத்தினல்விழுந்து பாழ்பட்டுப்போனதுவும்
ஆலத்தோனுன அரசன்மனமிளகி
உன்னுந்திருவேதத் துட்பட்டகாரணமும்
இன்னமும்லோப்பா ளிடறுசெய்தகாரணமும்
சீஷர்பரிசுத்தனுடல் சிறப்பாயடக்கியதும்
வாஷமுள்ளவேதமதில் வஞ்சிமின்னுள்வந்ததுவும்
ஓதுமிந்தக்காரணங்க ளுலகோருணர்ந்தறிய
ஆதிதிருவருளால் அற்புதங்களானதெல்லாம்
பின்னுலுரைத்திடுவேன் பேருலகிலுள்ளோரே
எந்நாளுங்கேட்டு இனிமையுற்றுவாழ்வீரே

அவையடக்கம்.

விருத்தம்.

அன்பாறிரண்டுபேரு ளந்தநாளிந்தியாவில்
இன்புசேர்சோதிவேத மியற்றுசந்தொம்மைதானும்
அன்புசேர்சவியேரான வருந்தவக்குருவின்றாளும்
என்சிரமீதுகொண்டே னிக்கதைநடாத்தத்தானே 4

முன்னவர்பெரியோர்கற்றோர் முனிவர்ஞானிகட்குமுன்னே
உன்னியான்சொல்லவெண்ணற் குவமையேதெண்ணிச்சொல்வேன்
பொன்னுலகதனிற்றோற்றும் பொற்கதிர்தனக்கொப்பாக
இன்னிலஇளையோர்மண்ணி லெழுதியகதைபோலாமே 5

அளவிடாக்கடலினீரை யலவனூர்குழியில்வைக்கப்
பழகுமோர்குழவியென்னும் பரிவதுபோலுமாகும்
குழகுறுமெறும்புபாம்பு கோழரியுடனேபோர்க்கு
இளகிடாதெழுதல்போலு மிக்கதையியம்பலுற்றேன் 6

அம்மானை.

எந்நேரமும்மனேவாக் கெட்டாவிறைவனுடை
சந்நிதியிலங்கிருக்குந் தக்கோன்றிருக்கதையை
அரியதமிழதலனு லம்மானையாய்ப்பாட
பெரியபுகழிந்தியவிற் பேரின்பவேதமதை
முந்தவெமக்குரைத்த முன்னவன்சந்தொம்மையருள்
சிந்தைதனில்நிறுத்தித் தெண்டனிட்டேனம்மானை
துக்கத்தைநீக்கித் துலங்குமணித்தீபமெனச்
சற்குருவாயுறையும் *சவியேர்திருப்பாதம்
பூண்டுகொண்டேனென்றறியாப்புல்லன்மொழிக்குற்றமெல்லாம்
நீண்டபெரியோரே நீர்பொறுத்துக்கொள்வீரே
எண்ணுங்கணக்கு மிலக்கணமுஞ்சீர்தளையும்
பண்ணுமறியேன்நான் பாடுமிசைதானறியேன்
தற்பரன்சந்நிதியிற் சத்தியமாய்ச்சொல்லுகிறேன்
அற்பபுத்திகொண்டு அரியசந்தியோகைநம்பி
நற்புலவோர்தங்கள்முன்னே நாணுமல்நானுரைக்குஞ்
சொற்கிணையேதென்னிற் தொகுத்துரைக்கக்கேட்டருளீர்
மின்னுமொளிபோல விளங்குகதிராயிரம்விட்
டுன்னிச்சுடரோங்கு மோதரியசூரியனைச்
சின்னமதலை தெருவில்விளையாடி
மண்ணிலெழுதுகின்ற வாறதுபோற்பாடுகின்றேன்

* சவியேர் என்பவர் அக்காலத்திலிருந்த குருச்சுவாமியார்,

எண்ணிக்கரைகாணு தேற்றுஞ்சமுத்திரத்தை
உன்னியொருகுழவி யுற்றநண்டுப்பாழியினுள்
வைக்கமனந்துணிந்தால் வையகத்தோர்க்கென்படுமோ
மெய்க்குந்தமிழ்வாணர் மேதையர்கள்பாவலர்கள்
இப்பாடல்கண்டுநம்மை யென்சொல்வாரோவறியேன்
ஒப்புந்தரையி லுயர்ந்திலங்குமாமலையில்
வைப்பாயிருக்கும் மலருலவுசெந்தேனை
அப்பாலுறுமுடவன் ஆசைப்படுவதுபோல்
மிக்காசைகொண்டடியேன் விண்ணப்பஞ்செய்யலுற்றேன்
எக்*கடுவுமொன்று யிருக்குமொருபாம்பு
மிக்கநவமணியை மேதினியிலீன்றதென்றால்
தக்கோரெடுத்துச் சவதரித்துக்கொள்ளாரோ
புல்லனியானுனுலும் புந்தியினுற்சொன்னமொழி
மெல்லுகின்றசோற்றினிலே வீற்றிருக்குங்கல்லெனவே
பாவலர்களான பலகவிதைகற்றவரே
ஏவல்செய்வோனுன எளியேனைக்கண்பார்த்து
ஆதியானந்த அரியதிருப்பொருட்காய்
ஏதுமறுவரினும் என்பிழையைநீர்பொறுப்பீர்

நாடு நகரச் சிறப்பு.

விருத்தம்,

சறுவதாபரமாயெங்குந் தங்கிடுதுங்கசோதி
மறுவிலாக்கருணைகூர்ந்து வளர்நகாரியநீதம்
பெறுதவமுனியோர்வாழ்ந்த பேரின்பம்பெருகுமேன்மை
உறுநகாளவில்லாத வுண்மைசேர்கலிலேநாடே 7

நாடியபகைநோயில்லா நன்னெறிநகரம்நாளும்
வாடியேயிளைத்தோர்நொந்தோர் வறிஞர்யாவர்க்குமன்பாய்த்
தேடியேதானமீயுந் திருநகர்தெளிந்தவாணர்
பாடிடவடங்குமோசொற் பழுதிலாக்கலிலேநாடே 8

காவெலாம்மலரின்வாஷம் கலையெலாமுன்போற்பாஷம்
நாவெலாம்மொழியின்றூய நாதனைமறவாநேசம்
பாவெலாமிரத்தஞ்சிந்தும் பழுதறுகிறீஸ்துநாம
மேவல்லோர்பிறந்ததேச மிலங்கியகலிலேநாடே 9

அதம்பிழைதீர்ப்பதற்கா யதியாங்கடவுள்தந்த
சுதன்றனதன்னையோடுந் தூய்மைசேர்சீஷரோடும்
விதம்பெறமனதுவந்து விளக்கமாநவங்கள்செய்து
இதம்பெறவிருந்தநாடு இணையிலாக்கலிலேநாடே 10

* கடு—நஞ்சு.

அம்மானை.

ஏகன்மனுவுருவா யிங்குவந்தவந்நாளில்
ஆகமுள்ளகன்னியெனும் அரியமரியவுடை
உற்றஉறவருக்குள் ளுவந்தகானுனூரில்
கற்றோர்புரியுங் கலியாணமானதிலே
அப்போஸ்தலரு மரியமரியன்னையரும்
எப்பேருங்காண விருமூன்றுசாடிதண்ணீர்
கர்த்தன்மதுவாக்குங் கருணையுள்ளபட்டணமாம்
வற்றுக்கடலில் வருமோடமீதேறிப்
போகும்பொழுதினிலே பொங்கிக்கடல்குமிற
ஏகனதையமர்த்தும் இனிமையுள்ளபட்டணமாம்
கண்ணுஞ்செவிடுங் கனவூமையுந்தெளிய
எண்ணியருள்புரியு மினிமையுள்ளபட்டணமாம்
சப்பாணியாயிருந்த சஞ்சலனுக்கானசுசம்
மெய்ப்பாய்ப்பரன்கொடுத்த மேன்மையுள்ளபட்டணமாம்
அப்பமைந்துகொண்டு ஐயாயிரம்பேர்க்கு
செப்பசனமீந்ததன்றிச் சேருநாலாயிரற்கு
ஏழப்பத்தாலு மியற்சிறியமீனுலும்
தாழ்வற்றபோசனத்தைத் தாமேகொடுத்தநகர்
பாவத்திறைற்செறிந்த பாரினிருள்கற்றத்
தீபத்தைப்போன்றசுத்த செல்வன்பிறந்தநகர்
காசினியிலன்று கனத்ததினகரத்தில்
ஆசையுடனே யரும்பொருளைக்காணவென்று
வந்தவஞ்ஞானிகளை வாகாய்வெளிப்படுத்தும்
மூந்துதவப்பிலிப்பு முத்தன்பிறந்தநகர்
தானுயிருக்குந் தவத்தின்திருவுருவை
வான்மீன்வழிகாட்ட மனர்மூவர்வந்தநகர்
செத்துலர்ந்தமுந்திரிகை தேவனருளாற்றளிர்த்துத்
தொற்றுங்கனியளிக்கத் தூயவிரசமதால்
தேவனுக்குப்பூசைவைத்துத் தெண்டனிட்டசிட்டதொம்மை
தாவமறப்பிறந்த தன்மத்திருநகராம்
பொய்யுங்களவும் புலையும்புரிபேயை
மெய்யிறுகச்சேர்த்து விரிவாந்தளைபூட்டி
அங்கத்திற்றோலை அரியவுடுப்பாயுடுத்துப்
பங்கமடுந்தவத்தோன் பாரிற்பிறந்தநகர்
மாயவஞ்சத்தோர்கொடுத்த வன்கடுவைத்தான்குடித்து
ஆயன்றிருவருளா லாண்டுதொண்ணூற்றென்பதுவும்
செய்யதவம்புரிந்து செத்துமுடல்காணுத
தூய்யதவத்தோன் சுவானிபிறந்தநகர்

ஆனசந்தியாகுவையும் அன்பாஞ்சுவானியையும்
தேனார்சலோமை செபதேயுபெற்றநகர்
முன்னேபிறந்தநகர் முத்திக்கலிலேநகர்
பொன்னுலகில்வீற்றிருக்கும் புண்ணியர்கள்தோன்றுநகர்
மாயவினைநீங்கி மாதவங்கள்செய்யுநகர்
ஆயிலைமார்கற்பா லருந்தவங்கள்செய்யுநகர்
நன்மைநிறைந்து நவம்பெருகும்மாநகராம்
துன்மதிகள்மங்கித் துலங்குந்திருநகராம்
எண்ணத்தாற்கூடி இயற்பெரியபாவலர்கள்
பண்ணைப்பாய்ச்சொன்னாலும் பாடத்துலையாது
ஏற்றுங்கருணை யிறைவன்றிருவேதம்
சாற்றியதுமுந்தத் தவத்தோர்பகர்ந்ததுமாந்
துய்யகலிலேநகர் துங்கன்பிறந்தநகர்
வையகத்தில்மிக்க மகிமையுள்ளமாநகரே

அர்ச். யாகப்பரின் பெற்றோரின் நிலைமை:

விருத்தம்,

துலங்குமாதவநோவாவிற் தோற்றியபிதிர்கள்கூடித்
தலங்களையாளுஞ்சோதி தற்பான்றனக்கேதங்கள்
புலன்களாற்செய்யநீதம் புன்மையாய்க்குலங்கள்வேறாய்
தலங்களிற்பிரிந்தோருள்ளோர் சாதியாம்யூதர்க்குள்ளே 11

மனுநெறிதருமநீதி வழங்கியசெபதேசென்போன்
இனியதோர்சலோமையென்னு மேந்திழையுடனேகூடித்
தனுநெறிநெறியின்பத்தைத் தக்கதோர்மனனம்பண்ணி
அனுதினங்கலிலையான வருநகரிருந்தவாறே 12

அம்மானை.

அந்நாளில்நோவா வரியபிதிரிலுள்ளோர்
தன்னால்வரும்வினையாற் சாதிப்பிரிவாகிப்
போனார்பலவழியர்ப் பொய்ப்பேய்க்கெடுவினையால்
வானதர்தந்த வளர்வேதவுண்மைகொண்டு
ஆதிக்குவந்திருந்தார் அந்நாளில்யூதர்குலம்
நீதிப்படியுதித்த நீண்டசெபதேயு
மரியசலோமையென்னும் மங்கையரைக்கைப்பிடித்து
அரியமுறைப்படியே அம்புவியில்வாழ்ந்திருந்தார்
நண்ணுந்திருவேத நாதன்றிருச்சபைக்கு
எண்ணரியதூணா யிருந்ததவமுனிவர்
சுத்தசெரோனிமுவுஞ் சொலுநீசெப்ளன்றவரும்
இத்தலத்திற்சொன்னபடி எண்ணுஞ்செபதேயு

மன்னர்குலத்துதித்த வங்கிஷத்தையென்னாமல்
அன்னவர்கள்தங்களிலே ஆதிக்குநேர்ச்சிசெய்து
பாவமருவருத்துப் பண்மைமனதினுன்னி
ஏவல்செய்வோருடனே இயல்பாஞ்செபதேயு
ஆழ்கடலிற்றோணிவிட்டு அன்பாயதனிடத்து
வாழுமச்சந்தான்பிடித்து வாழ்ந்திருக்குமந்நாளில்
இத்தொழில்கள்செய்தாலு மெக்குறையுமின்றிநன்றாய்த்
தத்துவமாய்வாழ்ந்ததென்று சாற்றினார்கற்றோர்கள்

கருத்தரித்தல்.

விருத்தம்,

கற்புள்ளாள்தவத்தையுள்ளாள் காதலன்றனக்கேயேற்ற
நற்புள்ளாள்சலோமையென்னும் நல்லவளுதரந்தன்னில்
பொற்கதிர்க்கிரணம்போலப் பொருந்தியேபுதுமைகாண
அற்புதன்கிருபையாலே யருள்கருத்தரித்தாளன்றே. 13

அம்மானை.

நீதிநிறைந்திருக்கும் நேசச்சலோமையர்க்கு
ஆதிதிருவருளால் அந்தநாளானதிலே
கெற்பந்தரித்துக் கிரணவொளிர்சேர்பாலன்
உற்பவிக்கமின்னா ளுவந்துமனங்குளிர்ந்தாள்
மேனிமிகவெளுத்து மெய்த்துயரங்கொண்டுமங்கை
ஊணுறக்கமற்று ஒருபொருளைப்போற்றிசெய்து
சித்தமிகத்தளர்ந்து செய்யுந்தொழில்மறந்து
மெத்தமுகம்வாடி மின்னாளிருந்ததினால்
மங்கைதுயரறிந்து மாதவத்திகாதலனும்
சங்கைக்கிளைவழியுந் தாதியரும்மூப்பினரும்
ஏதும்விரும்பிமிக இச்சையுற்றபோசனங்கள்
மாதுதனக்களித்தார் வாய்த்தவுறவிலுள்ளோர்
கொண்டாடிப்பாடிக் குவயத்தில்மாதினுக்கு
உண்டானதுய்யகரு வுற்றேதரித்ததிங்கள்
ஒன்றிரண்டாய்மூன்று யுவந்தேயொருநாலாய்
சென்றைந்துமாதஞ் சிறப்பாகமுற்றியபின்
ஆறேழெட்டொன்பதிலே ஆயிழைக்குத்தொய்வெடுத்து
கூறியமங்கையருங் கூர்ந்திருந்தாளம்மானை

அர்ச். யாகப்பரின் ஜெனனம்.

விருத்தம்.

பொன்னவர்களிக்கமண்ணோர் புளகமுற்றின்பமாகி
அன்னையும்பிதாவுஞ்சுற்ற வருங்கிளைவழியுஞ்சூழ
மின்னொளிபரந்துந்தான்றும் விளங்கியகதிர்போலன்ன
தன்னிகரிலாதநீதிச் சலோமைகான்முளையையீன்ருள். 14

அம்மானை.

ஒன்பதுமாத மொழுங்காய்நிறைந்ததற்பின்
அன்போடுவானவரு மம்புவியோருமறிய
துய்யபளிங்கில்வைத்த சுத்தவிரத்தினம்போல்
வையகத்தில்துய்ய மகவீன்ருள்மங்கைநல்லாள்
மாராயம்பாராயம் மங்களங்கள்சோபனங்கள்
காரார்குழலியற்குங் கற்றசெபதேயுவுக்கும்
மைந்தன்பிறந்தான் மனமிடிமைதீரவென்று
முந்துங்கிளைவழியில் முன்னேருறவோர்கள்
வந்தேகளிகூர்ந்தார் வாழ்த்திஞர்மங்களங்கள்
இந்தப்பெரும்பெற்று லெல்லோருங்கொண்டாட
ஏவலதுபுரியு மேந்திழைமார்தாதியர்கள்
காவலன்புத்திரனைக் கண்டுகரத்தேந்தி
நீராட்டித்தாராட்டி நீண்டபட்டுச்சாணையிட்டு
பாராட்டிச்சீராட்டிப் பாடிப்பணிந்துகொஞ்சி
பட்டினுலைபொதிந்து பன்னீர்தனைவிசிறி
மட்டறவேவாழ்த்தி வளர்த்தார்காணம்மானை

திருநாமந் தரித்தல்.

விருத்தம்.

இன்னமுந்தினமோரெட்டி னியகற்குளவிதன்னை
மகனியமறைப்படிக்கு வரிச்சடங்கறுத்துநாமம்
தன்னையேசாற்றவென்று தந்தையுந்தாயுந்தம்மில்
உன்னியேகொண்டுசென்று உவந்தபேர்தரித்திட்டாரே. 15

அம்மானை.

ஆனந்தநீதி யலங்கிர்தப்பாலனுக்கு
மானந்தருஞான வண்மைமறைப்படியே

ஏற்றுஞ்சடங்கறுத்து எண்ணுந்திருப்பேரைச்
சாற்றவென்றுதந்தைகிளைத் தக்கோரெல்லாங்கூடி
சோடித்தாராலயங்கள் சுற்றுதெருவீதியெங்கும்
வேடிக்கையாக்கிநல்ல விருதுக்கொடிதூக்கி
முத்துவர்னம்மேகவர்னம் முதற்பஞ்சவர்னமதால்
சித்திரவித்தாரமிட்டுச் சேரச்சிறப்பாக்கி
பட்டுப்பணிவகையும் பன்மலரின்மாலையுடன்
பொட்டிட்டுக்குங்குமத்தாற் போந்தநல்லகோலமிட்டு
பாவாணர்கற்றோர்நற் பல்லியங்கள்சொல்முழங்க
நாவாணராதி நவத்தைப்புகழ்ந்தேற்ற
கூறுங்கருவியுடன் கொம்புதவில்முழங்க
ஏறுந்தவவேத மிசைக்கும்முனிவர்வந்து
தோற்றுநவமணிகள் சுற்றும்பதித்திலங்க
மாற்றேறப்பெற்றமணி மண்பொன்கலமதிலே
வாலக்குழந்தை வளரொளிகள்தானிலக்கக்
காலத்திலென்றுமுன்னக் கர்த்தன்றிருவருளால்
முன்னமவர்வங்கிஷத்தில் முந்துதிருநாமம்
என்னவியாக்கோபென் றிட்டார்களப்பொழுதே
தப்பாதவிந்நாமந் தான்சந்தியாகுவென
இப்புவியெங்கு மியல்பாய்வழங்கியதே

தொட்டிலேற்றல்.

விருத்தம்.

பத்தியால்மதியால்மெய்யால் பழகியசெபதேசின்ற
புத்திரனெனும்யாக்கோபைப் பொன்மணித்தொட்டிலேற்றி
சித்திரமணிப்பொன்தண்டை சிறந்தவாபரணமெல்லாம்
மெத்தவேபூட்டினரே மேதினிவிளங்கத்தானே. 16

அம்மானை.

மாசற்றநீதி வழங்குசெபதேயுமங்கை
பாசத்துடனீன்ற பைம்பொன்மணிப்பாலகனை
செங்கரத்திலேந்தித் திருப்பதத்தைமுத்திசெய்து
அங்கத்துடனணைத்து ஆகங்குளிர்ந்தவர்கள்
மாணிக்கக்காப்பு வயிரமணிச்சதங்கை
ஆணிப்பொன்தண்டை யரியமுத்திஞபரணம்
வச்சிரத்தினலரைஞாண் மாலைபணிப்பவளம்
உச்சிநின்றுகாலீறாய் ஊக்கமுடனணிந்து

பொற்றொட்டிலேற்றிப் போதவெடுத்தணைத்து
அற்புதனைத்தானோக்கி ஆராதனைபுரிந்து
பாராட்டிச்சீர்த்தி பழகுதவக்கன்னியர்கள்
தாராட்டிச்சீராட்டச் சம்மதித்தாரம்மானை

(தாராட்டு)

மாணிக்கச்செப்பே வயிரமணிவிளக்கே
ஆணிப்பொன்னென்ன அழகுசெறிபளிங்கே
மின்னாள்சலோமை விளங்குந்திருவயிற்றின்
பொன்னேயிரத்தினமே போற்றிசெறிபுத்திரனே
கொஞ்சுகிளிக்குழந்தாய் கோகிலமேகோமளமே
அஞ்சாதேபஞ்சணையில் ஆராமுதேபள்ளிகொள்ளாய்
ஆராரோதாராரோ வன்பனேபள்ளிகொள்ளாய்
சீரார்சலோமை திருமகனேபள்ளிகொள்ளாய்
தாயார்மிடிதீரத் தந்தைகளிகூர
தூயமுளையாகித் தொல்புவியில்வந்தீரோ
சூழிக்கிளைவழிக்குத் துங்கமணித்தீபமென
வாழுமிளங்குழந்தாய் வாழ்வாக்கவந்தீரோ
முன்னாட்சலோமையரும் முந்துசெபதேசும்
எண்ணாத்தவசுப்பண்ணி யீன்றெடுத்தபுத்திரனே
கண்டுயில்தல்போதுங் கரும்பேபசுங்கிளியே
பெண்கொடியாள்பெற்றநல்ல பேரின்பபாக்கியமே
ஓர்வார்த்தைசொல்லு முமைவளர்க்குந்தாதியர்க்கு
சீர்வாய்த்தசெல்லமிர்தத் தேனேயெனமடவார்
அன்பாகவாழ்த்தி அமிர்தமுறுகீதமொழி
பண்பாணதாதியர்கள் பாடினர்காணம்மானை

பாலியவிளையாட்டு.

விருத்தம்.

தெங்கொடுஅரம்பைதேமாச் செறிமலர்க்காவினுள்ளே
மாபாங்கொளிபரந்தசான்றோன் பொருவுபொற்புவனமீது
தங்கியவிளைஞரோடுந் தாயர்தந்தையரினோடு
மங்குயாக்கோபுதானு மகமகிழ்ந்திருந்தானன்றே.

அம்மானை.

வாசஞ்செறிந்த மலர்க்காவின்சோலையுள்ளே
வீசுமொளிபோல வித்தாரப்பாலகனார்
வெய்யிலினும்பிறந்த வெண்டாளமுத்தையொப்பாம்
துய்ய வன்னைதந்தையருஞ் சூழ்ந்துநிற்குந்தாதியரும்

கோதகலரோட்டிக் கோவலனைக்கையேந்தி
ஏதுங்குறைச்சலற்று இன்பம்மிகவாகிக்
கண்டோர்விரும்பக் களிகூரக்கண்களிக்கக்
கொண்டாடிப்பாடிக் குலாவிவளர்த்தனர்காண்
ஓரேழுமெட்டு மொழுக்ககதிர்மும்மூன்றும்
பார்மீதுபாதம் பரிவாய்மறைந்ததற்பின்
மஞ்சத்திருவழகன் மாணிக்கப்பொன்மதலை
கஞ்சத்திருகரத்தாற் கண்ணைப்பிசைந்தழுது
தாயார்முலைதேடித் தாபமுறத்தத்தளித்து
வாயால்நெருடி வளர்முலையின்பாலருந்தி
அப்பாவெனமொழிந்து அன்னைதனையறிந்து
சப்பாணிகொட்டித் தவழ்ந்துநடையயின்று
வாசக்குலமடவார் மைந்தருடன்கூடி
ஓசைத்தெருநீள மோடிவிளையாடினராம்
வாலக்குழந்தை வளரிளைஞர்தங்களுடன்
கோலப்புழுதி குளித்துவிளையாடினராம்
மங்கைசலோமைபெற்ற மகன்சிறுபாலருடன்
செங்கையுறவணைத்துச் சேர்ந்துவிளையாடினராம்
செப்பரியவண்மைச் சிறுதோழமார்களுடன்
அப்பரிசாய்க்கூடி யமர்ந்துவிளையாடினராம்

கலைபயிலல்.

விருத்தம்.

பொன்மணிக்கிரணநீதி பொருந்தியசெபதேசென்போன்
மின்மணிக்கருவாயீன்ற மிக்கவன்யாக்கோபென்பான்
பன்மணிக்குழவியாகிப் பழகியசிறுவரோடு
இம்மையிற்கலைகள்கற்று இன்புறவிருந்தானன்றே.

அம்மானை.

மின்னுங்கிரணமெனும் மெய்த்தவத்தோர்தன்குலத்தோன்
என்னுஞ்செபதேசு ஈன்றெடுத்தபாலகனார்
பொன்னின்மணிபோலிலங்கும் போந்தசிறுத்தோழருடன்
இன்னுஞ்சிலவாண்டு இன்பம்மிகவாகி
ஓடிக்குலாவி ஒளித்துவிளையாடித்
தேடியமுதருந்திச் செல்வத்துடனிருந்து
சிற்றோடம்நல்ல சிறுகம்பமாலாத்து
வைத்தோடம்பாங்கி வகுத்துக்கடலில்விட்டு

ஓடுஞ்சிறுவருக்க ளொன்றேடேயொன்றிறுக்கிக்
கூட்டிக்குலாவிக் குளித்துவிளையாடி
அம்பாவுஞ்சொல்லி அடைவாய்ச்சலாங்கூறிச்
செம்பவளமொத்தமணிச் சின்னஇளைஞருடன்
அன்புமிகவாகி யலையதனில்நீர்குளித்து
இன்பக்கலிலேநக ரென்னுங்கடற்கரையில்
தங்கள்கிளைவழியுந் தாய்தமருங்கொண்டாட
அங்கவர்கள்மாளிகையி லானந்தமாயிருந்தார்
ஒன்றிரண்டுமூன்று யொருநாலாயைந்தாறுய்ச்
சென்றதுவேழெட்டுத் திருவயது அம்மானை
ஈர்மூன்றுமாண்டுதொட்டு இதற்கடுத்தஆண்டுகளு
பார்மீதுநன்றுய்ப் படித்தனர்காணம்மானை

தொழில்பயிலல்.

விருத்தம்.

அன்புள்ளானொழுக்கமுள்ளா னழகுள்ளானறிவுமுள்ளான்
நன்புள்ளானுண்மையுள்ளா னல்கியவிடலைநீங்கப்
பின்புள்ளான்பிறவியோடும் பெற்றதாய்தந்தையோடும்
இன்புள்ளான்றொழில்கள்செய்த வியல்வகையினிதுகேளீர், 19

அம்மானை.

சித்திரவித்தாரச் செழுந்தரளந்தன்னையொத்த
முத்திச்சலோமைபெற்ற முன்னவனும்யாக்கோபு
நண்புமறையொழுக்கம் நல்லமைச்சலானபுத்தி
பண்புமிகப்பொருந்திப் பாரிலிளைஞருடன்
செய்யும்விளையாட்டுச் சிட்டறவேதான்மறந்து
வைமீதிலன்னையர்க்கும் வாகானதந்தையர்க்கும்
ஏவல்மிகப்புரிந்து ஏற்றங்கிராதபடி
காவலுறுதந்தைதமர் கற்றபிறவியுடன்
பாரப்பெருவலையும் பண்பார்மணிவலையும்
நேரத்தொழில்வலையும் நீள்சாலமானதுடன்
கூனிவலைதேறைவலை கொண்டோடிவீசுவலை
ஆனசிறுதூண்டி யத்தாங்குவாருபறி
தோணியுடன்பாதை சொல்லடங்காக்கொம்புமரம்
மானமுள்ளோர்தாமே வருந்திமில்மேற்கொண்டேகி
வன்மகரம்பாரை வருசுறுவஞ்சுரங்கள்
பன்மணலைகட்டாப் படித்தனர்காணம்மானை

செம்பாரையல்லன் செவிடன்கருங்கண்ணியும்
கும்பிளாக்கூரல் கொடுவாய்படுத்தனராம்
கீளிகிளாக்கன் கிளிமீன்வரியோரா
வாளைமடந்தை வரியுழுவைதான்படுத்தார்
துள்ளுங்குழுமுரலுந் தும்மைவன்னக்கத்தலையும்
தெள்ளுங்கெளிறு சிறையாய்படுத்தனராம்
மண்ணுக்குதிப்பு வடிவார்சிறுகரந்தன்
எண்ணுக்கெழுத்த வியல்பாய்ப்படுத்தனராம்
வெளவால்வலையன் வரிக்கீழியூடகங்கள்
செவ்வைத்திரளி சிறுமீன்படுத்தனராம்
சிலாச்சிலுப்பாச் சிறுசுரும்புகாரலுடன்
பாலைகணவாய் படுத்தனர்காணம்மானை
வெள்ளியாச்சூடை விளைமீன்பிறையனுடன்
கள்ளத்திரியாக் கலவாய்படுத்தனராம்
நெய்த்தோலிசுங்கன் நெடுங்கெண்டைவாவலுடன்
மெத்துங்கலவாய் மிகப்படுத்தாரம்மானை
வெள்ளிறுல்கூனி விளங்குதிருக்கையுடன்
உள்ளமீனெல்லா மொழுங்காய்ப்படுத்தனராம்
கத்திக்குமிறிக் கதறுங்கருங்கடலில்
வர்த்தித்துவாழும் மயிலைதினம்படுத்துத்
தந்தைதமர்தாயார் தக்கோருறவருடன்
சிந்தைபொருந்திச் சிறந்திருந்தாரம்மானை

திவ்வியஇரட்சகர் அழைத்தல்?

விருத்தம்.

ஆதியிறைவனபரமோடஇலமானதுவுமாளிறைவனுனமுதல்வோன்
மேதினியிலோர்வடிவமாகமரியாளுதவமேவிமனுவாகவருவோன்
ஓதுநெறியானதிருவேதமதெலாமறியவோர்நெறியிலாசமனுவோர்
நீதியுறைவனதிருநாவவைகள்தூவலெனநீணிலமீதேயெழுதுவோர்.

அறைஞானிமத்தேசுநெறியோனுலுக்கேசுவறிவாலுரைத்தபடியே
பொறைஞானமுற்றவொருசெபதேசுபெற்றவிருபுதல்வோருமக்கலி
லையில்
(யில்
உறைநீர்பெருத்ததிரையதிலேதொடுத்தவர்கள்வலையவளைத்திடுகை
மறைஞானநித்யசுதன்மகிழ்வாயழைத்தபடிவருஞானசுத்தரிவரே. 21

நிதியோடுசுத்தமுளதமர்தாயரத்தனையுநினையாமலெப்பொருள்களும்
மதியோடுவிட்டவர்கள்பரமானசத்யநிறைசெயஞானகர்த்தர்பிறகே
கெதிதேடிமற்றவர்களதிநேசபத்தியொடிளர்வானமுத்தியடைய
மதியோடுபுத்தியுளநெறியோடுசுத்தமிகமகிழ்வாகியுற்றனர்களே. 22

அம்மானை.

வற்றாக்கிருபை வளருந்திருப்பொருளின்
உற்றகணக்கரென்னும் ஓதரியஞானமுள்ள
மத்தேயுலூக்கேசு மாற்குவுஞ்சொன்னபடி
வித்தாரமாங்கலிலே மேவுங்கடற்கரையில்
துங்கசெபதேசுந் துய்யவிருபுத்திரரும்
அங்கவர்கள்கூடி அரியவலைவீசுகையில்
முத்திச்சுவானியையும் முன்னவன்சந்தியாகுவையும்
இத்தரையிலென்கூட வின்பமுடன்வாருமென்று
கத்தரிரிம்பக் களிகூர்ந்திருபேரும்
அத்தனுடன்தாயா ராளடிமைதோணிதுரம்
பொன்பணதியுண்டான பூதலத்தில்வாழ்வைவிட்டுத்
தன்பிறப்பும்யாக்கோபுந் தற்பரன்பின்போயினராம்
ஆறிருவர்வங்கிஷத்தில் அன்னைமரிக்கிளைய
கூறுஞ்சலோமை குலக்கொடியாள்புத்திரர்கள்
விண்ணுடர்மண்ணுடர் வேண்டுந்திருப்பொருட்கு
மண்மேலுறவாய் வளர்நேசத்தோடிருந்த
காரணத்திலேசிறிது கற்றவர்கள்சொன்னபடி
பூரணமாயிப்போது போதிக்கக்கேட்டருளீர்
முத்திவழிபார்த்திருந்த முன்னோனெனுஞ்சிமியோன்
அத்தந்தனிலிருந்த ஆனந்தநீதிசுதன்
நேசம்மிகப்பொருந்தி நீள்சலோமைமைந்தருக்கும்
வாசமுளமற்றோர்க்கும் மைந்தரென்றுபேருமிட்டு
யூதசனங்கூடு முவந்தசபைதனக்கு
ஏதமில்லாமூப்பாயுற் றீராறுபுத்திரர்க்கு
ஆவிகொடுப்பதுவும் அற்புதங்கள்செய்ததுவும்
தாவுந்திருமலையிற் * தன்சரீரம்மோக்கிஷத்தில்
தேவனிவரெனவே சித்தமுடன்தோற்றியதும்
மேவுமிகுநேசமுடன மெத்தமெத்தக்கண்டதினால்
மன்னுந்தவத்தி மரியசலோமையென்பாள்
தன்னுடையபுத்திரன்மேற் றயாரும்நேசமுற்று
வேசரியும்மாடும் விழிதுயிலக்காத்திருந்த
ஆசரியனிவ்வுலகை ஆளுவானென்றதினால்
பொன்னார்தொழுதிறைஞ்சப் பூரிப்போன்சன்னிதியில்
மின்னாளகமொடுக்கி மெத்தக்களிகூர்ந்து
முட்டிட்டுவாய்புதைத்து முந்துங்கரங்குவித்து
இட்டம்மிகப்புரிந்து என்சொல்வாளம்மானை

---

* விசுவரூபம்.

திவ்விய இரட்சகரின் சேஷனுதல்.

விருத்தம்.

மாதுயரொடேயுறுமென்காதலனினடியாளின்மாமிடிமைதீரமறையோன்
பூதலமீதேயருளுபேறலர்களாமெமதுபோதமுறுமீர்புதல்வரும்
ஓதுமதுதேசமதிற்றேவரீர்பாகமுறஒண்பெருமையாகவுதவி
பாதுசெயவேணுமெளியாளுமதுபாதமலர்பரவுபுகழ்நாளுமுளதே 23

ஈதுமொழிமாதுசொலவாதிமொழிவாரெனதுவானகரமீதலமினே
கோதறமெய்ஞ்ஞானவுண்மைவானவர்களேயுறைய கோமளமதானவிண்
பூதலமெலாமகிழவேதமறுவேதனதுபூரணச்சமுகமருவி [ணிலே
ஏதமறவேயுறைவாரமெனவேயிறையவனுமீதைதிறைவாயுரைசெய்தார் 24

அம்மானை.

தீட்டுங்கிரணமெனச் செங்கோல்திருமுடியும்
சூட்டியரசாண்ட துங்கன்றவிதுகுலப்
பாக்கியமேயெங்கள் பவமறுக்கவந்தோனே
தாய்க்கும்பிதாவான தற்பரனேசற்குருவே
வேதபரனேயென் விண்ணப்பங்கேட்டருள்வாய்
ஆதரவாய்நானீன்ற அன்புடையபுத்திரரை
ஓச்சுந்திருக்கோ லுனதுடையராச்சியத்தில்
ஆச்சரியமாயுன் னருகிருக்கச்செய்யுமென்றாள்
மங்கையுரைக்க மனுமகனுமென்சொல்லுவார்
இங்கரசாளு மிடமல்லவென்னகரம்
பொங்குமென்றந்தையினாற் புவியிற்றெரிந்துகொண்ட
சங்கையுள்ளபேர்கள் தானென்னருகதனில்
காணரியமோக்கிஷத்திற் காரணன்றன்சன்னிதியில்
வானவர்கள்கூட மகிழ்ந்திருப்பாருண்மையென்றார்
ஆனவிதுவன்றி அற்புதனுஞ்சீஷர்களும்
மானிலத்தின்மீதே மகிழ்ந்திருக்கும்வேளையிலே
சம்மாரியரெனச்சொல் தார்க்கங்களுள்ளவர்கள்
எம்மிறைவன்புத்திரர்க்கு ஈங்கிஷைகள்செய்ததினால்
வானமுய்க்குமைந்தனென்ற வண்மைதவறாமல்
ஆனகர்த்தன்முன்பணிந்து அன்பார்சலோமைமைந்தர்
ஐயாசுவாமி யகந்தைமிகுந்தவஞ்சப்
பொய்யாஞ்சமாரியென்ற புன்னகருளோரையெலாம்
அந்தரத்திலேயிருக்கும் அக்கினியைத்தானழைத்து
சிந்துகனல்தூவித் தீயாயெரித்துவிட
வேணுமெனப்பணிந்து விண்ணப்பஞ்செய்யலுற்றார்
தானுவோர்சொல்லச் சருவேஸ்பரன்கிறீஸ்து

உங்கள்முனிவுக் குபயமேதென் றறியீர்
இங்குமக்குமிக்க விடறுசெய்தபேர்களுக்குத்
தங்குநன்மைசெய்வதுவே தாரணியில்நீதமென்று
எங்குமிருப்போ னியம்பினாரம்மானை
இப்பாற்பரன்றனது ஈராறுசீடருடன்
தப்பாதநீதந் தழைக்குஞ்செருசலேயில்
செப்பரியவாலயத்திற் செட்டுச்செய்செட்டிகளை
அப்போதினிற்றுரத்தி யழகியவெத்தானியவில்
பாடத்தாள்தன்மனையில் வந்துஇளைப்பாறி
நாடியபெத்பாகூரில் நல்லஒலிவேற்றருகில்
வந்துவிடுதிவிட்டு வானவரும்புத்திரரும்
தந்தைதிருச்சுதனார் தன்னுடையப்போஸ்தலரில்
துய்யசந்தியோகுவையும் சுத்தன்யுவானியையும்
வையந்தனிலுருவாய் வந்தோனருகழைத்து
நீங்களிருபேரும் நேசத்துடனேகி
ஓங்குமுமக்கெதிரே உற்றிலங்கும்பட்டணத்தில்
கட்டியிருக்குங் கழுதையையுங்குட்டியையும்
இட்டமுடன்கட்டவிழ்த்து இங்கோடிவாருமென்றார்

இரட்சகரின் தொண்டுபுரிதல்.

விருத்தம்.

தாரணியிலேயதமோடேவைபுரிபாவமது தானறமண்மீதுவடிவாய்க்
காரணமெய்ஞ்ஞானபரிபூரணன்சொல்வாய்மொழிகள் காரியமோடேயிரு
(பேரும்
ஊராணுகுமாநகரமானதினிலேயதிகவோர்மமுடனேர்நொடியிலே
சீரணியவேபுகுதியீர்குருவைகொண்டதிநதீபுரமோர்டோடிவரவே 25

ஏகபாளுருமிகவேமகிழ்வதாகிவளரேதமறுசீஷருடனே
ஆகமுறவேறுநீசவாகனமோடேசெருசலானநகர்மீதெதிர்செல
வாகுடையரானசிறுபாலகர்கள்மாதவர்கள்மாநகரில்வாழ்பவரெலாம்
தாகமுறவோதுமொழியாசரியநீதிபரதாகிருபைநாம்கிறையவே 26

அம்மானை

அத்தனுரைக்க அவர்கள்விரைந்துசென்று
கர்த்தபமுங்குட்டியொன்றுங் காரணன்முன்கொண்டுவந்தார்
அங்கத்தணி தசட்டை யானவைகளைக்கழற்றித்
தங்குமிறையவர்க்குத் தான்சேணமுண்டாக்கி
ஏகன்றனையதன்மே லேற்றமனுமகனும்
தாகமுடனே சகலருங்கண்டுதொழ

நீசமுள்ளவாகனத்தில் நேசமுடன்வீதிவிட்டு
ஈாசச்செருசல் நகரத்தெருவூடே
வாறதுகண்டு மனுமகனைமாநகரிற்
கூறுமினைஞருடன் கொள்கையுள்ளபேர்களெல்லாம்
மங்களங்கள்சோபனங்கள் வாழ்த்திப்புகழ்ந்தேத்தி
அங்கவர்கள்சூழ்ந்து அரசேயெனப்பணிந்து
சங்கைசெய்தாரேகன் றனதுதிருவுளமாம்
துங்கத்திருநாட் சருதிமுறைப்படிக்கு
ஆண்டவருமங்கவரி னப்போஸ்தலமாரும்
மீண்டுவந்துபுத்திரர்க்கு விருந்துகொடுக்கவெண்ணித்
துய்யதவப்புனிதன் சுத்தசந்தியாகுதனைச்
செய்யமிர்தபோசனங்கள் தேடுமெனப்போகவிட்டார்
ஆதியுரைத்தபடி அன்பர்களுந்தீயோரும்
நீதியுடனேகி நீள்விருந்துக்கெத்தனித்தார்
தேடியதினங்கே திருப்பொருளுஞ்சீஷர்களுங்
கூடியமுதருந்திக் கொஸ்தந்தீனுகடந்து
நந்தாவனத்தில் நடுவேயொருபுறத்தில்
சுந்தரவிண்ணேக்கித் தூயமனுமகனும்
தந்தநகர்க்காகத் தான்தவசுபண்ணுகையில்
அந்தஇரவி லரியவிழிமுளித்துச்
சந்தியாகுதானிருந்து தற்பரனார்தனக்கு
வந்தவுபத்திரியம் மனவிதனமானதெல்லாம்
கண்டுமனஞ்சலித்துக் கர்த்தர்பிடிபட்டதினால்
உண்டானசீஷரெல்லாம் ஓடிஒளிக்கையிலே
தானும்மறைந்திருந்து தக்ககலிலேயவிலே
வாசினன்திருக்கணக்கன் மாற்குவுடைமாளிகையில்
சென்றிருந்தாரெல்லோருந் தேவனிறந்துயிர்த்து
வென்றியுடன்தோற்றி விண்பதிக்குச்சென்றபின்னர்
ஏகபொருளான விஸ்பிரீத்துச்சாந்திறைவன்
வாகொத்தபுத்திரர்மேல் வந்திருக்கும்வேளையிலே
அன்னைமரியுடனும் அப்போஸ்தலருடனும்
மன்னுசந்தியாகும் மகிழ்ந்திருந்தாரம்மானை

வேதம்போதுவித்தல்.

விருத்தம்

ஆனமுனியபிராமுமமருதலமதில்வாழுமருள்சேருநரர்யாவரும்
வானமதிலேயடையவேணுமெனவேயிறைவன்மாமனதிலேயுணர்ந்து
ஈனமொடுபொடுமிகவேதுயராதாகவுற்றேகபாளுருமுயிரைத்
தானமுறவேவிடுவெதாகியபின்னுதிபா [illegible] 27

மாதவமெய்ஞ்ஞானகன்னிமாமதலைவானமதில்வாகுடனேயேகியபினே
நீதசெபதேசுதருவாசரியசந்தியாகுநித்தியன்நற்கிருபையால்
கோதறுநல்வேதமதையோதநிலமீதுவினைகூடுகொலைபாவமகலப்
போதநெறியானவெஸ்பாஞநகரானதிற்போவரவர்தாமுமுதலே 28

அம்மானை

முன்னோர்துயர்நீக்கி முத்திவழிதிறந்து
அன்னாட்டிருவருளா லாசரியபூசுரர்கள்
தானெழுதிவைத்தபடி தாரணியிற்கன்னிமகன்
வானமதிற்றந்தை வலப்பாகஞ்சேர்ந்ததற்பின்
உற்றசலோமைபெற்ற ஓதரியயாக்கோபு
வற்றாதநீதி வளர்வேதமானதுவை
மண்ணோர்தமக்குரைத்து மானிடர்களானவரை
விண்ணேற்றவேண்டுமென்று மெத்தவிருப்பமுற்று
வேதந்தனையுரைத்தார் மிக்கவருத்தமுற்று
ஓதும்வெகுமான முற்றவெஸ்பாஞவிலும்
நாமஞ்செருசலெனும் நாடுநகரானதிலும்
தாமச்சமாரியென்ற தக்கநகர்தனிலும்
மண்டலமீது மகிமையுள்ளயாக்கோபு
உண்டானவேத முரைத்தார்காணம்மானை
சுத்தசந்தியாகுவந்து தூயநகரியெங்கும்
புத்தியறிவுதினம் போதமுறவுரைத்து
உண்டியுறக்கமற்று ஓயாதிரவுபகல்
எண்டிசையுமீடேற்ற இவ்வேதஞ்சொன்னாலும்
மாசற்றவேதமதில் வந்தபேரொன்பதென்று
ஆசற்றசுத்தர்கள்தான் அந்நாளெழுதிவைத்தார்
மும்மூன்றுசீஷர்களும் முத்தனெனும்யாக்கோபும்
தம்மிற்சாகோன்நகரி தன்னிலிருக்கையிலே
வன்னக்கருங்குயிலும் வண்டுகனக்கிளையும்
மின்னிப்பரந்திலங்கும் மெத்துமலர்க்காவருகில்
சங்குநவமணியுந் தக்கபலமீனினமும்
பொங்குகலிலையெனும் போந்தநதிக்கரையில்
துய்யகரங்குவித்துச் சோதிதனைநோக்கிச்
செய்யசலோமைமகன் செபம்புரிந்தாரம்மானை

தேவமாதாவின் தரிசனமும் எரிமோசு பிலேத்துவை யனுப்பலும்.

விருத்தம்,

கோகுலமோடேயமிர்தகீதமொழிபேசுகிளிகூடுவனவாசமதரு
ளாவலமானபுரியோடுதொளக்குலைகளானமணிநீடிநிரையாய்

005236

வாகுறுநதிக்கரையின்மீதிலொருபோதிருளில்வானவனேயானசெபமோ
டாகுலமிலாதசந்தியாகுவொடுசீஷர்களுமாதரவோடோதினர்மனே. 22

பொறைநீதிபுவியிலொருவடிவாகிமடிவானபுலைபேய்கள்கொடுநோகுற
இறையாதிதருஞானமுறைவாகிநிறைவாகிஒருபோதுங்குறையாதுயர்
தரைமீதிலுயிரோடுநரைசேர்நற்றவசோடுதருபாகமிகநேசமாய் (னுள்
துறைமீதிலொளிவீசவொருதூணிலொருகோடிசுடர்போலவேதோன்றி

அஞ்சுவர்னமொத்தழகுகம்பமதிலேமரியவம்பரமுறும்பர்சூழச்
செஞ்சொல்மொழியொத்திலகுகொஞ்சமிர்தவோசையொடுசேணுடர்கீத
மொழியக்
கஞ்சமுதமொத்ததவநெஞ்சுமிகவுற்றுநெறிகண்டுகளிகொண்டகனியைத்
தஞ்சமுளபித்தியொடுஅஞ்சல்புரியுத்தமர்கள்தங்கினர்கள்சித்தமுறவே.

அம்மானை.

மானிலத்தோர்வாழ்வாய் மலரிற்சிறந்திலங்கும்
ஆனாதிகன்னியெனு மானந்தத்தாயாரும்
விண்ணிற்றமதுமகன் மெய்ப்பாகஞ்சேருமுதல்
மண்ணிலுயிருடனே மங்காமணிமுடியாள்
ஆற்றங்கரையருகில் அஞ்சுவர்ணக்கற்றூணில்
ஏற்றகதிராயிரம்போ லெங்குமொளிசிறக்க
எண்ணடங்காக்கோடி யெனவாஞ்சுமார்சூழ
பண்ணெழுங்காய்க்கீதமதாற் பல்லோர்புகழ்ந்தேத்தக்
கார்மேகமொத்தவிருட் கங்குல்பகலாக
ஆர்லோகமுற்றுவந்த ஆனந்தக்கன்னியர்கள்
எல்லாருஞ்சூழ இராசகுலக்கன்னியென்னுஞ்
சொல்லாலரியகன்னி தோற்றினாளம்மானை
வாசச்சலோமைபெற்ற மைந்தனெனும்யாக்கோபு
பாசத்தோனென்மகன்றான் பன்னிரண்டுசீஷரிலும்
நேசத்தைவைத்தெனக்கு நித்தியமுமேற்றவனே
தேசத்தோரெல்லோருந் தினமுமெனைநினைக்கப்
பொற்கிரணத்தூணடியிற் புண்ணியனேயென்றனக்கோர்
நற்கிரணவாலயத்தை நாடிச்சமையுமென்று
தாயாருரைக்கத் தவத்தோனும்சீஷர்களும்
காயாகமோதக் களிகூரக்கண்களிக்க
வாயாரவாழ்த்தி மகிழ்ந்துமிகத்தெண்டனிட்டு
ஆசாரம்பண்ணி யடிபணிந்துதாயார்க்கு
பொன்னுடர்போற்றப் பூதலத்தோர்கொண்டாட
அன்னாள்திருமரிக்கோ ராலயத்தையுண்டாக்கிக்
கற்றூணில்வந்தவக் கன்னிமரிகோயிலென
முற்கூறுநாமமந்த முத்தனுரைத்ததுபோல்

அன்னாட்சமைத்தபடி ஆற்றங்கரையதனில்
இன்னாளுமங்கே யிருக்குதுகாணம்மானை
விண்டலத்தும்மண்டலத்தும் மெய்ப்பொருளாய்வீற்றிருப்போன்
தொண்டனியாக்கோபுஞ் சுத்தமற்றச்சீஷருமாய்
அங்கேசிலகாலம் அன்பாயவதரித்துத்
துங்கவிசுப்பான சுத்தனின்னாசியையும்
தீதில்லாநற்குருவாய்த் திகழுமொருவரையும்
ஓதருசாகோ னாறுநகரில்விட்டுவைத்து
வாகுடையரேழுதுய்ய மாணாக்கர்களுடனே
ஏகினார்பின்னு மியல்பாஞ்செருசலைக்கு
அங்கேகியாக்கோபு ஆதிதிருவருளாற்
பொங்குந்திருவேதம் போதிக்குநாளையிலே
மூவுலகையும்படைத்து முன்னாட்டொபியசுக்கு
ஏவல்புரிய இறப்பியேலென்றுஞ்சை
மண்மேல்வாவிடுத்த வானோன்றிருச்சுதனை
எண்ணாத்துயரும் இடறும்விளைத்தவஞ்ச
யூதர்குலத்தோர் ஒழியாதகோடிவினைப்
பாதகர்கூடிப் பகருமியாக்கோபை
நிந்தனையும்வீணாய் நிகழ்த்தியருள்வேதஞ்
சிந்தைதனிலெண்ணாமற் செய்ததுகேளம்மானை
பொல்லாதார்சொல்லப் புலையனெரிமோசு
நல்லதெனநகைத்து நான்வேணுமோவிதற்கு
வல்லபத்தோனென்சீஷன் வாகாம்பிலேத்தைவிட்டு
ஒல்லைப்பொழுதினிலே ஓட்டிவிடேனாகில்
விண்ணின்கதிர்விளங்கும் மேதினியிலேயினிமேற்
பண்ணுங்கபடவித்தை பாவியேனென்றுசொல்லித்
தன்சீஷனாயிருக்குந் தக்கபிலேத்தென்பவனை
நன்சீஷனென்று நகர்கலிலேயானிடத்தே
போகவிட்டான்பொல்லாப் புலையனெரிமோசுவென்போன்
ஆகமிசப்பயந்து அச்சமுஞ்சந்தொஷமுமாய்
ஏகன்திருச்சீஷன் ஏற்றசந்தியாகுதன்னை
வாகாம்பிலாத்துவென்போன் வந்துகண்டானம்மானை

பிலேத்து மனத்தெளிவுறல்.

விருத்தம்.

பொங்கெரிநாகது தங்கியமயல்விடு பொய்க்கபடக்கலையான்
மங்கியமாவினை தங்கியபாவிகள் வரவிடுதூதனவன்
எங்கணுமேயொரு சங்கையொடரசுசெ யிறையவன்சீஷனொடு
இங்கினியோதுவை தீதறுமாமறை யேதெனவேமொழிவான். 32

மாகொடியோனவன் வாவிடுதூதனு வாய்மையியம்பிடவும்
கோகுலநாலொடு சூழ்கடலுலகிற் குலமரிதருமதலை
ஏகினநாளிது போதியமாமறை யேயொடுதேர்வானால்
வாகுளவானிடை சேருவராமென மாதவனோதினனே. 33

மரியசலோமை யளித்திடுபுத்திரன் வந்தவனேயறிய
உரியநல்வேத முரைக்குமறுத்தவ னோர்மொழியோதிடவே
யரிதரிதெனவிணி லாருமடைந்திடு மற்புதமென்றெண்ணி
எரிநரகெய்திட வின்புறுதன்குரு விணையடியெய்தினனே. 34

அம்மானை.

சூழ்கடலும்மேதினியுந் துலங்குமுலகனைத்தும்
ஆள்பவன்றன்சீஷன் அரியசந்தியாகுவிடம்
வந்துபிலேத்துவென்போன் வாய்திறந்தங்கென்சொல்லுவான்
எந்தன்குருவுமென்னை இங்கேவரவிடுத்தான்
வேதத்தொழுங்கை விளம்பியிருபேரும்
போதகத்தால்வெல்லும் புதுமையறிந்திடலாம்
என்றுபிலேத்துரைக்க ஏற்றசந்தியாகுவுந்தான்
நன்றுன்தெய்வச்சீர் நவிலென்றாரம்மானை
அப்போபிலேத்துவுந்தான் அஞ்ஞானத்தங்கள்தெய்வம்
இப்பரிசென்று இயம்பினதுமல்லாமல்
நாரணனும்நான்முகனும் நல்லவுருத்திரனும்
பேர்மூன்றுந்தெய்வமெனப் பேசுவாரோர்சாரார்
மாலுந்திவந்து மகள்மாறொடுபுணர்ந்தோன்
ஆலிலையிற்பள்ளிகொளவோன் ஆட்டிடையனாமிவர்கள்
மாயனழிப்பான்மான் மைந்தனதைப்படைப்பான்
ஈசனதைக்காப்பா னென்றுசொல்வாரங்கவர்கள்
செத்தாரினோடேந்தித் தின்றுஅரவணிந்து
பித்தனெனவெவரும் பேசப்பேயோடாடி
மானைக்கரத்தேந்தி மானார்தமைச்சுமந்து
ஆனைமுகமோர்புதல்வன் ஆறுமுகமோர்புதல்வன்
ஆகப்பயின்று அடலைதனைப்பூசி
வாகெனவேசடைகள் மருமமதிலசையக்
காலிற்சிலம்பலம்பக் கனநடனந்தானாடி
வாலத்துரோணன் மனைவிதனக்காசையுற்று
மாயமுறுசூரனுக்கு வரமளித்துஐவேலிக்
காயினுக்குள்ளே கரந்தொழித்திருந்து
மைத்துனன்விட்டுணுவின் மாமோகினிவேடம்
மெத்தியஆசை விளைக்கவணைந்தவனும்

ஒள்ளியஇந்த உருத்திரனுக்கானபெண்ணை
தள்ளிப்பிரமா தனக்காக்கப்பார்த்தானும்
தங்களிலேசண்டைபண்ணிச் சங்கரனும்நாரதனும்
அங்கையில்வாளேந்தி ஆளுக்காள்வெட்டினராம்
முக்கண்ணுடையோன் முகமைந்துதாமுடையோன்
வெட்கங்களின்றியன்று மேதையர்க்குத்தூதுசென்றோன்
ஆனதுரோண னருமனைவிக்காசையுற்றுத்
தானேஉடுப்பிழந்து சங்கடப்பட்டனராம்
மாயன்பலபடைப்பாய் மண்ணிற்பிறந்தானும்
பாயாய்ச்சமுத்திரத்திற் படுத்துக்கிடந்தானும்
பன்றியாய்மீனாய்ப் பலவுருவந்தானெடுத்த
தன்றியும்பெண்கள்பதி னாறாயிரப்பேரைச்
சேரப்புரிந்த திருவிளையாட்டென்றுசொல்லி
ஊருக்குமெங்களுக்கு மோதினார்எங்கள்குரு
எங்கள்தெய்வங்களுமவ் வினத்திலேசேர்ந்ததுதான்
உங்கள்திருவேத மோதென்றானம்மானை
நாணமில்லாச்சீஷன் நவிலும்பிலேத்துரைக்கத்
தாண்மையுடன்யாக்கோபு சாற்றுவதைக்கேட்டருளீர்
மண்ணுங்கனவரையும் மாகடலும்மாசறுநல்
விண்ணும்படைத்து விளங்கவொருபொருளாய்
தானுயிருக்குஞ் சருவேஸ்பரன்பெருமை
நானுவிதத்துடையோர் நாவினாற்சொல்லரிது
ஒன்றாய்த்திரித்துவமாய் ஓயாதொருநாளும்
நின்றான்பரன்கொலுவில் நீதித்திருவுளத்தால்
அன்றேயொருபடைப்பு ஆஞ்சுகளென்றுசொல்லி
என்றுமுள்ளோன்செய்தா னிவற்றிற்சிலபேர்கள்
ஆதிதனக்கிணங்கா ஆகாமைசெய்ததினாற்
சோதிக்கிரணபரன் சூழ்நரகிற்றள்ளிவிட்டார்
வன்னரகிற்றள்ளிவிட்ட வஞ்சகப்பேய்க்கணங்கள்
இந்நிலமேலுங்கடனை ஏய்க்கிறார்கண்டாயோ
ஆருங்கரைகாணா அற்புதனார்தன்வார்த்தை
பாருள்மனுவாகிப் பாக்கியத்தையீந்ததற்பின்
ஆனதுயரடைந்த அஞ்ஞானப்பேய்தானே
மானிடரில்முன்னோனை வந்துமயக்கினதால்
நல்லவரமும்வாழ்வும் நடுநீதியுமிழந்து
பல்லுயிரும்மண்ணிற் பதறினாரம்மானை
காத்தசிறையைக் கடைபோகக்காக்கவென்று
பார்த்திபர்தங்குலத்திற் பத்திமரிதன்சுதனாய்

வந்தாரிறைவன் மனுக்கோலங்கொண்டுலகில்
நந்தாதியேவையதம் நாணமறச்செய்தபிழை
தீரக்கிறீஸ்இறைவன் தீர்க்கதரிசியர்கள்
பாருலகமீதிற் பரிந்தேயுரைத்தபடி
ஆறிரண்டுபேரோ டவனிகதியடையப்
பேறுதந்தோன்வஞ்சம் பெருகியூதர்கையாற்
அஞ்சினார்மூன்றாநாட் சோதியுடனுயிர்த்தார்
தஞ்சமுள்ளவிண்ணேகித் தந்தைவலத்தானார்
இன்னமும்லோக மிடராலழியுமந்நாள்
மன்னன்கிறீஸ்து வருவார்நடுத்தீர்க்க
அப்போதறிவோங்கா ஞனநன்மைதீமைகளை
இப்போதியானுரைக்கு மிவ்வார்த்தைகேளாதார்
ஓயாநரகி லொருநாளொழியாமல்
மாயாமல்வெந்து மறுகித்தவிப்பார்கள்
ஆதிதிருவேத மாதரவுற்றெதெரிந்தாற்
சோதித்திருவானிற் றுங்கமுடிசூடி
ஊழியேயுள்ளளவு மோயாதகமலர்ந்து
வாழுவாரென்றுசொன்னார் வண்மையுள்ளசந்தியாகு
பொன்னம்பரத்திருக்கும் புண்ணியன்றன்சீஷனுரை
தன்னையேயுண்மையெனத் தக்கபிலேத்துநம்பிச்
சந்தோஷமுற்றுத் தவத்தோனடிபணிந்து
எந்தையுமென்குருவும் இப்புவியில்நீர்தானே
முந்தளனைவிடுத்த மோசவித்தைக்காரனிடம்
இந்தமொழியுரைத்து இன்னமும்நானிங்குவரத்
தாரும்விடையெனவே தக்கோன்கொடுத்திடலும்
பேரும்பிலேத்து பிரியமுடனேமீண்டு
தன்னைப்பயிற்றுகுரு தக்களரிமோசுமுன்போய்ச்
சொன்னானெழுங்குடனே தூயோன்முறைமையெல்லாம்
மாயவெரிமோசவ் வார்த்தைதனைக்கேட்டவுடன்
காயமிகப்புழுங்கிக் கண்சிவந்தங்கென்னசொல்வான்
ஆமோடாநீயு மவன்வார்த்தைகேட்டாயோ
போமூடாவிணையுன் புன்மைபறியேனோ
வட்டக்கடல்சூழ்ந்த மாநிலத்தில்மாந்தர்கள்முன்
கட்டிவைப்பேனுன்னையென்று கற்றவன்தன்வித்தையினாற்
சேர்த்தான்பிலேத்துவுடை செய்யகரமிரண்டும்
பார்த்தான்சிரித்தான் பகட்டிமிகவிழித்தான்
யாக்கோபுவந்துனக்கு எய்தும்வினையதனை
நீக்கும்வகையதனை நீணிலத்திற்கண்டிடுவோம்

என்னப்பிலேத்து வியம்பயாக்கோபுவுக்கு
அன்னவன்செய்தி யறிவித்தானம்மானை
மெச்சும்தவத்துரிய மேன்மையுள்ளயாக்கோபு
அச்சமுடன்வந்த அவன்தூதன்றன்னிடத்தில்
இந்தத்துகிலதனை இச்சணத்திற்கொண்டேகி
முந்தத்தவிதுமன்னன் மோசமறச்சொன்னபடி
கட்டுண்டோர்தான்விழுந்தார் கன்மப்பொறையதனில்
எட்டாதநீதி இறைவன்விடுப்பரென்று
சொல்லிப்பிலேத்துவுடை றூதன்கையிற்கொடுக்க
ஒல்லைப்பொழுதிலவன் ஓடிப்பிலேத்திடத்திற்
தூயோனுரைத்தபடி துண்டத்துகில்கொடுக்க
மாயமிகப்பொதிந்த வஞ்சவித்தைநீங்கியதே
அன்பன்பிலேத்து அவனையவமதித்து
முன்புசந்தியாகுதனை மோசமறவந்துகண்டு
அஞ்சல்புரிந்து அரியபிலேத்துவுந்தான்
தஞ்சமென்றுயாக்கோபின் தாளில்மிகப்பணிய
பன்னிரண்டுஆண்டாய்ப் படுந்துயரந்தீராதான்
தன்னிரண்டுகையாலே சட்டைவிளிம்புதொட
அன்றுசுகங்கொடுத்த அம்புவியில்மானிடனும்
ஒன்றுமிறைவ னுடையதிருச்சீஷன்
ஆதித்திருமறையி லன்னவனையுள்ளாக்கி
மேதினியில்நன்மையுடன் வீற்றிந்தாரம்மானை

எரிமோசு பசாசுகளையேவல்

விருத்தம்.

பொன்னுலகோடெம தகிலமதெங்கும் போதநிறைந்தபரன்
தன்னுடைநேச மிகுத்தசந்தியாகு தாரதலமீதினிலே
சொன்னறிவாலெரி மோசுடைசீஷனைச் சோதிதன்மாமறையில்
இந்நிலமீதில் வருத்துதல்கண்டெரி மோசுவெகுண்டனனே. 35

விஞ்செயராகிய மேதினிமீதினில் வித்தைகள்கற்றவர்கள்
பஞ்சபூதங்க ளுளங்கொடுவென்பதி னெண்கணமானதுவுந்
தஞ்சமொடென்கழல் வந்துபணிந்து தலங்கள்புகழ்ந்ததெலாம்
கொஞ்சமிதோவென் றன்றெரிமோசு கொடுஞ்சினமெய்தினனே.

நன்செபதேசு தருஞ்சுதனேடுள நன்மைமுடித்தபகை
வன்சீஷனுண பிலேத்துவையுங்கொடு வாருமெனக்கணமே
துன்கனலங்கியில் வன்புறவன்சண தொகுதியிலுள்ளவையை
இன்புடனேவினன் வன்கொடுமொழியி லெழுந்திடுகோடமொடே 37

அம்மானை.

பொங்கிக்கொதித்தெழுந்த பொன்றுதவெங்கனலிற்
தங்கிடும்வஞ்சந் தனைப்பொதிந்தமாயமுள்ளான்
துங்கசந்தியாகுவையுந் தூயபிலேத்துவையுஞ்
சங்கைகேடாக்கித் தரணியுள்ளோர்தான்காணத்
தொட்டுக்கரமிரண்டுஞ் சோர்வுறநற்பாசமிட்டுக்
கட்டிக்கொண்டிங்குவரக் கற்பியாதேயிருந்தாற்
சூழங்கடலுலகிற் துட்டவித்தைகற்றவர்கள்
நாளுமெனைநகைப்பார் நாணமில்லையோவெனக்கு
என்றுஎரிமோசு எண்ணம்மிகவாகி
அன்றவனும்வித்தையினால் ஆனவஞ்சப்பேய்களெல்லாம்
ஒன்றுபடவழைத்து ஓதுவன்காணம்மானை
நன்றியறிந்துவந்து நாளுமுதவுகின்ற
நாராயணக்கணமே நமனைநமதிடத்தில்
வாராய்வயிரவனே மாகாளிமார்த்தாண்டா
கூழிபினமே குறள்குட்டிஆத்தாளே
ஊழிநரகிருக்க உற்றஉலூசியுடன்
கையன்பெரும்படையன் காமனாசிங்கனுடன்
செய்யுங்கொலைத்தணிபன் சீரானகண்ணகையும்
சத்தியொடுகறுப்பன் சாமுண்டிசண்டிகையும்
பத்தினிமைக்காளி படர்ந்ததுர்க்கைகாடேறி
அள்ளிக்கனல்விழுங்கும் ஆனடுப்புநாச்சியுடன்
கொள்ளிவாய்ப்பேய்ச்சனியன் கூடுமிடும்பனுடன்
ஆசையகந்தை யதிகோபந்துன்மோகம்
போசனவபேட்சை பொறுமைலோபம்சோம்பல்
எல்லையறவமைத்த எப்பேய்க்கணங்களெல்லாம்
ஒல்லைப்பொழுதினிலே ஒருகூட்டமாய்ச்சேர்ந்து
காற்றுப்போல்நீங்கள் கடுகவிரைந்தோடிப்
போற்றுசந்தியாகுவையும் போந்தபிலேத்துவையும்
ஏற்றமுடன்சேர்த்து இப்பொழுதென்முன்னாக
மாற்றமின்றிக்கொண்டு வருவீரெனமொழிந்தான்
எண்ணுவரமுடனே ஏற்றமன்னுவாமுணவை
விண்ணுல்வரவிடுத்த வேதன்திருமுனிவாற்
கண்வாயும்மூக்கும் கனசெவியுந்தீயெரியப்
பண்ணெல்லாம்விட்டிழந்து பயங்கரரூபமுடன்
வன்னரகிற்வீழ்ந்தழுந்தும் வஞ்சகப்பேய்களெல்லாம்
துன்னெரிமோசென்றுசொல்லுந் துட்டனுரைப்படிக்கு

கூடிக்குரவையிட்டுக் கொற்றசந்தியாகுதனைத்
தேடியவரிடத்திற் சென்றனவேயம்மானை

எரிமோசு ஏவிய பேய்கள் எரிமோசைப்பிடித்துச்செல்லல்.

விருத்தம்.

மாதவனுனமெய்ஞ் ஞானயாக்கோபை வதைப்போடடுத்துவரப்
பூதலமீதெரி மோசவனேவிய பொய்யுறுமலகையினம்
மோதலைவாருதி போலவுமோதி முழக்கிவரும்பகையை
ஏதமுசோதி விலக்கியவாறுநல் வின்பொடியம்புதுமே 38

வஞ்சகனீசன் வழுத்திடவேகிய வன்புறுமலகைகளும்
அஞ்சிடுமாறு வனந்தமடுத்தனர் ஆதிநற்சம்மனசோர்
கெஞ்சியொடுங்கி நடுங்கியேயங்கு கிடந்தகணங்களெலாம்
தஞ்சமெனத்தொழு தேயாக்கோபுடை தாளில்விழுந்தனரே 39

அம்மானை.

மண்ணஞ்சிலுள்ள மனுவோர்கதியடைய
எண்ணஞ்சுநாளும் இயற்காவில்வீற்றிருந்தோன்
தன்னேசமுள்ள தவச்சந்தியாகுதனைத்
துன்னீசப்பேய்கள் சுருக்கவந்தசெய்திகண்டு
ஏகபரன்சோதி இனியபரத்திருந்து
வாகொத்தமண்ணில் வரவிட்டாராஞ்சுகளை
எண்ணடங்காத்திரளா யெரியில்விழும்பேய்கள்தன்னைச்
கண்ணடங்காச்சோதியுடை கனவாஞ்சுமார்கூடிக்
கட்டிப்பெருந்தளையாற் கால்விலங்குங்கைவிலங்கும்
இட்டுக்கொடுநரகி லெண்ணவொண்ணுமாதுயராய்
அங்கேகொடுநரகி லாக்கினைக்குரட்டியதாய்
இங்கேவருத்தி இறைவன்றிருவுளத்தால்
மோதினார்மேன்மேலும் முன்னிழுத்தார்பின்னிழுத்தார்
ஏதுசெய்வோமென்றுமிக வேங்கியேபேய்களெல்லாம்
வஞ்சனெரிமோசு வார்த்தைநம்பிவந்தோமென்று
கொஞ்சமுந்தஞ்சமற்றுக் கூவென்றார்பேய்களெல்லாம்
ஆபாவமாபாவ மையோவெமைச்சூழ்ந்த
மாபாவம்போக்க வழியறியாதிங்குவந்தோம்
பொன்னுலகயாக்கோபே புண்ணியமாயெங்கள்தமை
இன்னிலமேல்வந்து இடர்நீக்குமென்றுசொன்னார்
அந்தரத்தால்வந்து அபயமொழிகேட்டு
மூந்ததம்பவம்போக்கும் முதல்வன்றிருச்சீஷன்
ஏதென்றார்பேய்க ளியம்புவதைக்கேட்டருளீர்
நீதொன்றுமில்லாத சிட்டனையுன்றனையே

தீயனெரிமோசு தீமைசெய்யவிங்கனுப்பும்
பேய்கள்நாமையாவெம் பேய்ப்புத்திகொண்டுவந்தோம்
ஒள்ளியவானி லொளிசிறந்தவாஞ்சுகள்தான்
தள்ளியெமைத்துயராற் றத்தளிக்கப்பண்ணுகிறார்
உன்னுடையமாளிகையி லாருமெறும்பதையும்
வன்மைசெய்யவெம்மாலே மாதவனேகூடாது
முன்னாளகந்தையினால் முழுநரகுக்கீடானோம்
இந்நாளுமெம்பிழைக்கா யிவ்வினைக்குமீடானோம்
மன்னுவுமக்கபையம் வந்தவினைதீருமென
மின்னுள்சலோமைமகன் வேதனுடனிரந்து
வானவர்களானோர்கள் மண்ணைகளுஞ்சியற்றும்
ஈனத்தைநீக்கி யியம்புவதைக்கேட்டருள்வீர்
என்னைவதைத்துவர இயம்புமெரிமோசுமுன்னே
உன்னிவிரைவாக ஒருநொடியில்நீங்கள்சென்று
கட்டிப்பிடித்தவனைக் கன்மமொன்றுஞ்செய்யாமற்
றிட்டெனவேவாருமென்று செப்பினார்யாக்கோபு
மிக்காஞ்சேரேமியென்ற வித்தியாபாரகர்தான்
அக்காலஞ்சொன்னபடி ஆறைந்துகாசதற்கு
ஆசைகொண்டயூதாசு அங்கிருக்கும்வன்னரகிற்
காசைமிகப்பொருந்திக் காலமொன்றுங்கடிய
வேதாளமானதெல்லாம் மெத்தமனமகிழ்ந்து
பாதாளமோடும் பகைஞர்திடுக்கிடவே
சென்றேயெரிமோசைச் சேர்த்தார்பிடித்திழுத்தார்
கொன்றுவிடுவதுபோற் கூடிக்குரவையிட்டார்
எண்ணடங்காவோனுய்க் கெதிர்வந்தமானதுபோற்
கண்ணடங்காக்கோடிக் கணத்துள்ளெரிமோசு
கட்டுண்டுமெத்தக் கலங்கிப்பயந்துநெஞ்சம்
ஓட்டுண்டபல்லியைப்போல் ஒன்றும்பறையாமற்
பேய்களவரவரே பின்னிழுக்கமுன்னிழுக்கக்
காயமுடன்சேர்த்த கைகாற்பிணையலுடன்
எல்லாருங்கூடி எரிமோசைக்கொண்டேகி
வல்லசந்தியாகிடத்தில் வந்துகண்டாரம்மானை

எரிமோசு மனந்திரும்புதல்.

விருத்தம்,

அன்றளியாக்கனி காரணமாயுய *ரத்தியுமன்றழிய
நின்றருளெங்கனு மானவனுக்கதி நேசவியாக்கோபு

* அத்தி—அத்திமரம்.

வென்றியொடேவிய வாய்மொழியின்படி விஞ்செரிமோசுதனைக்
கண்டவர்பற்றிக் கட்டியேவந்தவர் கழல்கள்பணிந்தனரே 40

வந்தவிலக்ஷ கோடிபசாசுகள் வாய்மொழிகூறுவதோ
இந்தவுகத்தெரி மோசுவுமெங்களை யிடறுவருத்திய தாற்
பந்தமுறுத்தி யெமக்குணவாய்மிகு பழுதுகள்செய்திடவே
தந்தருள்வீரென வந்தபசாசுகள் சாற்றியேநின்றனரே 41

கைசரணைவுற வாரதுகொண்டு கனக்குமனக்கபடன்
மெய்கள்பதைக்க மிடுக்கொடிறுக்கி மிகைத்ததருக்குடனே
வையகமீதுள மனுஷர்நகைக்க வருத்தியநாணமெழச்
செய்வதேதென்றெரி மோசுபயந்து தியங்கிமயங்கினனே 42

கட்டுடனின்றெரி மோசுபயந்து கலங்கிமனங்குழற
விட்டிடுமென்றுயாக் கோபுவிளம்ப விளங்குபிலேத்தணுகித்
தொட்டசுருக்கை யவிழ்த்துநெகிழ்த்தித் துயர்களகற்றிடவே
இட்டமொடித்துயர் பட்டெரிமோசு வியம்பலுறைந்திடுவோம் 43

அம்மானை

தன்னைப்புசிப்போர்க்குத் தானுணவுதாராமை
உன்னிக்கனியளியா வுற்றிடுமத்திதனை
அன்றொருநாட்சாபமிட்ட ஆதிதிருச்சீஷன்
நின்றடியிற்றெண்டனிட்டு நீசக்கணங்களெல்லாம்
வஞ்சனைகொண்டுசொல்லும் வார்த்தைகேளம்மானை
கொஞ்சத்தனமுடைய கொடியனெரிமோசு
செய்தீவினையுந் திருடுமுறைக்கவென்றால்
வையகமீதிலெம்மால் வசனிக்கக்கூடாது
உத்தமனேமெத்த வுபாயங்கள்பண்ணியியாம்
புத்தியுடன்சேர்த்துப் புலையனைக்கொண்டுவந்தோம்
பொய்யிற்கொடுவினையிற் புத்திகொடுத்தவெங்கள்
கையினில்வந்தவனைக் கண்டோர்கலக்கமுற
ஆக்கினைசெய்ய வருளுநீவிடையெனவே
வாக்கிலுல்யாக்கோபு வசனிப்பாரம்மானை
இப்பேச்சுரைத்த இடர்ப்பேய்களைநீங்கள்
அப்பாலகலுமென்று அச்சணத்திலோட்டிவிட்டு
நேசப்பிலேத்தை நிகழ்த்திவரவழைத்து
வாசத்தியவேத வானேனென்றனக்காகத்
தொட்டுச்சுருக்கவிழ்த்துத் துட்டனெரிமோசை
விட்டுவிடென்று விளம்பினார்யாக்கோபு
அன்பன்பிலேத்து அவன்சுருக்கைநீக்கிடவே
வன்பேய்கள்செய்த வடுவும்மகிமையுள
நேயயாக்கோபுசெய்த நிறைநவமுங்கண்டதினால்
மாயவெரிமோசுவுந்தன் மாயமெல்லாந்தானகற்றி

அஞ்சினனமெத்த அறிவழிந்துயாக்கோபின்
தஞ்சமென்றுவீழ்ந்து தாள்பணிந்தேதுசொல்வான்
ஐயாவுனைப்பிரிந்தா லற்பவடியேனைச்
செய்யாதபங்களுஞ் செலுத்திக்கொடும்பேய்கள்
என்னுயிரைக்கொல்லும் இரத்தந்தனைக்குடிக்கும்
உன்னுதவிகொண்டடியே னுற்றமனைக்கேகி
மாயவஞ்சப்புஸ்தகங்கள் வாகாயெடுத்துவந்து
தீயிலிட்டஞ்ஞானச் செயலெல்லாம்விட்டுவிட்டு
பொன்னேனுன்றிருவேதம் புகுதவெனக்குவிடை
இந்நாளருளுமென வியம்பவியாக்கோபும்
தன்கையில்வைத்திருந்த தங்கப்பிரம்பதனை
அன்புடனேகொடுக்க வானவெரிமோசு
சுத்தன்கரத்திருந்த தூயபிரம்புகொண்டு
சித்தங்கலங்காமற் றிடனுய்மனையில்வந்து
வித்தைக்கபடவஞ்சம் வேணுமெனவைத்திருந்த
சித்திரப்புத்தகத்தைத் தேவன்றிருச்சீஷன்
தன்னருகிற்கொண்டுவந்து தான்சாம்பராவதற்கு
மின்னும்நெருப்பிலிட்டு வித்தைகளெல்லாம்மறந்து
மன்னுஞ்செபதேசு மைந்தன்யாக்கோபருளால்
உன்னுந்திருவேதத் துட்பட்டானம்மானை
தந்தைசுதனிஸ்பிரீத்துச் சாந்துதிருநாமமதால்
அந்தவெரியோசு ஆதிமறைபுகுந்து
இத்தலமுமெத்தலமு மெங்குஞ்சிறந்தோங்க
அத்தலத்தில்நன்று யமர்ந்திருந்தானம்மானை
ஆறிரண்டுவெள்ளி யழகமுடிதரித்து
மாறுகொண்டபேய்மடிய மாநிலத்தில்வந்தகன்னி
அம்மாள்தனக்குவந்த அருமைசெறியாக்கோபு
தம்மையநீதியதாய்த் தாங்காவிடர்வருத்தும்
ஆனகலிலேயநகர்க் கன்னுளரசான
ஈனனேரோதை யியல்புகேளம்மானை

ஏரோதையின் அரசியல்.

விருத்தம்.

மண்ணதில்நண்ணிய மானிடர்செய்திடு மாசதெலாமகல
விண்ணுறைசோதிநல் மானிடனாகியிம் மேதினிமேல்வருநாள்
எண்ணருதுய்ய குழந்தைகடன்னுயி ரிடருறவிங்குவதை
யண்ணலேரோதை யருஞ்சுதனுய்வரு மாசனுமேரோதை 44

தந்தையர்தன்னிலு மாகொடிதானவன் றன்னுடைதம்பியரும்
முந்தவிருத்திய காதலிதன்னுடன் மோசம்விளைத்ததினல்
வந்ததிகார மொழிந்தசுவானியை மாகொலைசெய்தமன்னன்
இந்நிலத்தினில் வாழ்வதனுனா சேகவிருந்தனனே 45

வச்சிரமாமணி கொண்டுமெழுத்திய வளமுறுமரியணையி
லச்சமிலாதொரு கோலதுகொண்டா சாளுமெரோதைமன்னன்
மெச்சகல்சூழ்வய வீரர்கள்வாணர்கள் விஞ்சையர்செஞ்சொல்வலோர்
இச்சையொடிங்கிர்த மென்றமிறைஞ்சிட வின்போடிருந்தனனே 46

அம்மானை.

வச்சிரம்பச்சை மணிப்பவளத்தால்வேய்ந்த
மெச்சுமரண்மனையில் வேடிக்கையாயிருந்து
அற்பமறுவில்லா வனேகங்குழந்தைகளைத்
துற்குணத்தாற்கொன்ற துரோகிதனதுமைந்தன்
தன்னேடுதித்த தனதுதம்பிமங்கையரைத்
துன்மோகத்தாலாசை சூழ்ந்தகொடும்பாவி
தாயார்வயிற்றிருந்து தற்பரனைப்போற்றிசெய்த
தூயசுவானிதன்னைத் துஞ்சவைத்தவஞ்சநெஞ்சன்
தன்கொடுமைசொல்லத் தரணியிடங்கொள்ளாது
வன்கண்ணனுனவிந்த வஞ்சகனேரோதையென்னக்
கேட்டார்திடுக்கிடுவார் கேள்விதனிற்கையறைவார்
நாட்டார்க்குமாகாதான் நாடியதன்றம்பியர்க்கும்
ஆகாதானுன அநியாயமாபாவி
ஏகாமுழுநரகுக் கீடானவேரோதை
ஆடகப்பொன்னு லழகமுடிபுனைந்து
மாடமதிற்கோபுரத்துள் மன்னர்புடைசூழத்
துய்யகொலுவிருந்து சுற்றுங்கிரணமெழும்
வெய்யோனெனவேந்தன் வேடிக்கையாயிருக்கத்
துங்கவமைச்சர்களுந் தூயமதிவல்லோரும்
அங்கிறைவர்தம்மை யடிபணிந்துபோற்றிசெய்யப்
பைம்பொன்மகுடபத்தர் பட்டபத்தராமரசர்
செம்பொற்குடைநிழற்றச் செம்மல்தனைவந்துதொழ
வெற்றிவிருதூத வெண்டாளத்தண்டிகைமேற்
கற்றோர்குருக்கள் கலைவல்லோர்வந்திறைஞ்சக்
காலாள்பரிதேர் கனசேனைகண்டிறைஞ்ச
மேலாள்படைவீரர் மெத்தவந்துபோற்றிசெய்தார்
நாடகீர்தமொடு நல்வீணைகின்னரமும்
பாடவல்லபாவாணர் பல்லியங்கள்சொல்லிநிற்க

தும்பியகையெக்காளம் கூடுந்தவில்முரசு
நம்பும்பலகருவி நாதத்தொனிமுழங்கச்
சாவடியுங்கோபுரமுந் தக்கமணிச்சாலைகளும்
கோவடியர்வாழுகின்ற கொற்றமணிமேடைகளும்
விற்கூடம்வாட்கூடம் விஞ்சைபயில்கூடம்
மற்கூடமாயுதங்கள் வைக்குமணிக்கூடம்
கோலமணிச்சாலை கொற்றமணிச்சாலை
வாலக்குமாரன் மகிழ்ந்திருக்கும்மண்டபங்கள்
கோவிருக்குஞ்சாலை கொலுவிருக்கும்நன்மேடை
ஓவியமிட்டநல்ல உப்பரிகைதற்சூழ
நல்லையுறுவீதி ஒழுங்கைபலகணியும்
நல்லகலைவயிரம் நாடுமணித்தளம்
எங்குமணியணியா யேற்றிநற்கோலமிட்டுத்
துங்கமணிமண்டபத்திற் சுற்றுக்கிரணமெழ
நாளாயிரைதேடி நல்விரைகாணுமல்
வாழ்கோபமுற்றசிங்கம் வைக்குங்கொடுஞ்சினம்போல்
ஆனந்தநீதி யரியகிறீஸ்தவரை
ஊனங்குடிக்க உவந்திருந்தானம்மானை

யாகப்பரைப் பிடித்து ஏரோதையிடங் கொண்டுசெல்லல்.

விருத்தம்,

அரசனேரோதை யளித்திடுமொநக ரங்குளயூதரெலாம்
விரகெரிமோசயாக் கோபுசொல்மெய்மறை வேதமுறைந்ததினல்
உரகமதேறிய பேய்கள்திரண்டே யுறுத்தியபுத்தியினுற்
தருமயாக்கோபை வதைத்திடவெனவவர் தம்மிலிசைந்தனரே 47

தம்மிலிசைந்திடு வாய்மைமொழிப்படி தறுகணர்யூதரெலாம்
மும்முடிசூடிய ஆதியின்சீஷன் முதியயாக்கோபுவுடை
அம்முரமோடு காங்கடனைக்கயி றதனுலேகட்டிச்
செம்மலேரோதி னிடந்தனில்வந்தவர் செய்திமொழிந்தனரே 48

முன்னுள்கர்த்தன் றன்மகனென்று மொழிந்தவிவன்குருவாம்
மன்னவனைக்குரி சானதில்வைத்தெம் மரபுளர்கொன்றதன்னுள்
அன்னவனுக்கிவன் நேசமுளானென் றன்போடறிந்துமியாம்
இன்னவனைக்கொடு வந்தமையாமென வின்பொடியம்பலுமே 49

ஆமரசர்க்கர சானவன்ஞான்ம தற்றவேரோதையெனு
நாமமுற்றேனின் குமாரனுக்கேயவர் ளினமுரைத்தெமையும்
வாவெனவந்தொரு வேதமுரைத்திடு வண்மைமடிந்திடவே
தாமதமற்றிவ ரைக்கொலுமென்றவர் தாளில்வணங்கினரே 50

அம்மானை

ஆபாவமாபாவ மையோசெருசலையின்
மாபாவியூதர்செய்த வஞ்சகத்தைக்கேட்டருளீர்
முன்னங்குருசில்வைத்து மூவுலகையும்படைத்த
மன்னவனைக்கொன்ற வடுவால்பயங்கிவஞ்சர்
இன்னஞ்சலோமைக் கினியதிருமகனை
அன்னவர்கள்கொல்லவென்று ஆயித்தமாய்த்துணிந்து
வஞ்சகவீனன் வலியகொடும்பாவி
தஞ்சமுள்ளானசுத்தன் சதித்திசைதாருவென்போன்
அந்நாளில்யூதருக்கு ஆனகுருச்சொற்படியே
மன்னுஞ்செருசல்நகர் வாழும்மழுவீர
சேனாபதியான தீயோக்கிலேசியையும்
ஆனவிலிசனென்ற வயற்சேர்வைக்காரனையும்
ஒப்பிட்டுக்கூட்டி உபாயம்பலபேசித்
தப்பியேயாக்கோபு தானகலமாட்டாமற்
கத்தியும்வில்லுங் கனபடையுங்காலாளும்
மெத்தவெகுதிரளாய் வேண்டியசூதானமுடன்
பாசமும்வாரும் பலவடமுங்கைக்கயிறும்
வீசமுடன்தேடி வீரர்கள்வந்தேசிறந்த
ஆசரியன்சீஷன் அறிவுசொல்லும்வேளையதிற்
கேசரிபோலேவெகுண்டு கேடனெனுங்கோவியசு
கைக்கயிற்றுல்யாக்கோபின் கண்டந்தனிற்றெடுக்க
மெய்ப்புடையவீரரெல்லாம் வேகத்துடன்கூடிக்
கட்டினார்பின்முறியக் கைகால்களுஞ்சேர்த்து
விட்டுவிடாதபடி மெய்கயிற்றினல்வரிந்து
சேனைபடைவீரர் திரளாய்வயவீரர்
ஆனகொலையூத ரங்குள்ளோரெல்லாரும்
ஆளின்குழறுதலும் ஆயுதங்களின்சுழியுஞ்
சூழமிகத்துலங்கத் தூயோனடுவிருக்கக்
கையாலுங்காலாலுங் கண்டாயுதத்தாலும்
ஐயோகொலையூத ரன்பன்றனைத்தாக்கிக்
கொண்டுசென்றார்கட்டுடனே கொற்றவனேரோதைமுன்னே
கண்டுஅடிபணிந்து கட்டுரைப்பார்யூதரெல்லாம்

பொன்மகுடஞ்சூடிப் புவிபுரக்குந்தேவேந்தே
உன்னைவணங்கி ஒழுகுசனம்நாங்களெல்லாம்
மூன்னுமிவனாசரியன் முத்திவழிகாட்டவந்து
தன்னையரசனென்று சாற்றியதால்நங்குலத்தோர்
கொன்றார்குரிசில்வைத்துக் கொற்றவனும்மூன்றுநாள்
வென்றியுடனுயிர்த்து விண்ணிற்கொலுவிருந்தார்
என்றவர்கள்தாங்க ளியம்புங்கிரந்தமதில்
அன்றெழுதிவைத்தபடி அஞ்சாமலிங்கிவனும்
வந்துளமதுகுல மாந்தருக்குமிவ்வேதம்
கந்தமுறச்சொன்னதினாற் கட்டிக்கொண்டிங்குவந்தோம்
எங்கள்குலத்தரசே எப்படியுமெங்களுக்காய்ச்
சங்கைகெடுத்தவனைத் தாரணியிற்கொல்லுமென்றார்
ஓகோகொடுமை ஒருபோதும்விட்டுவிடா
ஆகாதவேபோதை அரியாசனத்திருந்து
பாரப்பலனும் பானருளுமெண்ணமற்
கோரத்தால்வேந்தன் கொற்றசந்தியாகுதன்னைத்
தன்தேசத்துள்ள தறுகண்ணர்சொற்படிக்கு
வன்கொலைசெய்ய மனந்துணிந்தானம்மானை

திருமரணமடைதல்.

விருத்தம்.

காலமொடுங்கக் கனத்தொடிறக்கிய கதிரவனம்புலியுங்
தாலமொடிங்குள மானிடரானவர் தாபாசங்களெலாம்
ஆலயிடுங்கன லடலையதாகவே யவனியுமழியுமந்நாட்
கோலமடுத்திடு குருசொடுவிடை கொலுவதில்வருபானோர் 51

புத்திரனாகிய பெரியயாக்கோபுமெய்ப் புனிதனையனிதமுறக்
குத்திரனனவெ ரோதைமன்னாகிய கொடியனிரங்காமல்
அத்தலமானதன னூருறையூதர்க ளன்பொடுரைத்தபடி
சுத்தசந்தியா குடைதலையறுமென்னத் துட்டனுரைத்தனனே 52

அம்மானை.

காற்றுங்கடலுங் கனவரையுமந்தரமும்
ஏற்றநிலத்திலுள்ள வித்தாரங்களெல்லாம்
முந்திப்பரனுதித்த முத்திமொழிப்படியே
சிந்துங்கனல்தூவித் தீயாயெரியுமந்நாட்
கைக்கொடியுந்துய்ய கருணைத்திருக்குருசும்
வைக்கப்புவிமிசையே வானோர்புடைசூழ

வன்றூறடுத்தீர்க்கும் வானோன்றிருவருகிற்
சந்நூரவாசனத்திற் றூயரிருவருடன்
கூடக்கொலுவிருக்குங் கொற்றசந்தியாகுவென்று
தேடிக்கொலைபுரியுந் தீயசறியாமல்
ஊருங்குடியு முறவுமுரைத்தபடி
தேருசந்தியாகுவுக்குத் தீர்வையிட்டானேரோதை
சந்திரனுஞ்சூரியனுந் தாரகையும்வானுலகுஞ்
சிந்தையுடன்படைத்த தேவன்றிருச்சீஷன்
கட்டுண்டகட்டோடுங் கன்மர்செய்தகாவலொடும்
இட்டக்கொலைத்தீர்வை ஏரோதைசொன்னபடி
ஆனமனமிடுக்கோ டாகஞ்சலியாமல்
வானவனுக்காய்த்தமது வாழ்நாள்தனையிழக்க
ஆசைமிகவுமுற்று ஆயத்தப்பட்டிருக்க
நேசமற்றதுட்டகொலை நீசர்கள்சென்றுபற்றிக்
கையிற்பிணையலொடுங் கண்டக்கயிற்றோடும்
மெய்யிற்பிடியோடும் வீரரியாக்கோபை
ஏரோதைவாசல்விட்டு ஈடாங்கொலைக்களத்தே
வாரோடுகொண்டு வழிப்பட்டாரம்மானை

திருமரணமடைதல்.

விருத்தம்.

மன்னனேரோதை மொழிந்தவுரைப்படி மாச்றுயாக்கோபை
அன்னியரிட்ட வடத்தொடுகொலைபுரி யக்களமேகையிலே
உன்னிமனத்துய ரோடேவழிதனி லோதுவதொருமுடவன்
என்னையிரட்சைசெய் சந்தியாகேயென வின்பொடியம்பலுமே 53

அழுதுமெய்சோரவே கழல்சரமோருறு மங்கமதானவெல்லாம்
பழுதுடையானெமை யாள்பவனை பரப்பொருடன்துணையால்
வழுவறவேமண்ணி லேநடவென்றிட மகிமையோடேயவனும்
எழுதரிதாநவ மாகநடந்து மிணங்கவிருந்தனனே 54

கால்கரமின்றிய முடவனடந்தது கண்டுயாக்கோபுவுடை
சீலமதான கழுத்தினில்வார்தொடு தீயவன்கோலியசு
ஆலமுளேனடி யேனுமைவன்புட னவமதிசெய்ததெலாந்
தாலமிதேபொறு மென்றுதீயோகுடை சரணில்விழுந்தனனே 55

சரணில்விழுந்துயர் மாமறைதாவெனச் சற்குருயாக்கோபு
பரனருள்வேதமுள் ளாகவேயவனைப் பண்பொடிருத்தலுமே
மரணமதாகிட விருவரையுங்கொலை வைத்தனராக்கணமே
இரணமதாகவே விண்ணுறையாதியி னிணையடிசென்றனரே 56

அம்மானை.

மங்காத்தவத்துரிய மானூர்சலோமைமகன்
அங்கேகொலைப்படவே அன்னியர்கொண்டேகும்போ
சப்பாணியாய்நெடுநாள் தாரணியிலேயிருந்த
அப்பாவிசொல்லுமொழி யம்புவியோர்கேட்டருளீர்
ஏகன்திருச்சீஷன் ஏகுந்தனிமைகண்டு
ஆகஞ்சலித்தழுது அங்கவனுமேதுசொல்வான்
ஆதிக்கடவுளுக்கா யம்புவியிலீனர்கையால்
நீதிக்கொலைப்படவே நேசமுற்றமாதவனே
என்பாவத்தாலே யிறைவன்றிருமுனிவால்
வன்கால்கரங்கள் வழங்காமல்வையகத்தில்
ஆவித்துயரு மரும்பசியுங்கொண்டடியேன்
பாவக்கனம்மிகுந்து பாருலகில்வாடுகிறேன்
என் துயரந்தீர இரந்திறைவனைப்பணிந்து
உன்கருணையாலே யுதவென்றானம்மானை
அங்கத்திற்கட்டு மரும்பகைஞர்செய்தவன்பும்
பங்கக்கொலைத்துயரும் பட்டேகும்யாக்கோபு
தன்துயரமானதெல்லாந் தக்கமனத்தெண்ணுமல்
அன்பாகவேயுரைத்த அப்பாவியைப்பார்த்து
கைகால்கள்கண்டிரங்கிக் கண்ணீர்மிகவுதிர்த்து
துய்யகிறீஸ்தின் துலங்குதிருநாமமதால்
கைகால்வழங்கியிந்தக் காசினியில்நீநடவென்
றெய்யாத்தவத்தோ னியம்பினாரம்மானை
மொழிந்தவுரைகேட்டு முடவன்நடந்ததினால்
தெளிந்துகொலியசுவுஞ் சிறந்தபுதுமைகண்டு
ஐயாவேயாக்கோபு வானவனையுன்கழுத்தில்
கையால்வடந்தொடுத்துக் கட்டினேனானாலும்
ஒன்றறியாவேழை யுனதடியேன்செய்தபிழை
இன்றுபொறுத்தெனக்கு இவ்வேதந்தாருமென்றான்
கோலியசுசொல்லக் குருவாமியாக்கோபும்
மேலானநீதம் விளங்குதிருவேதமதில்
உள்ளாக்கியன்றவனுக் கோதுவதெல்லாமுரைத்தார்
விள்ளப்படாநவத்தால் வேதமதைக்கோலியசு
உள்ளத்தில்நம்பி உறுதிகொண்டகாரணத்தால்
கள்ளக்கொலையூதர் கற்றசந்தியாகுடனே
கொல்லத்தான்கோலியசைக் கொண்டுசென்றாரம்மானை
வல்லவியாக்கோபும் வன்மையுள்ளகோலியசும்
சொல்லமுடியாத சோபனத்தினால்மகிழ்ந்து
அல்லற்றுயரமெல்லா மற்பமனத்தெண்ணுமல்

கைதுவித்துவிண்ணோக்கிக் கர்த்தன்றனைநினைந்து
மெய்பணிந்தோதியதை மேதினியோர்கேட்டருளீர்
ஆதிபரப்பொருளே ஆனந்தவற்புதனே
சோதித்திருவுருவாய்த் தொல்புவியில்வந்தோனே
தீயவினைக்கனியைத் தின்றதிஞலேவையதம்
தூயகுலக்கனியாற் றேன்றுந்திருமகனே
அன்றகுஸ்தீனென்ற வரசன்மனந்தெளிய
வென்றிசெறியும் விரிவெண்சுடர்வானில்
மாசில்லாதுற்பவித்த மகத்துவராசகன்னி
ஆசறுபாலகனை யங்கைதனிலேந்தி
கன்னிமார்சூழக் கனவாஞ்சுமார்பாட
மன்னுமரியநவம் வைத்தவிறையவனே
அன்றுவிழிநீரா லாதியெயுன்பாதஞ்
சென்றுகழுவுமங்கை தீவினைகள்தீர்த்தீரே
வெப்பமுடனேகூதல் வெம்பசியுந்தாகமுடன்
இப்புவியில்நித்திரையு மேகனேநீர்பொறுத்து
நாளுமெமக்காக நன்மைபுரிந்ததெல்லாம்
ஏழையடியாரை யீடேற்றவேண்டியல்லோ
என்னைப்படைத்தா யிரட்சித்தாயித்தனைநா
ளுன்னைவணங்க வுறுதிதந்தாயுத்தமனே
கண்வாய்கரங்கால் கனநாசிதன்னுடனே
நண்பாய்ப்பவமடியேன் நாளும்புரிந்தபடி
போதுமவனிதனிற் பொய்வாழ்வுஆனதெல்லாம்
ஏதுந்திருவுளத்துக் கேற்றபடியாக
ஏகனேயென்ற னியல்வானஆத்துமத்தை
ஆகமுவந்துன்கரத்தில் அன்பாகக்கையளித்தேன்
என்றுசந்தியாகு மியல்வானகோவியசும்
அன்றுபணிந்தோதி யாகமிகமகிழ்ந்து
மன்னனுரைத்தபடி வந்துகொலைக்காரருடன்
இன்னிலமேலெங்கள்தமை இன்பமுடனகொல்லுமென்றூர்
துட்டரிதுகேட்டுச் சுத்தர்களின்சென்னிகளை
அட்டதிக்கும்விண்ணு மடுத்தவருங்கண்டிரங்க
இட்டக்கொலைக்களத்தி லீனர்கையில்வாளாலே
வெட்டினார்பட்டு விழுந்தார்காணம்மானை
வட்டக்கடல்சூழ்ந்த மானிலத்திலேகனுக்காய்
பட்டகொலையாக்கோபைப் பண்பாகப்பார்த்திறைவன்
வானோர்தமையனுப்பி வண்மையியாக்கோபுடைய
ஆனதிருவாத்துமத்தை யங்கழைத்தாரம்மானை

பொன்னுலகநின்றுவந்த புகழ்பெருகுமாஞ்சுகளும்
அன்புள்ளவாதிக் கருகிருக்குஞ்சுத்தர்களும்
தூயோனிஞத்துமத்தைச் சுகிர்தமுடன்சூழ்ந்து
ஓயாதகீத மொழுங்கின்முறைகூறி
ஆனந்தமான அழகுமுடிசூட
வானந்தனிலாதி வண்மையுள்ளசன்னிதியில்
கொண்டுசென்றார்வானவர்கள் கொற்றசந்தியாகுதன்னை
பண்டுமோசேசுடனே பண்பாயுரைபகர்ந்த
தானனவாதி தவத்தனெனும்யாக்கோபை
வானோர்கள்கூட மகிழ்ந்துவரவழைத்து
அப்போஸ்தலர்க்குமுதல் அம்புவியில்நீயெமக்காய்
ஒப்பில்லாத்தொல்லையடைந் துன்றனுயிர்விடுத்து
என்னருகுதன்னில்வந்தா யென்னில்மிகுமன்புகொண்டாய்
உன்னுயிமுன்னு லுலகிலுனக்கதிகம்
சங்கைதனைக்கேட்டபடி சற்குணத்துக்கொப்பாக
இங்கேயெமதருகி லெண்ணமறவீற்றிசென்று
ஏகனுரைக்க வியாக்கோவெனும்புனிதன்
பாகந்தனில்மகிழ்ந்து பண்புடனேவீற்றிருந்தார்
வானும்புவியுமிக வர்த்திக்கவுண்டாக்கி
தானுமனந்தநன்மை தன்னால்நிறைந்திருக்கும்
கர்த்தனைக்கண்டு களிகூர்ந்துகண்ணாரச்
சித்தமகிழ்ந்துவிண்ணிற் சிட்டனும்வீற்றிருந்தார்
நாளானநாள்தனிலே நல்லயுவாம்வஞ்சலித்து
வாள்வாகக்கண்ட வரிசையுள்ளமோக்ஷத்தில்
சம்மனசுமாரோடுந் தக்கசிட்டர்தம்மோடும்
அம்மைசலோமைமக னனந்தமாயிருந்தார்
ஆஞ்சுகளும்மண்ணி லனந்தகலைவல்லரும்
வாஞ்சையுடன்சொன்னலும் வான்சிறப்புப்பேசரிது
வேடிக்கையானநல்ல வீரமுள்ளவெம்பரிகள்
கூடிக்கனகமுடிக் கோபுரத்தைக்கண்டதென்றால்
என்னசொல்வார்நாவா லிதுபோலக்கற்றவர்கள்
பொன்னுலகைத்தம்நாவாற் போதிக்கக்கூடுமதோ
பண்ணொழுங்கின்நீதி பழுதாய்மதியழிந்த
மண்ணிலுறுமீனர்கையால் வாள்நாள்தனையிழந்து
அற்பமறுவில்லாம லானந்தமோக்ஷத்தில்
நற்றவத்தோன்யாக்கோபு நன்மைநிறைந்திருக்க
இன்னுந்திருவுடலுக் கிப்புவியில்வந்தசங்கை
தன்னிற்சிறிதுரைக்கத் தாரணியோர்கேட்டருளீர்

சீஷர் சடலத்தையெடுத்தேகல்.

விருத்தம்.

வருந்துதவஞ்சிறந்தசெபதேசினோடு
மங்கைமரிசலோமைதானீன்றமைந்தன்
திருந்துநெறியாக்கோபுஅவனிமீதிற்
தேவனுக்காயுயிர்மடிந்துசிறந்துவானில்
பொருந்துபரன்றிருவருகிற்சேர்ந்தபின்பு
புகழுடையமலைமீதிலவர்தன்சீஷர்
இருந்தழுதுதிருத்தேகமடக்கஞ்செய்த
வியல்பானதில்சிறிதுஇயம்பக்கேளீர். 57

பொன்னுலகவேகனுக்காய்மனம்பொருந்திப்
புலையர்கையினுல்மடிந்துகளத்திலங்ஙன்
மின்னுமுடல்தனியிருக்கச்சீஷர்கண்டு
மெய்த்துயரங்கொண்டுவிம்மல்பொருமலோடு
என்னசெய்வோமென்றழுதாரந்தோவென்றார்
எங்களைவிட்டிறந்தனையோவந்தோவென்றார்
மன்னவனுமேரோதைநீதியின்றி
மாதவனேயுனைமடித்தானந்தோவென்றார். 58

அன்னையிலுமன்பாகவளர்த்தாயந்தோ
அவனியில்நாமிருக்கவிண்ணடைந்தாயந்தோ
கன்னிமரியறிந்தாலென்படுவாளந்தோ
கற்றவுன்தாய்தந்தையரென்படுவாரந்தோ
மன்னுயியுவாம்வஞ்சலித்தென்படுவாரந்தோ
மற்றவப்போஸ்தலரென்படுவாரந்தோ
வன்மனெனுமேரோதைநீதியின்றி
மாதவனேயுமைவதைத்தானந்தோவென்றார். 59

தவஞ்சிறந்தசீஷர்களுமழுதாரந்தோ
தருமநெறியுள்ளவருமழுதாரந்தோ
அவஞ்சிறந்தநிலமதிலெப்பொருள்கள்யாவும்
அண்டர்களுந்தொண்டர்களுமழுதாரந்தோ
தவஞ்சிறந்தயாக்கோபுமடிதல்கண்டு
நானிலத்தோர்பலர்கூடியழுதாரந்தோ
பவஞ்சிறந்தவேரோதைநீதியின்றிப்
பகைமுடித்தானுன்னையவனந்தோவென்றார். 60

கொலைக்களத்தில்மடிந்தவுடல்தன்னையேந்திக்
கோதறுநற்சீஷர்களுஞ்செபமேசெய்து
வலைக்குற்றபேயடியார்யூதரான
வஞ்சரந்தகரியுளோரறியாவண்ணம்

அலைக்குற்றவோடமதுதேடியன்பாய்
அரியவெஸ்பானுநகர்க்கவர்கொண்டேக
கலைக்குற்றமாணுக்கர்யாக்கோபென்னுங்
கற்றவன்றன்றேகமதைக்கருதினாரே 61

அம்மானை.

மன்னுஞ்செபதேசும் மங்கைசலோமையரும்
மின்னும்பளிங்கொளிபோல் மேதினியிலீன்றெடுத்த
புத்திரனான புனிதனியாக்கோபும்
எத்திசையுந்தானான வேகன்றனக்காக
நீர்மேற்குமிழியெனும் நீணிலத்தில்வாழ்வைவிட்டு
பார்மீதுதன்னுயிரைப் பண்பாய்விடுத்தபின்பு
ஏரோதைசொற்படிக்கு இங்குவந்தசேனைகளும்
பாரக்கொலைபுரிந்த பாவியெனும்வீரர்களும்
தங்கள்தங்கள்மாளிகைக்குத் தாரமாய்ச்சென்றபின்பு
அங்கேயாக்கோபி னரியதிருச்சீஷர்
மாருச்சலிப்பு மனத்திலேயுற்றுவிழி
ஆறுகநீரோடி யங்கேயழுதழுது
சென்றார்கொலைக்களத்திற் சிட்டசந்தியாகுவுடை
நன்றானகாயமனதை நல்விழியாற்கண்டார்கள்
கையால்முகத்தறைந்து கண்ணீர்மிகச்சொரிந்து
ஐயோவெனவெவரும் ஆசிரியன்மேல்விழுந்து
நீங்காத்துயர்மிகுந்து நேசமுள்ளமாணுக்கர்
பூங்காரமாகமனம் புண்பட்டாரம்மானை
தூசகலுங்கரமுந் துங்கமணிக்கழுத்தும்
பாசமிட்டுநேர் பரிவாய்ப்பிணித்தபடி
சென்னிவேறாகித் திருவுடலும்வேறாகி
அன்னியர்வாளாலே யறுத்தபடியக்களத்தில்
செங்குருதிவெள்ளந் திரளாயொழுகிவிழ
அங்கமழகெறிக்க வங்கேயிருந்ததினால்
மாதவத்தன்சீஷரிந்த வஞ்சனையைக்கண்டுமனம்
பேதலித்துமெத்தப் பெருகிவிழிநீர்சொரிய
கட்டையவிழ்த்துக் கமழ்சிரத்தையுமெடுத்து
இட்டமுடனே யியல்பானவெண்டுகிலால்
சேமமிட்டுவைத்துத் திருப்பதத்தைமுத்திசெய்து
ஏமமதிலங்கே யிருந்தழுதாரம்மானை
முன்னாளிறையவர்க்கும் முத்திச்சுவானியற்குந்
தன்னாற்பகைமுடித்தோன் றுயதியாமேரோதை

வாசச்சலோமைபெற்ற மைந்தனியாக்கோபுவையும்
நீசத்தாற்கொன்றுவிட்ட நிட்டூரமானதெல்லாம்
அன்னைமரிதாயறிந்தா லையோமிகச்சலிப்பாள்
இன்னிலமேற்பெற்றெடுத்த இன்பமுள்ளதாயர்தந்தை
என்னசெய்வார்நாமறியோ மிக்கொடுமைதானறிந்தால்
பொன்னேன்றிருக்கணக்கன் போற்றுயுவாம்வஞ்சலித்து
அண்ணர்மடிந்ததென்று லாறுத்துயரடைவார்
எண்ணரியவாதி யிறைவன்கிறீஸ்துவுடை
அப்போஸ்தலரான அன்பர்களுந்தானறிந்தால்
ஒப்பின்றிமெத்த வுளமெலிந்துவாடுவர்கள்
என்றுசொல்லிச்சீஷ ரிங்கேயிருந்தழவே
அன்றுவிண்ணும்மண்ணு மழுதனர்காணம்மானை
இங்கிருந்தாலின்னு மிலங்குமணியுடற்குத்
துங்கனேரோதைபல சூழ்ச்சிவிளைப்பனென்று
என்னசெய்வோமென்ன ஏங்கியேபுத்திரர்கள்
முன்னணிந்தவெண்டுகிலும் முத்தன்மெய்ச்சட்டையதும்
அன்னவர்கள்தான்கழற்றி யங்கந்தனைக்கழுவி
மின்னுந்திருவுடலில் விரைகளபங்கொண்டழுத்தி
வேதக்குருக்களுக்கு மேதினியிற்செய்முறைமை
நீதிப்படிசீஷர் நேசமுடனேபுரிந்து
கண்ணருவியோடக் கதறிக்கலங்கிமனம்
எண்ணமுற்றுத்தங்களிலே என்னசொல்வாரம்மானை
எங்கேகொண்டேகிடினு மேற்றதிருவுடலை
அங்கிருக்குமீசர் அநியாயஞ்செய்வார்கள்
முன்னுமெமதாசரியன் முத்திவழிநடத்தி
பொன்னவர்கள்கண்டுமிகப் போற்றுந்தினகரத்தை
கன்னிமரிதாயார்க்குக் காரணமாய்ச்செய்தநகர்
மின்னுமெஸ்பாஞெவெனும் மிக்கதிருப்பதியில்
ஆலயத்துட்பொதிந்த அஞ்ஞானர்காணுமல்
வாலக்கதிர்மறைந்து வையமிருண்டதற்பின்
தேகத்தையேந்தித் திரையில்வருந்திமில்மேல்
போகுவோமென்று புறப்பட்டாரம்மானை

திருவுடலைக் கொம்பெஸ்தெல்லவென்னும் பட்டினத்திற்குக் கொண்டுசென்றது.

விருத்தம்

அருஞ்செருசல் நகரிதன்னிற் சாற்பவேன்னு
மழகுபதி யானவவ்வூர்த் துறையிலங்கண்

இருந்தவுருத் தனைத்திருத்திச் சொடித்தன்பா
யினியகம்ப மாலாநுத்து மியற்றுயாவும்
வருந்துகம்மக் காரருடன் மிதவைக்கான
வகைகளெல்லாம் நிறைத்துமுத்தன் மணித்தேகத்தைத்
திருந்தவேடுத் தேவைத்துப் பாயைத்தூக்கித்
திரையானின் றிசைநாடிச் சென்றூர்மன்னே. 62

பொங்குகடற் றிரையொலியு முருவிலேறிப்
பொகுமன்பர் புகலொலியும் புதுமையாக
அங்கிருக்குந் திருக்காய மதனைச்சூழ்ந்த
வாஞ்சுகளின் பாட்டொலியு மனந்தமாகி
எங்குமுறு பெருஞ்சிறப்பா யுவரிமீதி
லின்பமுட னவர்தெற வுலவைவீசு
மங்கலசோ பனங்கள்சொல்லி வங்கத்தோடு
மாதவன்றன் றிருவுடலைக் கொடுசென்றாரே. 63

அம்மானை

அட்டதிக்கும்விண்ணு மகிலமுழுதுமொன்று
யெட்டாதநீதி யிறைவன்றிருவுளத்தால்
சற்குருவாம்யாக்கோபின் தங்கத்திருவுடலை
துற்குணத்தோர்வாழுநகர்த் துங்கச்செருசலையில்
சொற்கதித்தசாற்பவென்னுந் தூயபதித்துறையில்
நற்குணத்தோர்கொண்டுவந்து நல்லவுருத்தேடி
தங்குந்தருவாற் சமைத்தமரக்கலத்தை
அங்குகண்டெண்ணெயகி லானவகைச்சாந்து
கொண்டழுத்திநன்றாய்க் குலவுமணிக்கோலமிட்டு
அண்டர்சந்நியாருடலை யங்குவைக்கவேணுமென்று
பட்டுப்பணியதிக பஞ்சவர்னக்கூறைகொண்டு
சிட்டருடலிருக்கச் சிங்காரமாகவங்கே
கூடாரமிட்டுக் குலவுங்கொடிதூக்கி
வாடாமனத்தவரும் வளர்நவங்கொண்டாட
பாய்பருமல்தண்டு பளிங்குக்கடிகைசுக்காண்
தூயகயிறுகம்பஞ் சுற்றுவடமாலாத்து
நங்கூரக்கல்லும் நவிலுகின்றசீனியுடன
அங்கேசவதரித்து ஆனகம்மக்காரர்வந்து
தண்டயல்கிலாசு தனித்தபெருமாலுமியும்
உண்டானமுக்கதமு மோதுஞ்சிறுங்குடனே
பஞ்சிவியுங்கூட்டிப் பரவைதனிலோடுமுரு
தஞ்சமெனவிறைவன் றன்னைநினைந்தோதி

வற்றுப்பெருக்கறிந்து வங்கமதிலேறி
சுத்தன்றிருவுடலைச் சுதானமாகவைத்து
மேலாஞ்சான்காலாஞ்சான் மேலிருக்குங்காவியுடன்
ஆலாத்துடன்கடற்பா யன்பாகவேதூக்கி
வாறுகோசூண்டி மறுகூண்டிகம்பமுடன்
ஏறுபாய்தூக்கி இயல்பாகவோடலுற்றார்
முன்னணியும்பின்னணியும் முன்தட்டுவாரிவங்கும்
எண்ணமுடனங்கங் கிருந்துசலாங்கூறி
தாமானுங்கோசுந் தறுகாமலங்குநல்ல
ஆமாங்கறிவோ ரடைவாயருகிருக்க
எத்துமதிதாங்க மிருமுகரியோடுசிந்து
தத்திவிழநீர் தருப்பிடித்தப்பாய்களெல்லாம்
மீகாமன்றன்கணக்காய் வெங்கடலையூடறுத்து
வாகானகாற்றுவிழ வங்கமதுஓடியதே
வெண்டலிஞேசை வெகுண்டுவிழுங்காற்றினிசை
அங்கிருக்குஞ்சுத்தரிசை ஆஞ்சுகளின்பாடலிசை
எங்குமுழங்க இறைவன்றிருவருளால்
துங்கமுறுங்காயஞ் சோதியொளிவீச
கம்மவாரெல்லாங் கனகமணித்தண்டெடுத்து
தம்மில்மிகப்புகழ்ந்து தங்களிலேசோபனமாய்
எம்பாவந்தீரவந்த இறைவன்றனையிறைஞ்சி
அம்பாவுஞ்சொல்லி அலைவாய்வலிக்கலுற்றார்
முன்னாளதஞ்செய் முதுவினையால்மூவுலகுந்
தன்னாற்படைத்த சருவேசுரன்மனுவாய்
வந்தவிதம்பாடி மாமரியாளைப்பாடி
முந்துதவக்கன்னிபெற்ற முதல்வன்பதம்பாடி
பொன்னுலகால்மண்ணில்வந்த புத்திரனுமுத்தமனும்
இந்நிலமேற்பட்ட இடர்களையுந்தாம்பாடி
அன்பரெனும்முன்னாங்கு அப்போஸ்தலர்களிலே
வன்பனெனும்யூதசுசெய் மாகொடுமையும்பாடி
செங்கரத்தைச்சங்கிலியாற் சேர்த்தவிதம்பாடி
அங்கத்திற்பட்டவடி ஐயாயிரம்பாடி
முள்ளின்முடிபாடி மூங்கில்தனைப்பாடி
கள்ளர்கள்போற்கட்டுண்ட கற்றூணையும்பாடி
ஏணியைவெண்டுகிலை எங்கோனையும்பாடி
ஆணியைப்பாடி யருங்குருசையும்பாடி
ஈட்டியோடங்கத் திருக்குந்திருமுறிவைத்
தோட்டியுறுகல்லறையைத் துப்பட்டியைப்பாடி

சேயோதபருஞ் சிறையிலிருந்தழுந்துஞ்
தூயமுனியோர் துயர்தீர்த்ததும்பாடிக்
கர்த்தனுயிர்த்ததுவுங் காட்சிகொடுத்ததுவும்
சுத்தர்விண்ணின்வாசற் றுறந்ததுவுந்தான்பாடித்
தந்தைவலத்திருந்து தாலமழியுமந்நாட்
பந்தமுள்ளோரஞ்சிவிழப் பாக்கியமுள்ளோர்மகிழ
மைந்தன்கிறீஸ்திறைவன் வானோர்புடைசூழ
வந்துநடுவுரைக்கும் வண்மைகளையும்பாடி
அங்கையிற்றண்டால் அலைவலிக்குங்கம்மாறர்
தங்களிலேசம்மதித்துச் சாற்றுவதைக்கேட்டருளும்
ஒப்பில்லாநீதி ஒருவன்றனக்குவந்த
அப்போஸ்தலராம் அரியசந்தியாகுதன்னைக்
கொன்றுனேரோதையந்தக் கொற்றதிருவுடலைச்
சென்றெடுத்துநாங்கள் இருந்துமெஸ்பாஞ்யவுக்குப்
போறோமெனப்பாடிப் பொங்குகடலிலுள்ள
ஆறுஞ்சுழிநீரும் அங்குறும்பாருங்கடந்து
வாழுந்திருநகராம் வண்மையெஸ்பாஞ்யவுக்கு
சூழுந்துறையான தூயகொம்பெஸ்தெல்லவென்னும்
பட்டணத்திற்சேர்ந்து பழுதில்லாச்சுத்தகுரு
விட்டிறங்கியங்கிருந்தார் மேன்மையுடனம்மானை

NALLUR SWAMI GNANAPRAGASAR O. M. I. LIBRARY
"Thodarbah..."
657/1, Hosp. Rd.
Jaffna
No.

உடலடக்க லோப்பாளிடம் அனுமதிபெறச்சென்றது.

விருத்தம்.

இம்பருடன் வானுலகுந் தானுயாளு
    மேகபான் றிருவுளத்தாற் செருசல்நின்று
வெம்பிவிழுங் கனகாற்றுங் கடலும்நீங்கி
    வேதபரன் சீஷனியாக் கோபுதேகம்
நம்பியதோ ருருவுடனே கொம்பஸ்தெல்லாம்
    நகரியிலே வந்ததினு லவர்தன்சீஷர்
அம்புவியிற் றிருவுடலை யடக்கவேண்டி
    யங்கிருந்தே யெண்ணமுற்ற தறைகுவாமே 64

இக்கடலுங் கனகாற்று முவரிமீதி
    னிடறுகளு மங்கிருந்த கொடியர்தீங்கும்
விக்கினமெல் லாம்நீங்கித் தேவசீஷன்
    மேன்மையுள்ள திருவுடலைக் கொண்டே யன்பாய்ச்

சிக்கெனவே வந்தடைந்தார் பாடியாளுந்
தெரிவையினுத் தாரமின்றி யடக்கவொண்ணா
தக்கொடியா ளுத்தாரங் கேட்கமுன்ன
மரியதிரு வுடலதனை யிறக்கினாரே 65

திருந்துமுடல் தனையிறக்கி யன்போடேந்திச்
சிட்டரொரு கல்லதனிற் சென்றேவைக்க
அருந்தீயி லிடுமெழுகு முருகுமாப்போ
லானகல் லிளகியன்பன் றிருக்காயத்தைப்
பொருந்தியிறக் கிற்றங்கே யுள்ளோரெல்லாம்
புதுமையென வேயிறைவன் றனைப்போற்றி
இருந்துமகிழ் வாகவே நகரமாளு
மேந்திழையின் றிசைநோக்கி யெய்தினாரே 66

மங்கையிடம் மாதவத்தோர் நாடிவந்து
வரலாற்றை யுரைத்தார்கள் வஞ்சமானாள்
அங்கவளுந் துறவோரைக் கண்டேநெஞ்ச
மழன்றுதவத் தேகமங்கே யடக்கொட்டாமற்
சங்கைபுரந் தரசாயெஸ் பானுவாளுந்
தார்வேந்த னிடம்போய்நீர் விடையைக்கேட்டுத்
துங்கவுடல் தனையடக்கு மென்றேசொன்னாள்
துர்க்குணமே நிறைவான லோப்பாள்தானே, 67

அம்மானை.

அப்புங்கனவரையும் அண்டவுயிரனைத்தும்
எப்பொழுதுந்தானாளும் ஏகன்றிருவருளால்
வஞ்சகங்காணாத மாதவத்தியாக்கோபின்
மஞ்சத்திருவுடலை வங்கமதிலேயேற்றிக்
காற்றுங்கடலுங் கனதுயருந்தான்நீங்கி
ஏற்றிடுமெஸ்பாஞ்ய என்னுந்திருநகரில்
வேடிக்கையாக விளங்குகொம்பஸ்தல்லவெனும்
பாடிப்பெருந்துறையிற் பாக்கியத்தோன்றன்னுடலைக்
கொண்டுவந்தார்சீஷர் குறிப்பானவோடமுடன்
எண்டிசையும்போற்ற இருந்துவிசாரமுற்றார்
எவ்விடத்துமோடாமல் இந்தவுடலோடமுடன்
எவ்வையுற்றுவந்ததிங்கே கர்த்தன்றிருவுளத்தால்
இப்புரத்தையாளும் இயல்பானலோப்பவென்பாள்
ஒப்பமின்றிச்சிட்டன் உடலடக்கவொண்ணாது

005236

மங்கைகொடியாள் மனதிரக்கமில்லாதாள்
இங்கவளுமிவ்வுடலை என்னசெய்வாளென்றறியார்
ஆதிதிருச்செயலை அன்பாயகத்துள்வைத்து
நீதித்திருவுடலை நேசமுள்ளோர்தானெடுத்து
ஆனந்தமான அகமகிழ்ச்சிதன்னுடனே
தானஞ்சிறந்த தருமத்திருவுடலை
அங்கேயிருந்த அழகியகல்லதின்மேல்
மங்களங்கள்பாடி மகிழ்ந்துவைத்தாரம்மானை
மாதவத்தோன்றுய்ய மணிக்காயம்வைத்தகல்லு
ஏதமறத்தீயி லிடுமெழுகுபோலுருகி
அங்கத்தையுள்ளே யடக்கியதேயம்மானை
சங்கத்தவத்துரியோர் தக்கபுதுமைகண்டு
எல்லாருங்கொண்டாடி இன்பம்மிகவாகிச்
சொல்லரியவங்கமதைச் சுத்தமுடனங்குவைத்து
அன்னகரியாளு மரிவையுலோப்பவிடம்
உன்னிவந்துமாதவத்தோர் ஓதுமொழிகேளீர்
தேடிவினைகடந்து செங்கோல்முறைநடத்திப்
பாடிதனையாளும் பண்புடையராக்கினியே
ஆறிரண்டாம்வயதில் அரியதற்கம்வென்றகர்த்தன்
கூறிரண்டாறான குலவுதவப்புத்திரரில்
நேசமுமன்பும் நிறைந்தவியாக்கோபு
ஆசுள்ளார்கையால் அரும்பொருளுக்காய்மரித்து
பொன்னுலகஞ்சேர்ந்தார் புகழோன்றிருவுடலை
இந்நிலமேற்கொண்டுவந்தோம் ஏகன்றிருவருளால்
கற்றவியாக்கோபு காசினியிற்றேகமுடன்
உற்றதிருவேதம் ஓதுகின்றநாளையிலே
வேந்தர்குலக்கொடியே மேதினியில்மாதரசே
போந்தேயடிபணிந்து போற்றாதிருந்தாலுந்
தேகத்தைநீரும் தெரிசிக்கக்கொண்டுவந்தோம்
ஆகத்துநாம்மகிழ்ந்து அன்பன்றிருவுடலைக்
கையேற்றுக்கொள்ளுங் கனகமுடிபுனைந்து
வையகத்தையாளும் மயிலேயெனமொழிந்தார்
அங்கவர்கள்சொல்ல அரிவையுமென்னசொல்வாள்
சங்கைத்தவத்தோரே சற்குணத்தோரானவரே
துங்கமுறுயாக்கோபின் சோதிவடிவுடைய
அங்கத்தையிங்கே அடக்கிடவேணுமென்றால்
என்னுத்தரம்போதா தெஸ்பாஞ்யவினிறைவன்
தன்னுத்தரமுந் தரவேணுமென்றுசொன்னாள்

மங்கையவளுரைத்த வஞ்சகத்தையெண்ணுமற்
சங்கந்தனக்குரிய சற்குணத்தோரெல்லோரும்
வாடிமனந்தளர்ந்து வஞ்சமின்னாள் சொன்னபடி
தேடியேயெஸ்பாஞ்ய செகக்கோல்நிருபனிடம்
போகத்துணிந்து புறப்பட்டாரம்மானை
ஏகும்விதமிருக்க இன்னுமொருகாரணத்தை
ஓதுகிறேன்சற்றே உவந்துமனமுணர்ந்து
ஏதமறும்பெரியோர் இன்பமுற்றுக்கெட்டருளீர்
துய்யனந்தச்சூரியனுஞ் சுத்தகிறீஸ்துவுடை
வெய்யகிரணமெனும் மெய்த்தவவப்போஸ்தலரில்
நீதியுமன்பும் நிறைந்தவியாக்கோபு
ஆதிதனக்காய் அரியவுயிரிழந்து
சீஷரும்நீதி திருந்துந்தவத்தோரும்
வேஷக்குருக்களுடன் மெய்த்தவருமில்லாமல்
மண்மீதிலேதனியே மகிமையுடல்கிடக்க
விண்மேற்கொலுவிருக்கும் வேதன்மனநினைந்து
வாரிக்கரையில் மணிக்காயங்கல்லுடனே
தாரித்திரமாய்த் தனியேயிராதபடி
வானோரைநோக்கி வளர்சந்தியாகுவுடை
தானத்திருவுடலைச் சங்கைபண்ணுமென்றுரைத்தார்
ஆதியுரைத்தபடி அண்டநின்றுதாலமட்டுஞ்
சோதிக்கனகமதாற் றாயநல்லவேணிவிட்டு
எண்ணடங்காச்சூரியன்போல் ஏற்றகிரணவொளி
கண்ணடங்காமற் கனத்துப்புடைசூழச்
செங்கரத்திற்றழையுந் தீபச்சுடர்பலவும்
அங்கேயனந்தம் அணியணியாய்த்தாமேந்திக்
கீதத்தினோசை கிளரோசைகின்னரங்கள்
வேதத்துக்காய்மரித்த மெய்யைப்புடைசூழ
ஒன்பதுகூட்ட ஒழுங்கானவானவர்கள்
இன்பநலம்பாடி ஏகபரிபூரணமாய்க்
கல்லோடிருக்குங் கனகத்திருவுடலை
எல்லாருஞ்சூழ்ந்து இதயங்களிகூர்ந்து
ஆனந்தசோபனங்கள் அங்கவர்கள்கொண்டாட
மானந்தவநீதி வண்மையுள்ளமாணக்கர்
கானலுங்காடுங் கடுவழியுங்கல்லுமுள்ளும்
வேனலுந்தான்நடந்து மெத்தமனஞ்சலித்துப்
பாதங்கள்நோகப் பசிதவனந்தன்னுடனே
காதங்களெண்ணிக் கடந்துசென்றாரம்மானை

ஆறுஞ்செடியும் அடர்ந்துநிறைந்திருக்குங்
கூறும்வழிகடந்து கொற்றவன்றன்வாசல்புக்கார்

எஸ்பாஞ அரசனின் அரசியல்:

விருத்தம்'

மங்கையுரை தவறும லறத்தோர்தாமே
திப்புறெஸ் பாஞரசன் மகிமைநோக்கி
அங்கவரும் புனல்கான லடவிநீங்கி
யாறுகடந் தேதவத்தோ ரங்கேசென்றார்
துங்கமுடி புனைந்துலகம் புரக்கும்வேந்தன்
றுருகுதிபரி வாரமொடு துலங்கிவாழுஞ்
சங்கைகளுஞ் செம்மலுடை நெறியுங்கேட்டாற்
றாரணியோர் கடுக்கமுற்றுத் தயங்குவாரே 68

பொன்மகுடஞ் சிரத்திலணிந் தொருகோலோச்சிப்
புவிபுரக்கு மெஸ்பாஞ நிருபன்போல
இன்னிலமே லாருமுண்டோ வவன்றன்கீர்த்தி
யியம்பவென்றால் நாவிஞ லிசைக்கலாமோ
தன்னிகரில் லாதரசன் கொலுமேலேறித்
தலமனைத்தும் புகழ்விளங்கச் சங்கைமேவ
அன்னவன்றன் பெயர்கேட்டோ ரஞ்சிநிற்க
வவனியா சர்களிறைஞ்ச வரசாண்டானே 69

பொன்மணியால் வேய்ந்தவரி யணையிலேறிப்
பொற்கதிர்போன் முடியிலங்கப் புகழேயோங்க
நன்மைமனத் துணாமற் புவியில்வாழ்வை
நம்பியண்ண லகமகிழ்ந்து சபையில்மேவும்
முன்னமைச்சர் கலைவாணர் முனைவல்லோர்கள்
முந்துபா தாரவிந்தம் முறையாய்ப்போற்றத்
தன்மமற்ற கொடுவினையும் பவத்தால்வாற
சஞ்சலமு மறியாமற் றாணியாண்டான் 70

அம்மானை.

விண்ணோரும்மண்ணோரும் மெத்தவருங்கொண்டாடக்
கண்ணாரமோசேசு கண்டுகளிகூரக்
கண்டதருவிற் கனல்மூண்டெரிந்தாலும்
பண்டுதுளிர்கருகாப் பற்றுநவம்வைத்தபரன்
சன்னிதியில்நாளுந் தருமம்விளைத்திருக்கும்
முன்னவன்யாக்கோபு முத்தித்திருச்சீஷர்

செங்கோல்முடிவெந்தன் சீர்வாசல்வந்துநிற்கத்
துங்கன்கொலுவிருக்குந் தூய்மைகேளம்மானை
கூடும்பெரும்புகழாய்க் கோலமுடிதரித்து
ஓடும்புவியை ஒருகுடைக்கீழாங்கவைத்து
ஊருங்குடியும் உறவும்பெருங்கிளையும்
பேரும்பவுள்சும் பிரதானமுமமைச்சும்
வேற்றானைவாட்டானை விற்றானைவெம்பரியின்
போர்த்தானையோடு பொருவோர்புடைசூழ
மாறுகொண்டமன்னர் மனதிலிடியேறெனவே
ஆறிரண்டான அரசியல்புதன்னுடனே
உப்பரிகைதன்மேலே உயர்ந்தமணிக்கோபுரத்தில்
ஒப்பில்லாமன்னவனும் ஓலக்கம்பார்த்திருக்க
ஆணிப்பொன்செம்பவளம் ஆனநவமணியால்
மாணிக்கத்தாலே வளர்த்திட்டமாளிகையில்
அன்னவுஞ்சல்பொன்னினுஞ்சல் அங்கங்கணியணியாய்
மின்னனையார்தங்களிலே வேடிக்கைகொண்டாடப்
பல்லாண்டுபந்து பரதவிதநடனம்
வல்லோர்புரிய மனமகிழ்ந்துமன்னவனும்
இப்புவியில்வாழ்வை இழவாதஎண்ணமுற்றுத்
தப்பறையும்வஞ்சத் தவறுந்தறுகணையும்
உண்டாக்கும்பேயை உவந்துமனத்தாசரித்துக்
கண்டோர்மதிக்கக் களிகூர்ந்துவீற்றிருந்தான்

எஸ்பானு அரசனின் சீற்றம்.

விருத்தம்.

மன்னவனுங் கொலுவிருக்க மகிழ்ச்சியோடு
மற்றுமுள்ள நூல்வல்லோ ருருகுசூழப்
பொன்னுலகோ டிந்தமண்ணும் புரந்துதானுய்ப்
பொருளனைத்தும் படைத்துக்காத் தழித்தல்செய்யும்
முன்னவனுக் கதிகநண்பன் சந்தியோகாம்
மூத்தனுக்கு மிகுநேச முள்ளசீஷர்
தென்னர்மன்னன் வாசல்வந்து காவலர்க்குத்
திடமாக வேயுரைக்குஞ் செய்திகேளீர் 71

வேற்றரசர் கெடிபுகுத வொருகோலோச்சி
மேதினியெல் லாஞ்சிறக்கப் புகழைநாட்டி
மாற்றலரை யொடுக்கியே யுலகையாளும்
மன்னவன்றன் வாசல்தங்கும் மகிமையோனே

காற்றழலம் புவிபருதி கடலுமாக்குங்
கடவுளுக்கேற் றிடுசெந்தி யாகின்சீஷர்
போற்றுமுன்றன் வாசலிலே வந்தாரென்று
பூபாலன் றன்னிடம்போய்ப் புகலுமென்றார் 72

துறவோர்கள் வந்துசொல்ல வாசலாளன்
றுங்கமன்ன னிடமேகி யடிகள்போற்றித்
திறவோர்மெய்ஞ் ஞானிசந்தி யாகின்சீஷர்
தேவரீர் வாசலிலே வந்தாரென்ன
அறவோரை யிங்கழையு மெனவேயண்ண
லன்னவனு மவர்களைத்தா னரசன்பக்கல்
மறவாது வருத்தவவ ரவனைவாழ்த்தி
வந்தவரல் வாறதெல்லாம் வசனிப்பாரே 73

இந்நிலமெல் லாம்புரக்கு மேந்தலேறே
யெங்களுடை யாசரிய னியாக்கோவென்பான்
முன்னதஞ்செய் பிழைதீர்க்க மண்ணில்வந்த
முதல்வனுக்கா யேரோதை கையால்மாண்டு
பொன்னுலகஞ் சேர்ந்ததினு லவர்தேகத்தைப்
பொருந்துதிமில் தனிலேற்றிக் கொமபஸ்தெல்ல
தன்னில்வந்து மங்கையுரை கொண்டுநாங்கள்
தரணிபனே யுன்னிடத்தில் வந்தோமென்றார் 74

இத்தேகந் தன்னையுநீர் தெரிசித்தன்பா
யெமைப்புரந்தோன் றிருவேத மியல்போடேற்றுச்
சுத்தவுடல் தனைச்சிறப்போ டடக்கவேதான்
றுங்கமன்ற வனுபாதந் தருவாயென்ன
ஒத்தமடங் கற்றவிசி லுற்றவேந்தன்
ஓகோவி தென்னசொன்ற ருலகமீது
எத்தவந்தா ரென்னையென்று சீற்றமுற்று
இருந்தவுடன் கோபமுற்ற னிணையில்லாதே 75

அம்மானை.

முச்செய்கைமுக்கால மூவுலகுந்தானுகி
அச்சந்தவிர்க்கவந்த ஆதிதிருவருளால்
நேயனுடைசீஷர் நீண்டமுடிமன்னனுடை
தூயமணிவாசலிலே தூங்காதுநித்தியமும்
வந்துமுறையிருக்கும் வாசலாளன்றனக்குச்
சுந்தரவாய்திறந்து சொற்லுவர்காணம்மானை
வேற்றரசரோடே விளங்குந்திருச்சீஷர்
போற்றமுடிபுனைந்த போர்வேந்தன்பக்கலுக்கு
வந்தோங்கருமமுண்டு வாசலோய்சொல்லுமென
அந்தவுரைகேட்டு அங்கிருக்குங்காரியவான்

சன்னாசிமார்களுக்குச் சங்கைபுரிந்தபின்னர்
மின்னுமுடிபுனைந்த வேந்தன்சமுகமதிற்
சென்றுஅடிபணிந்து தெண்டனிட்டுவாய்புதைத்து
நின்றவனுமங்கே நிகழ்த்துவானம்மானை
எத்தலமுங்கெஞ்சியஞ்ச ஏற்றதிருக்கரத்திற்
சித்திரவாளேந்திச் செகம்புரக்குந்தேர்வேந்தே
விண்ணப்பங்கேளும் விளங்கிடுமுன்வாசலிலே
எண்ணப்படாதவங்க ளியற்றுங்குருக்கள்சிலர்
பீறலுடுப்பும் பெருநரையுந்தோற்றமுற
ஆருச்சலிப்புடனே ஆகமிகத்தளர்ந்து
செங்கரத்திற்புத்தகமுஞ் செய்யதிருச்குருசும்
அங்கவர்கள்கொண்டு அரசேயுமைக்காண
வந்தார்கள்வாசலிலே வண்மையுடனங்குவைத்து
இந்தமொழியுரைக்க இங்குவந்தேனென்றுசொன்னான்
வேந்தனதுகேட்டு மேன்மைத்தவத்தோரைப்
போந்தழையுமென்று புரிந்தானுத்தாரமது
மன்னனுரைகேட்டு வாசலோன்மீண்டுவந்து
சன்னாசிமாரைச் சடுதியழைத்தேக
அங்கங்கிருக்கு மணிவாசலத்தனையுந்
தங்காமல்மன்னன் சமுகத்தைவந்துகண்டு
கோலம்புனைந்து கொலுவிருக்குங்கொற்றவனைத்
தாலமுதலாந் தலமனைத்துந்தானான
கர்த்தன்கிருபையினாற் காசினியில்நன்மைபெற்று
வர்த்தித்துவாழியென்று வாழ்த்தினார்அம்மானை
ஆசறுபாத மடைவாயுபசரித்த
மாசறுயாக்கோபின் மாணாக்கர்தங்களையே
தீட்டுமரசன் சிறக்கமகிழ்ந்திருந்து
நாட்டத்தைநோக்கி நவிலுவானம்மானை
இங்குவந்தீர்நீரார் எமதிடத்திற்காரியமென்
சங்கைத்தவத்தோரே சாற்றுமெனமொழிந்தான்
மன்னனுரைக்க மகிமையுள்ளமாணாக்கர்
உன்னிவந்தகாரியத்தை ஓதலுற்றாரம்மானை
வானமும்மண்ணும் வரையுந்திரைகடலுந்
தானேபடைத்த சருவதயாபரனாய்
இப்போதுமெப்போதும் எங்கும்நிறைந்தவனும்
ஒப்பேதுமில்லா ஒருவன்றிருச்சுதனார்
மண்மேலுருவெடுத்து வந்தநாளாறிரண்டு
என்னுந்தவத்தோரை இன்பமுடனழைத்து

அப்போஸ்தலரே அனைவருக்கும்போதுவித்து
இப்புவியில்மாசகற்றி எல்லோருமீடேற
வேதம்விளக்கியிந்த மேதினியில்நீரிருந்து
ஆதரவாய்விண்ணி லடையுமென்றாதலினால்
அப்பரிசேயாறிரண்டு அன்பர்களில்யாக்கோபு
இப்புவியில்வேத மியல்பாகவேநடத்த
நாளும்நரகில் நடுங்கியவியவென்று
கூளிகொடுங்கிரியை கொண்டிருக்கும்மாபாவி
ஏரோதையென்னு மிராசன்கொலைவிளைக்க
சீரோடுமோக்ஷத்திற் சென்றார்காண்மன்னவரே
எங்கோனருகி லிருக்குமியாக்கோபுவுடை
துங்கத்திருவுடலைத் தோணிதனிலேற்றி
கொம்பஸ்தலான குலவுநகர்த்துறையில்
அம்பரத்தோன்றன்னருளா லன்பாகவேயெடுத்து
அப்பதியையாளு மரிவையுலோப்பவிடம்
தப்பறவேகொண்டுவந்தோந் தாசன்றிருவுடலை
அங்கடக்கமுன்னமந்த ஆயிழையாள்சொற்படிக்கு
இங்கேயுமக்குரைக்க ஏந்தலேவந்தோம்நாம்
ஆதிதிருவேத மன்பாய்விசுவசித்து
நீதித்திருவுடலை நேசமுடனேயடக்க
உத்தரவுதாருமென ஓதக்கொடியமன்னன்
சித்தம்வெகுண்டானச் செய்திகேளம்மானை

அரசன் சிறையிடலும் தேவதூதன் நீக்கலும்.

விருத்தம்.

விண்ணிருந்து திருமுனிவால் நரகில்வீழ்ந்த
வெங்கபடப் பேயுடைய மிகுத்தபாவம்
பண்ணெழுங்கை யகத்தாக்கிக் கொடுமைமேலாய்ப்
பரனருளை நினையாத பாவிவேந்தன்
மண்ணெழுங்கி னாசையெல்லாம் நீத்தோர்தன்னை
வன்சிறையில் வையுமென்றான் வஞ்சர்கூடி
கண்ணடங்கா வாதையுடன் சிறைக்கூடத்தே
கற்றவரைக் கொடுசென்றார் கருத்தினோடே 76

செய்யகரங் கால்கள்தனி லரசன்சொற்போற்
றிருந்துதளை தனைத்தொடுத்துச் சேமக்கூடம்
ஐயமற வங்கிருக்குங் கதவுதாளிட்
டருங்காவ லாளரெல்லா மடர்ந்துகாக்க

துய்யவமை வொடுபொறுதி யுறுயாக்கோபின்
தங்கமா ணவர்சேமத் திருப்பதாலே
வையமுள்ளோ ரையோவென் றபலமாக
மனதிரங்கி னாவர்கள் மகிமைகேளீர் 77

மங்காத நீதிநெறி யாக்கோப்பென்னும்
மாதவன்றன் றிருச்சீஷர் வருந்தல்கண்டு
எங்கோனுங் கிறீஸ்திறைவ னிரக்கமுற்று
இம்பருறை யெழிலாஞ்சு மாரையேவ
அங்கேவந் திாவுதனி லாஞ்சுமார்கள்
அரசனிடுஞ் சேமமெல்லா மழித்தேயன்பாய்
இங்கேநீர் காவலிலே யிருக்கவேண்டாம்
எழுந்தேநீ ரேகுமென வியம்பினரே 78

வானமதால் வந்தாஞ்சு காவல்நீக்க
மாதவத்தோ ரவ்விரவில் விடைபெற்றேக
ஆனபனிப் பகையுதித்த பின்னரந்த
அரசன்முன் சிறைக்கூடங் காத்தோர்சென்று
மீனவனே விழிதுயின்ற நேரமந்த
மெய்த்தவத்தர் விரைந்துசென்று ரென்றசெய்தி
ஈனவா சன்கேட்டு மனம்புழுங்கி
இருந்தவனுஞ் செய்தவஞ்ச மியம்புவாமே 79

அம்மானை

பொன்னுலவுமன்னவரே போற்றும்பெரியோரே
இன்னுமின்னுங்கேளு மியாக்கோபுடைகதையை
அன்னாட்பரலோகத் தாஞ்சாகநின்றவனை
தன்னுளிலவ்வேந்தன் சற்குணத்தைவிட்டொழித்து
சாவும்நரகிலுள்ள சஞ்சலமுமெண்ணுமல்
கோபமிகவெகுண்டு கொதித்துவிழிசிவந்து
எங்குலத்துமூதாக்க ளிக்காலமாகுமட்டும்
இக்குரைத்தகாரணங்க ளேதென்றறியார்கள்
என்னூர்பதியு மெனதாணுந்தான்கடந்து
சன்னாசிமார்கள் சலிப்பின்றியிங்குவந்து
புத்தியுமன்பும் புகழும்புகன்றுநம்மை
எத்தவந்தாரென்றுசொல்லி ஏந்தல்சினந்தெழுந்து
கத்துகடற்புவிக்குட் கண்டோர்கலக்கமுற
இத்துட்டரைக்கொலுமென் றியம்பினாரம்மானை
இசங்கோல்நிருபன் சினந்துரைத்தசெய்திகண்டு
அங்கேயிருக்கு மமைச்சரெழுந்திருந்து

தானையுற்றவெம்போர்த் தரியலர்கள்தம்மைவென்று
ஞானிலத்தையாளும் நரபாலாகேட்டருள்வாய்
மின்னுந்தவத்துயர்ந்த மெய்ஞ்ஞானயோகினை
மன்னவனேகொல்லவென்றால் மாபெருமையோவுமக்கு
மன்னர்க்கழகு மறுத்துவருங்காரியங்கள்
உன்னியுடனே யுணருவதுநீதமல்ல
மெய்பொய்யறிய விளங்குஞ்சிலநாளால்
ஐயந்தவிர்ப்போம் அருந்தவரையவ்வளவுங்
காவலில்வைத்துக் கபடுகண்டால்நீத்தோரை
ஏவியுயிர்பறிப்ப தேந்தற்கியல்பெனவே
மந்திரிமாரெல்லாரும் மனதிரங்கமன்னவனும்
இந்தமுனிவோரை யிட்டுவையுஞ்சேமமென்றான்
வேந்தனுரைக்க விடைகொண்டேவல்செய்வோர்
போந்ததவத்தோரைப் புன்மைமிகப்புரிந்து
மெய்க்காவல்செய்து மிகுந்தகரோமுடன்
கைக்காவலோடு கடுஞ்சேமக்கூடமதில்
கொண்டுசென்றுதீவிரத்திற் கோலமுனிவருக்குக்
கண்டோரிரங்கக் காங்காவிரும்புகொண்டு
செய்தவிலங்கு திரளாகநாலாறு
கையினுலிட்டிறுக்கிக் கற்றவரைச்சேமமிட்டு
தாளிட்டடைத்துத் தறுகாமற்காவல்வைத்து
வாள்தொட்டவீரர் வருந்திவிழித்திருந்து
தேயுவும்நீருஞ் சிறந்தவுயிரனைத்தும்
வாயுவும்போகாமல் வன்காவலாயிருந்தார்
தீயரிடுஞ்சிறைக்குட் சிட்டர்சலியாமல்
தூயகரங்குவித்துச் சோதிதனைநினைந்து
ஓதிவணங்கி யுவந்தபொறுதியுடன்
ஆதிக்குவந்தவன்பா யங்கிருக்கும்வேளையிலே
விண்ணோன்றிருவுளத்தால் மேதினியில்வந்தாஞ்சு
எண்ணுங்குடதிசையி லேகியபின்சூரியனும்
சொல்லுக்கடங்காத சோதிச்சுடருடனே
அல்லிற்சிறையிருந்த அன்பரிடம்வந்தணுகி
காவலுங்கட்டுங் கடுஞ்சிறையுங்கால்விலங்கும்
எவலும்மன்ன னிடும்வினைகளானதெல்லாம்
பாரும்விசும்பும் படைத்தபரனருளால்
ஆருமறியாம லக்கணத்தில்நீங்கியதே
ஆஞ்சுகள்வந்து அருங்காவல்தான்நீக்கி
காஞ்சனவிண்ணிற் கடவுளிடமேகியபின்

நீத்தோர்விழிதுயின்று நித்திரையினுலெழும்பிப்
பார்த்தாப்போல்மெத்தப் பயந்தேயதிசயித்து
இக்காவல்நீங்கியது மிந்தப்புதுமைகளும்
எக்காலமுமான ஏகன்செயலெனவே
ஆகமகிழ்ந்து அறிவாளர்தங்களிலே
போகவிருள்நீங்கிப் பொங்குகதிர்தோன்றியதே
வாலக்கதிருதிக்க வன்காவலாளர்சென்று
கோலச்சிறையிருந்த கொற்றகுருமார்கள்
போனதினுல்மெத்தப் புதுமையிதுவென்றுசொல்லி
ஆனவர்களெல்லா மதிசயித்துநின்றுலும்
மன்னனுக்கஞ்சி மனங்கலங்கித்தங்களிலே
என்னசெய்வோமென்று இருந்தவருமெண்ணமுற்றுக்
கொன்றுலும்விட்டாலுங் கொற்றவன்றன்சித்தமென்று
வென்றியர்சனுக்கு விண்ணப்பஞ்செய்யலுற்றுர்
பார்த்திபர்களேறே பகர்சிறையில்நீத்தோரைக்
காத்திருந்தோமிவ்விரவிற் கண்ணுறக்கஞ்செய்தோம்நாம்
மாயமோவிஞ்சைகளோ வந்தவழிநாமறியோம்
தூயோரைக்காணோந் துலங்குபுரையதனில்
என்றமொழிகேட்டு ஏந்தல்சினந்தெழுந்து
நின்றவனுஞ்செய்தவஞ்ச நீதிகேளம்மானை

தேடிச்சென்ற வீரர் மாளல்.

விருத்தம்.

மன்னர்சேவடி வணங்கியந்தவா லாறுஏவலர்கள் வகைசொல
அண்ணல்கோபமொ டிருந்தெழுந்துகொலு அனல்களாகிமிகு புகையெழ
என்னதானெமது அரணிருந்தவர்கள் ராவிலேகுவது இவர்களை
இன்னமேயெமது மதிவல்லோர்களெய்தி யிங்குநீர்கொணர்தி யென்றனும் 80

தானைதானைபரி தேர்கள்கொடியொடு தறுகண்ணுண்மையுள்ள வீரர்கள்
சேனைகோடிபரி வாரமோடுமன்னர் திசைகளெங்கணு மனுப்பிட
வானநாயகர்தன் னேசமோடதிக மறுவிலாதவர்கள் வழிசெல
ஆனகாவலர்கள் பின்துடர்ந்தனர்க ளங்குவந்தநவ மறைகுவாம் 81

நெறியுளோர்கள்வழி முன்புசென்றுநதி நீண்டபாலமது நீங்கலும்
அறிவில்லா தமன்ன னங்கனுப்புபடை யானபாலவழி போகையில்
முறிவதாலவர்கள் தானையோடுவரு முனைவர்வீரரொடு மோதுநீர்
செறியுமாறதில் விழுந்துதுஞ்சினர் தேவனுதிதிருவுளமிதே 82

அம்மானை.

வாக்கால்மனத்தால் மனுடர்கிரியையினுல்
நாக்காலுரைக்கரிதாம் நன்மைநிறைந்திருக்கும்

ஆதிபரன்மேலே யன்பானசந்தியாகு
நீதிப்படிபுரிந்த நேசத்தைக்கேட்டருள்வீர்
மன்னன்சிறையிருந்த மாதவத்தோன்செய்திதனை
மின்னுமுடிபுனைந்த வேந்தனறிந்துமனம்
ஆறுக்கொடுங்கோப மங்கேபுகையார்க்க
மாறுக்கொலுவிருந்து மன்னனும்வாய்திறந்து
வன்சிறையிலிட்டேன் வருங்காவல்சூழவைத்தேன்
என்சிறையைவிட்டு இரவிலொளித்தவரை
இக்கணமேவீரர்சென்று எங்கேயும்போய்த்தேடி
மிக்கவரைக்கொண்டு விரைவிலிங்கேவாரீரால்
வீச்சினுலும்மை மிகையுறக்கொல்வேனெனவே
ஓச்சுந்திருக்கோலா லோங்கியுரைத்தபடி
காலாள்பரிதேர் கனசேனைகத்தியில்லு
மேலாட்கள்வீரர் வெகுண்டுவினைமுடிக்க
கொக்கரித்துத்தாண்டிக் குரவையிட்டுக்கூண்டவர்கள்
ஒக்கத்திரண்டு உணர்வோடுநாலுகாற்றும்
ஓடியர்டிப்பார்த்து உற்றதவத்தோரைத்
தேடியொருநொடியிற் சென்றுர்காணம்மானை
முன்போகச்சுத்தர் முடிக்கும்பகைநீசர்
பின்போயவர்களைத்தாம் பின்தொடர்ந்தாரம்மானை
ஏகிநெடுங்காதி மேகன்றிருவருளால்
ஆகியநீரோடுகின்ற ஆற்றருகில்வந்தடைந்தார்
அங்குறுந்துய்யவழி ஆறுகடந்தேறுவதால்
மங்காதபாலமிட்டு வைத்தனர்காணம்மானை
இக்கரையில்நின்று இயற்பாலத்தேயேறி
அக்கரையிற்சென்றுர் அருந்தவத்தோரம்மானை
ஆற்றங்கரையி லருந்தவத்தோரங்கிருக்க
மாற்றலர்களிக்கரையில் வந்துவிட்டாரம்மானை
ஏகன்றிருவருளால் இங்குவந்தமாற்றலாகள்
போகவென்றக்கரைக்குப் போய்ப்பாலமீதேறி
கொட்டுமுழக்குங் கொடியும்வெடியதிர
வெட்டும்படைவீரர் வேடிக்கையாய்வெகுண்டு
செம்பாதிப்பாலவழி செல்லுமந்தவேளையிலே
நம்பாதபாவி நரபாலன்சேனையெல்லாம்
பாலம்முறிந்து பரியும்படைமனுவும்
சாலநீள்தானையெல்லாந் தாழ்ந்தார்சமுத்திரத்தில்
முன்னுட்சலத்தாலே மூவுலகுந்தானறிய
மன்னோர்தனையழித்த வானவனைப்பொழு

தன்னேசனுன தவச்சந்தியாகுவுக்காய்
துன்னியநேசமுற்றுத் துலங்குமெஸ்பாளுரளும்
வேந்தன்படைகளெல்லாம் வெய்யபெரும்புனலால்
போந்தபரன்கொன்றசெய்தி பூபாலன்தான்கேட்டு
ஆகந்தளர்ந்து அறிவழிந்துசூழ்ந்தோர்க்கு
வேகந்தவிர்த்து விளம்புவானம்மானை

அரசனுக்கு மந்திரிமார் புத்திகூறியது.

விருத்தம்.

ஏமமோநேவ புருடராகமது மிட்டழுத்துகொலுவின்புற
நாமமேயுடைய வண்ணலேவிவிடு நரர்தடிந்தசெயல்நவில்வதால்
கோமனுகமது உள்ளயர்ந்துவெகு கொடுமையானதுமமைந்துமுன்
வாமமேயுடைய நூல்வல்லோர்களொடு மன்னர்கூறிடுவர்வாய்மையே 83

ஐயையோவென தமைச்சரேயரசு ஆள்வதேதெனதுதாள்வலி
வையமீதெளிய தாகுமோவருவ தானமாயமெதுவகையதோ
துய்யவீரர்பரி வாரமோடுமிகு தாயதானையர்கள்துஞ்சினர்
செய்வதேதுஎன வண்ணலோதமிசை சேருநூல்வல்லோர்களோதுவார்.

மன்னவாவிது வணங்தசோதியுடை வாறல்லாதுவேறுவகையதோ
முன்னமேயிறைவன் மோசேசானதவ முதல்வனேடுஅவர்பிதிரையும்
துன்னுவன்சிறையில் வைத்தவேந்தர்படை துஞ்சினார்நதியிலன்றலோ
அன்னபோலவிது தானுமானதென் றமைச்சர்வாய்மொழியறைந்தனர்.

அம்மானை.

செம்பொன்பசும்பொன் செழுந்தரளமோடுமணி
நம்பப்பதித்திலங்கும் நல்லசிங்காசனத்தில்
வாலக்கதிர்போல வல்லமுடிதரித்து
ஓலக்கம்பார்த்திருந்த உற்றஎஸ்பானுரசன்
தன்சேனையோடு தனக்குவந்தபேர்களெல்லாம்
வன்கொலையாய்ச்சிந்தி மடிந்தவிதங்கேட்டு
மின்னுதிடிவிழுந்து மெய்ம்மறந்தாற்போல்மயங்கி
தன்னகந்தைகுன்றித் தளப்பமுற்றுமன்னவனும்
சூழுமமைச்சரொடுந் துலங்குபெரியோருடனும்
கேளுமெனவண்ணல் கிளத்துவானம்மானை
உற்றூர்கிளைஞ ருறவுள்ளோருரிலுள்ளோர்
கற்றோர்குருக்கள் கலைவல்லோராகமிகள்
வஞ்சர்கொடியர் வலியுள்ளோர்மாளிகையோர்
பஞ்சப்பழிகாரர் பாவிகள்பாக்கியர்கள்

அந்தகாரதுலர்க ளாருமற்றோரம்புவியில்
முந்துபசிமிடிமை முன்னுதவியற்றோர்க்குஞ்
செங்கோலரசாகித் தேசந்தனைப்புரந்து
எங்கும்புகழோங்க வெண்ணமற்றுவீற்றிருந்தேன்
இன்னளிலிங்கே எனதிடத்தில்வந்தவந்தச்
சன்னுசிமார்செயலோ தம்பிரான்கட்டளையோ
என்னுல்வருவினையோ ஏதென்றுநாமறியோம்
முன்னுலெனது முறையுரைத்தமூதோரைச்
சேமத்தில்வைக்கச் சிறையாலொளித்தவர்கள்
ஏமத்தேபோனு ரிவரைப்பிடித்துவரத்
தானைபரிவாரந் தன்னையனுப்பிவிட்டேன்
ஆனவர்களெல்லாம் அடைந்தார்சமுத்திரத்தில்
கொய்யுளர்கள்வீரர் கொடிக்காரர்கொற்றவர்கள்
வையமதிக்கவல்ல மந்திரிகள்மண்டலிகர்
கொந்தப்படையின் கொடுஞ்சிலையின்வீரர்களும்
இந்தப்படியனேக எண்ணவொண்ணுச்சேனையெல்லாம்
மாண்டார்களாற்றில் வருபாலத்தேயறி
மீண்டுவரக்காணேன் வினையேதெனவறியேன்
ஏதென்றறிந்து எனதமைச்சரானோரே
ஓதுமென்றுன்மன்ன னுரைப்பார்கள்மந்திரிகள்
சங்கத்தலைவா தலம்புரக்குங்கோபாலா
எங்கட்கரசே இதுகருமங்கேட்டருள்வாய்
முன்னேனெசித்தரசன் மோசேசுதன்கிளையும்
துன்னுஞ்சிறையில்வைத்துச் சூழ்ச்சிபலசெய்ததினுல்
கர்த்தனவர்க்காகக் கருணைபலபுரிந்து
சுத்தனெனும்மோசேசைத் துங்கபரன்முன்னனுப்பி
சூழுஞ்சிறைமீட்டுத் தோற்றமுடனேகும்போ
மீளவும்மன்னன் வினைமுடித்தசெய்தியினுல்
வேந்தன்வெகுபடைகள் வெய்யவிரத்தாற்றில்
மாந்தினராதி வருத்துந்திருமுனிவால்
மன்னுநீர்காவல்வைத்த மங்காத்தவத்துரிய
சன்னுசிமார்கள் சருவேஸ்பரன்சீஷர்
சொன்னஅறிவுஞ் சுருதித்திருமறையும்
என்னுளுஞ்சீவியரி னீடேற்றந்தானுகும்
ஆதிதிருச்செயலை ஆராலளவிடலாம்
ஏதுந்திருவுளத்துக் கேற்றபடிதானுகும்
ஏகன்திருவேத மேற்றுஇருநிலத்தில்
ஆகங்களிக்க அரசேயிருத்தல்நன்று

என்றுபகர்ந்து இறையவனைமந்திரிகள்
அன்றுபணிந்தேத்தி யங்கிருந்தாரம்மானை

அரசன் பொறுதிகேட்டல்.

விருத்தம்,

மன்னுமந்திரிகள் சொன்னவாய்மொழி மறுத்திடாதரசன்மகிமையோ
டுன்னியந்தநெறி யானமாதவரை யோடியேயழையுமென்றலும்
வன்னராசனுரை போலமந்திரிகள் மாசவத்தருக்காள்விட
மன்னவன்றனிட முனிவர்வந்தவர்கள் மகிமையாம்மொழிவழங்கவே 86

வந்தஞானமுனி வோர்களுக்கரசன் வரிசையாவையுமளித்தலும்
இந்தமாநிலமுள் ளாசையால்நர கிருந்தபேயதைவணங்கியான்
முந்தவேயநித பாவமாகவுயர் முனிவரேயுமைவருத்தினேன்
அந்தமாகொடுமைநீர்பொறுத்திடுமென்றரசன்முனிவரோடறைந்தனன்,

நிருபனேயெமக் கேதுசெய்தனைநீ நேசவாதிபரன்முன்னைநாள்
வருவமென்றபடி யுருவதாகிமண்ணில் வந்தபோதிலொருமறுவிலான்
ஒருவனுனவரை வன்பர்யூதர்செய் யுயிர்த்துரோகமதையெண்ணினுல்
பருவமாகுமறு சுடரிதாருமுண்மை பழுதிலாவிறைவனென்றனர் 88

அம்மானை.

ஆருங்கரைகாணு வாரிதிருவிரக்கம்
சீருடையமன்னனுக்குச் சிந்தைநிறைந்ததினுல்
மந்திரிகள்சொன்ன மகிமையுரைகேட்டு
சுந்தரசன்யாசிகளைத் தூதன்தனையனுப்பி
இக்கணத்திலேயழையு மென்றுசொல்லமன்னவனும்
அக்கணத்தில்மந்திரிக ளாலோலைபோக்கிவிட்டார்
மன்னனுந்தூதர்களை வாகாயனுப்பிடவே
நன்னெறிசேர்நீதியுள்ள நற்றவரைவந்துகண்டு
வேந்தனரவழைத்தான் மெய்த்தவரேவாருமென
போந்தகுருக்கள் புரவலனைவந்துகண்டார்
சிங்காசனத்திற் சிறந்திருக்குந்தேர்வேந்தன்
துங்கக்குருக்களுக்குத் தூயவரிசைசெய்து
திங்கள்முகமலர்ந்து செப்புவதுகேட்டருள்வீர்
எங்களுருவெடுத்து இங்குவந்தோன்றன்னருளால்
தானந்தவமுறைமை தங்குந்தவஞ்சிறந்து
வானந்தனக்கும் வழிகாட்டும்மாதவரே
வஞ்சக்கொடுநரகில் வாணுதிதன்முனிவால்
தஞ்சமற்றுநாளுந் தவிக்கும்பசாசுகளும்

நாளும்வருத்துபுத்தி நப்பியோயுங்களுக்குச்
சூழுங்கொடுந்துயருந் துட்டமுஞ்செய்துவிட்டேன்
எம்மைப்படைத்த இறைவனுக்காயென்பிழையை
இம்மைதனிற்பொறுமென் றேந்தல்பயந்துசொல்ல
ஆசறுபாதமிட்டு அண்ணல்தனையன்புடைய
மாசறுமெய்ஞ்ஞானர் வாழ்த்திமனமகிழ்ந்து
பார்த்திபர்களேறே பழுதறுநற்பார்வேந்தே
நீத்தோர்க்குநீர்புரிந்த நீசங்கள்தான்பெரிதோ
விண்ணுதிதந்தைசுதன் மேதினியில்வந்தவந்நாள்
எண்ணுத்துயரடைந்தார் எங்களுக்காகவல்லோ
மண்ணுலெடுத்தசடம் மன்னவனேயீதல்லவோ
கண்ணுரக்கண்டிலையோ காயம்மடிந்தபின்னர்
எண்ணுதசங்கைகளும் இப்புவியில்வாழ்வதுவும்
விண்ணேகப்போகாது வீணேயிருக்குமெல்லாம்
ஏதுவருத்துகினு மிங்கிறக்குங்காயமது
தீதுவருமோ தீகழான ஆத்துமத்தில்
என்றுகுருக்க ளினிதுரைத்துமன்னனுக்கு
அன்றுமனந்தேற்றி யங்கிருந்தாரம்மானை

அரசனுக்குப் போதித்தல்.

விருத்தம்.

தவமெய்ஞ்ஞானர்கள்சொல் நிருபன்கேட்டுளந் தங்குபாவமதுமங்கவே
அவமதானதை மறந்துவேதநிலை யன்பொடேயமையவண்ணலும்
நவமதானவைகள் புரிகுருக்களொடு நன்மைதாருமெனநவிலவே
பவமதானதுறு மன்னனுக்கவர் பகர்ந்தவாய்மொழிகள்பகருவாம் 89

மறுமையேபுகுத வழியிரண்டுளது மன்னனேயதனிலொருவழி [ம்
பெறுமெய்ஞ்ஞானவொளியகநிறைந்துயரு பெரியவின்மமொருவழியதா
வறுமையங்குறையு மனல்களேநிறையு மாயமானதொருவழியதாம்
உறுவதேயிதனி லேதுவேணுமென் றேதினர்முனிவரிறையோடே 90

மன்னவாமனுடர் தேகமானது மடிந்துபோமுலவைநீரொடும்
வன்னிதாரணியா காயமஞ்சொடு வகுத்தகாயமதுமழிகையில்
என்னதானுனது ஆவியோடுமிடம் எவ்விடத்திலெனவறிகிலாய்
முன்னநீர்தொழுத பேய்கள்மாயமது முழுதியற்றிநின்றதென்றனர் 91

துரும்புபோலவரு பாவமானது துணைக்கொளாசையொடிணைக்கொளாக்
கரும்புபோலவரு மதுரமாகிமிகு கன்மமானதுகனத்தது

இரும்பதற்கிணைய தாய்ப்பவச்சுமை இருந்துமாநிலமிழந்தபின்
நெருங்குவார்நரகிலென்றுமன்னன்முன் நிகழ்த்தினார்முனிவர்நீதியே 92

அம்மானை.

மண்மேலுருவெடுத்த மாந்தரேமாநிலத்தில்
கண்ணாருவிநீரோடக் காந்துங்கடுநரகில்
வீழாமல்வேந்தனுக்கு மெய்ஞ்ஞானர்சொன்னபுத்தி
நாளும்மனமகிழ்ந்து நானிலத்திற்கேட்டருள்வீர்
தாரணியையாளுந் தலைவனகமகிழ்ந்து
பூரணநீதம் புகலுந்தவத்தோரே
மண்ணிலுள்ளவாழ்விழந்து வானில்மகிழ்ந்திருக்க
பண்ணொழுங்கின்வேதமுறை பண்பாகவோதுமென்றார்
மன்னுந்தவஞ்சிறந்த மாதவமெஞ்ஞானியர்கள்
உன்னுந்தவவேத முற்றேயுரைக்குமுதல்
பாவத்தால்வாற பழுதும்படர்நரகிற்
கோவத்தாலாகுங் கொடுமைகளுஞ்சொல்லலுற்றார்
போர்வேந்தேகேளாய் புவியில்மனுவிறந்தால்
சீர்போந்தவாத்துமங்கள் செல்லும்வழியிரண்டு
ஆஞ்சுகள்பாட அருந்தவத்தோர்கொண்டாடக்
காஞ்சனத்தோர்செய்த கனகமணிமாளிகைக்கு
செல்வதொருவழியாந் தீயுங்கொடுவினையும்
சொல்லடங்காப்பேயுந் துலையாதபாவிகளும்
சோனகர்யூதர் துலுக்கர்மறுமதத்தோர்
ஈனரஞ்ஞானர் இறைவன்றனைவணங்கா
மானிலத்திலுள்ளோரும் வஞ்சக்கொடியர்களும்
தானிருந்துவெந்து தவங்குகின்றபட்டினத்தில்
போறவழியொன்று புரவலனேநீகேளாய்
கூறுநிலத்திற் குலாவுகின்றமானிடர்கள்
மண்நெருப்புஆகாயம் வாயுநீர்கொண்டுசெய்த
பண்ணுற்றவீடதனுட் பாங்குடையஆத்துமத்தை
இட்டுவைத்தார்தீமைநன்மை ஏதென்றறிந்துதம்மை
விட்டுவராதபடி விண்ணில்வரவேண்டி
மாயம்பொதிந்தவிந்த வாழ்நாளிழந்தபின்னர்
தீயோடுதீசேரும் செய்யநீர்நீராகும்
ஆயவெளிக்காற்று மங்கினத்தோடேகூடும்
நேயமாயென்னிடத்தில் நீபிறவிவாவெனவே
மண்ணதுட்வாய்திறந்து வரவழைக்குமிவ்வுடலை
எண்ணமுற்றின்னும் இலங்குகின்றபட்டினத்தில்

சும்மனசும்பேயுந் தனக்கெனக்கென்றுசொல்லி
அம்மாருலகி லலைவுசெய்யும்நேரமதில்
என்னசெய்வாய்மன்னாநீ இந்தவழியிரண்டில்
உன்னுவிபோக உவந்தவழிதேடுமையா
பொன்னுலகிற்போகும் புகழ்வழியைத்தேடாமல்
மன்னுலகிலேயிருந்து மாபாவம்செய்யுமப்போ
அற்பதுரும்பாகும் ஆசைகரும்பாகும்
துற்குணப்பாவம் சுமையிரும்புபோலாகும்
பாவச்சுமைகனத்தால் பாரிலுதவியின்றிக்
கோவக்கொடுநரகிற் கூழியுடன்போய்விழுவார்
அங்கேதான்போனா லடைமானமில்லைமன்னா
இங்கேயிருந்து இதற்குதவிதேடுமென்று
சங்கைக்குருக்கள் தலம்புரக்குங்காவலர்க்கு
தங்களுடைவர்க்கினாற் சாற்றினாரம்மானை.

அரசன் திருமறையை அனுசரிக்கவிரும்பல்.

விருத்தம்,

பொங்குதீநரகோ டும்பர்நாடதுசெய் புவனமீதுநலவாழ்வையும்
எங்குநாளுமிறை யானசோதிபா னியல்பினோடுநடுவீவதும்
துங்கநீதமொடு நிருபனுக்குமுனி வோர்கள்சொல்லியபினன்னமும்
திங்கள்போல்முக மலர்ந்துமாதவர்கள் செப்பிவேதமுறைகூறுவார் 98

தானதானபரன் யாவினுக்குமொரு தங்குகாரணமதானவன்
வானுமோடுபுவி யேபுரந்தவன் மகிமையாயுடலிலாதவன்
ஆனசோதியுயி ரானயாவரது மாகமேயறியுமாதிபன்
தானதரனசரு வேசுரன்கிருபை தன்மையுள்ளபரனுகமே 94

மண்ணினோடுபர லோகமானதும் மனுஷர்கண்டதுகாணாததும்
திண்ணமாபுவியு மேபுரப்பவன் திரித்வமேகமானகடவுளன்
எண்ணிலாமுதிய மூவருக்குளொரு ஏகமானசுதனானவன்
மண்ணில்வந்துகுரி சேறிவிண்ணில்வா மகிமைதந்தைவலமாகினார் 95

அம்மானை

மெஞ்ஞானத்துட்பொருளாய் வேதத்தினற்புதமாய்
எஞ்ஞான்றுந்தானா யிருப்போன்றிருவருளால்
ஈனந்தவிரிந்து இறைவன்கதியடைய
ஆனந்தநற்குருக்க ளங்குரைத்தார்வேதமுறை

நீதிக்குலத்தில் நிருபனே கேட்டருள்வாய்
ஆதிக்குவந்த அரியவிலட்சணங்கள்
போதிக்கமெத்தவுண்டு பூபாலராஜனும்
வேதத்திற்கற்றோர் விளம்புவதைக்கேட்டருள்வீர்
தானாயிருப்போன் சருவருக்குங்காரணவான்
வானாதியந்தமிலான் மாந்தர்சரீரமில்லான்
எப்போதுந்தானிருந்தோ னின்றுமென்றுந்தானிருப்போன்
முப்புவனத்தாரும் முயன்றுதொழும்பேறுடையோன்
தானேசருவநன்மை தன்னில்நிறைந்திருந்து
வானோடுமண்ணும் வளருயிருந்தான்படைத்தோன்
ஆனகர்த்தனொன்றாகி யறிக்கையில்மூன்றாகி
தானிருப்போமென்றெமக்குச் சாற்றினார்வேதமதில்
முந்தநமக்குரைத்த மூவர்தன்னைவிச்சுவசி
தந்தைசுதனிஸ்பிரீத்துச் சாந்துவெனும்நாமமுண்டு
இந்தத்திருப்பேர்க்கு ளெண்ணுமிரண்டாம்பேர்
வந்தார்நிலமீதில் மாசகற்றவேண்டுமென்று
கற்பழியாஞானக் கருவாகக்கன்னிமரி
அற்புதனைத்தான்வயிற்றி லன்பாய்க்கருத்தரித்து
முன்னேவைசெய்த முதியபிழையகல
நன்னீதிக்கன்னியந்த நாயகனையீன்றதினால்
ஆஞ்சுகள்வந்துகண்டா ராயர்தொழுதுநின்றார்
வாஞ்சையுடன்விண்ணும் மனுவுலகும்போற்றிநின்றார்
வெள்ளியவேந்தரினால் வேறும்பெரியோரால்
ஒள்ளியதேவ னுருவாகிவந்தசெய்தி
நானிலமுந்தானிறைந்து நன்மைநிரம்பியபின்
ஈனவுலகி விடரகற்றவேணுமென்று
துஞ்சியொருகுருசிற் றாயோனுயிர்த்தெழுந்து
மஞ்சுசெறிந்திலங்கும் வானத்தெழுந்தருளி
விண்ணம்பரத்திருக்கும் வேததந்தைதன்வலத்தில்
நண்ணியேமானிடர்க்கு நாளுமுதவுகின்றார்
அங்கிருந்துமின்னு மகிலமழியுமந்நாள்
இங்கேநடுத்தீர்க்க வேகன்வருவர்மன்னா
இக்காரணங்களெல்லா மேந்தலையுண்மையென்று
மிக்காங்குருக்கள் விளம்பினாரம்மானை
பூபாலன்கேட்டுமனம் பூத்தங்கேயேதுசொல்வான்
நாவாலியம்பரிதாம் நன்மையிதுவென்றுநம்பி
வேதமேமீறாத விருப்பமுற்றுமன்னவனும்
பே[illegible]களின்றிப் பிரியமுற்றாரம்மானை

அரசன் ஞானஸ்நானம் பெறல்.

விருத்தம்.

இறைவனுதிதிரு வேதமானது மியம்பிமாமுனிவரிங்குறக்
குறைவிலாதரசன் நம்பிவேதமது கொள்ளவேணுமெனமனதுகொண்
டுறைமெய்ஞ்ஞானதவயோகமுள்ளவர்களுளமகிழ்ந்துவெகுவுண்மையாய்
நறைசேர்வேதமதை யும்முறைப்படி நடத்துமென்றிடநடத்தினார் 96

விச்சுவாசமொடு நம்புகாரியம் வேணுமுத்தமநடத்தையும்
இச்சையோடிவையை நம்பிவிசுவசியு மெனவியம்பரசன்நம்பியே
அச்சமற்றிடவிஸ் நானந்தாருமென ஆதிநாமமொடுதண்ணீரால்
உழ்சியோடுஉட லான்மைக்கழுவி உற்றபாவமதகற்றினார் 97

நார்மெய்வானவர்கள் நாவினுலெளிதில் நவிலொணாவரியநாதனார்
தரையின்மீதுரைசெய் ஞானமானவைகள் தரணிகாவலனுமோர்தலால்
உரைசெய்மேலுலகர் தரைமிகுத்தவர்கள் உம்பர்நாடெளிதுமெங்கணும்
அரசனானவனை மிகமகிழ்ந்துபுக ழங்குமிங்குநிறைவுண்டதே 98

அம்மானை.

கொண்டாட்டங்கொண்டாட்டங் கொற்றவன்றன்தேசமெல்லாம்
உண்டானபேர்களெல்லா மோதரியகொண்டாட்டம்
மன்னுமெஸ்பானுவெனும் மண்டலத்தையாளுமன்னன்
உன்னுந்திருவேதத் துட்படவேணுமென்று
சந்தோஷமாகத் தரணியெங்கும்ஓலைவிட்டு
அந்தரமும்வானும் அவனிமுழுதும்படைத்த
ஆனந்தநாத னரியதிருவேதம்
தானுந்தன்னூர்குடியுந் தாமமர்கவேணுமென்று
அங்கங்கேயாளனுப்பி அந்நாளுளமகிழ்ந்து
எங்கும்பறைசாற்றி யெல்லோருங்கொண்டாட
துங்கமன்னன்மாளிகையுஞ் சுற்றுமதில்மண்டபமும்
தங்கத்தெருவீதி சாலையெங்குமானதெல்லாம்
வேடிக்கையாக விளங்குபலகோலமதாய்ச்
சோடிக்கலுற்றார் சுடர்வேந்தன்பட்டணத்தை
கோட்டுப்பூமாலை கொடிப்பூவினன்மாலை
நீட்டுநீர்ப்பூமாலை செய்யரியநால்வகையின்
மாமாலைவச்சிரத்தின் வன்னமணிமாலை
பூமாலைகொண்டு புகழாயலங்கரித்து

முத்துவர்ணக்கூறை முழுவயிரம்நாகமணி
சித்திரச்செம்பொன்மணிச் சேலைபலபணிகள்
நீலவல்லிபூகவல்லி நீலநிறமுத்துவல்லி
கோலவல்லிபச்சைநிறங் குங்குமப்பூவன்னவல்லி
மாந்தளிரின் பூந்துளிரின் மஞ்சல்வர்ணப்பச்சைவர்ணப்
போந்ததுகிலுள்ளதெல்லாம் போதவலங்கரித்து
பள்ளியர்சேர்தோழாப் பல்லாக்குத்தண்டிகையில்
தெள்ளும்பெரியோர்கள் சேரப்புடைசூழ
கோலமுற்றசெம்பரியிற் கொற்றக்குடைநிழற்றத்
தாலமுற்றவெம்போர்த் தரியலருந்தற்சூழ
சல்லரிகொம்பு தவில்முரசுகின்னரங்கள்
சொல்லரியதாளமொடு துங்கபணிநாகசின்னம்
வல்லதொனிமுழங்க மண்டலத்தோர்கொண்டாட
சொல்லுமெஸ்பாஞவெனுந் துய்யநகர்தன்னிலுள்ள
எல்லையற்றசேனைகளு மேற்றபெரியோரும்
மல்லையுற்றவீரர்களும் வாரணமாதர்களும்
தோற்றுமமைச்சருடன் தூயோருஞ்சூழ்ந்துவர
ஏற்றும்வரிசையுறும் எல்லையில்லாச்சேனையுடன்
உன்னரியமன்னவனு மோரவருங்கூடிவரப்
பொன்னினணியாலயத்திற் போய்ப்புகுந்தாரெல்லோரும்
நம்புமணிப்பீடமதில் நல்லமணிகொண்டழுத்தி
அம்பரனார்தேசத் தரியமுறைப்படியே
வெண்துகிலால்வேய்ந்து விளங்கியநற்கோலமிட்டார்
கண்குளிரக்கண்டோர் களிகூரநாலுசுற்றும்
வெள்ளியாற்பொன்னால் விளங்குநிரைநிரையே
ஒள்ளியவெண்மெழுகா லுற்றவிளக்கேற்றி
ஒன்பதுவன்னமணி யொளிசிறந்தபாதமதில்
அன்பொடுநேர்த்திவைத்து ஆனந்தநற்குருக்கள்
எல்லாரும்வேதத் தியல்பாமுடுப்பணிந்து
சொல்லரியபுஸ்தகங்கள் துங்கக்கரத்தேந்தி
தேர்வேந்தனையழைத்துச் செய்யுஞ்சடங்கறுத்து
சீர்போந்தகாரணங்கள் செம்மலுக்குச்செய்யலுற்றார்
தந்தைசுதனிஸ்பிரீத்துச் சாந்துவையும்விஸ்வாசி
இந்தமூபேருமொன்றே யென்றதையும்விஸ்வாசி
முப்பொழுதுங்கற்பழியா முத்திமரியானவளை
எப்பொழுதும்விஸ்வாசி யிந்தக்குலக்கொடியாள்
தன்னிடத்தில்கின்றுதித்த தற்பரனைவிஸ்வாசி
இன்பமுடனவரே யேசுவெனவிஸ்வாசி

தாரணியிலையவருந் தாங்கரியபாடுபட்டு
ஆரணச்சொற்போல்மரித்து அன்போடுயிர்த்தெழுந்து
வானமதிற்சென்றதுவும் மண்ணிலின்னம்வாறதுவும்
ஈனமறவிஸ்வாசித் திஸ்பிரீத்துச்சாந்துவையும்
சுத்தச்சபைதனையுந் தூயவைக்யப்பேறுடனே
செத்தோருயிர்ப்பதையுஞ் செய்வினைகள்தீர்ப்பதையும்
நித்தியசீவியத்தில் நீடூழிவாழ்வதையும்
அத்தனருளா லறிந்துமனமிடுக்காய்
விசுவாசியென்றுசொல்ல வேந்தன்விசுவசித்தான்
அசைவின்றிவேதநிலை யண்ணல்விசுவசித்து
முன்னாளிற்செய்த முழுப்பாவமானதெல்லாம்
இந்நாள்நினைந்தழுது எந்தல்கரங்குவித்து
தன்மீதில்நேசமெல்லாஞ் சன்னிதிமுன்னாய்மறந்து
நன்மைதரவேணுமென்று நாதன்றனைவணங்கி
தாள்மடித்துநீதமுறச் சற்குருக்களானோர்கள்
வாழ்வுடையவேத மறையின்முறைப்படியே
தந்தைசுதனிஸ்பிரீத்துச் சாந்துதிருப்பேருரைத்து
அந்தமுனிவோர்க ளங்கையினால்நீரையள்ளி
உற்றநிருப னுடலைக்குளிப்பாட்டி
முற்றியதோர்சென்மவினை முந்தரசன்செய்தபிழை
அத்தனையும்நீங்கி யகங்குளிரவாதியருள்
சித்தநிறைந்து சிறந்திருந்தான்தேர்வேந்தன்

உடலையடக்க உத்தரங்கொடுத்தல்.

விருத்தம்.

தாரணியும் வானவரும் மகிழ்ச்சியானோர்
 தலமெனுமெஸ் பாஞதனி லிருந்தவேந்தன்
காரணமாந் திருவேத மேற்றபேர்க்குங்
 கசடகற்று முண்மைநிலை கைக்கொண்டேதான்
ஊரதனி லுள்ளவர்க்கு மெவர்க்குமாதி
 யொருவருடை திருவேத மோதிஞானம்
பூரணமா யிருப்பவர்க்கு வீதிதோறும்
 பொன்னுலவு திருக்கோயில் புனைவித்தானே 99

பொன்னவன்றன் திருக்கோயில் புனைநதுநீங்கள்
 போற்றுசந்தி யாகுவுடல் தன்னையேந்தி
இந்நகரி லுங்கள்தனக் கேற்றவண்ண
 மியல்வோடு திருவுடலை யடக்கிநீங்கள்

இன்னமின்ன மெய்ஞ்ஞான வேதமோதி
இன்னிலமு மீடேற வியற்றுமென்றே
மன்னவனுந் தீயோகின் சீஷரோடு
மகிழ்ந்துரைக்க மாணுக்கர் மகிழ்ச்சிகூர்ந்தார் 100

அம்மானை,

விண்ணோர்களிகூர்ந்தார் மேதினியுள்ளோர்மகிழ்ந்தார்
அண்ணலெஸ்பாஞமன்னன் ஆதிமறைசேர்ந்ததினல்
ஏகன்திருவருளா லேற்றவெஸ்பாஞமன்னன்
ஆகந்தனிலே யருள்வேதவுண்மைகொண்டு
அண்டர்சந்தியாகுவுக்கும் ஆதிமறையவர்க்கும்
எண்டிசையும்போற்ற இயற்கோயிலுண்டாக்கி
தன்னூர்குடியும் தனதுறவிலுள்ளோரும்
மன்னுஞ்சிறப்புடனே வாழ்ந்துமகிழ்ந்திருக்க
மண்டலத்தோர்கொண்டாட வானவர்கள் தான்மகிழ
கண்டோர்தொழுதிறைஞ்சக் கற்றசந்தியாகுடனே
அத்தேசமாநகரி லடுத்தவிடங்களிலே
சித்தமகிழ்ந்தே துதிக்கத் தேவாலயஞ்சமைத்து
உங்கள்மனதுக் குவந்தவிடங்களிலே
சங்கைபெறவையுமென்று சாற்றினன்மன்னவனும்
மன்னனவனுரைக்க மனமகிழ்ந்துநீத்தோர்கள்
இன்னமும்லோப்பா ளிடத்தில்வந்தாரம்மானை
ஆபாதகியநீத வரிவையுலோப்புவென்பாள்
மாபாவவஞ்சி மனுவுட்கொடுந்துரோகி
மாணுக்கர்போனதுவும் மன்னவனைக்கண்டதுவும்
தானுக்குக்காரியங்கள் தளர்வாகிப்போனதுவும்
மன்னன்மகிழ்ந்ததுவும் மாமறையில்வந்ததுவும்
என்னவிதமென்ன விருந்துமனதிலெண்ணி
இன்னுமிடறுசெய்ய ஏந்திழையாள்சம்மதமாய்
நன்மையுள்ளாள்போலே நளினமிகவுரைத்து
வஞ்சகங்கள் தான்புரிந்தால் மன்னனறிவனென்று
நஞ்சையகத்தேபொதிந்து நல்லவள்போலென்னசொல்வாள்
மெய்ஞ்ஞானயோகிகளே மேய்த்தவரேயிவ்வேதம்
இஞ்ஞாலந்தன்னில் இனிமையுள்ளதென்னவிப்போ
நாமும்மனமகிழ்ந்தோம் நல்லசந்தியாகுடனே
தாம்நீரடக்கவென்றுற் சாற்றுகிறேன்கேட்டருள்வீர்
ஏற்றுமலைமேலே எம்முடையமாடுகள்தான்
தோற்றமுடன்நிற்குதங்கே சுத்தரேநீங்கள்சென்று

ஆனவெருதைப்பிடித்து அன்பாகவேதொடுத்து
வானத்துயிரிருக்கும் வண்மையியாக்கோபுடனே
சங்கைத்திருமேனி தானிருக்குங்கல்லுடனே
அங்குருளைமேலேற்றி ஆனந்தங்கொண்டாடி
மாதவரேயுங்கள் மனதுசரியாமிடத்தில்
ஆதாரவாய்வையுமென்று ஆயிழையுஞ்செப்பலுற்றாள்

உலோப்பாள் செய்த தீமை நன்மையாதல்.

விருத்தம்.

மாகொடுமை போகவழி யில்லையையோ
மங்கைசொன்ன வஞ்சகத்தை மாந்தர்கேளீர்
ஆகநிறை தீதிருக்கப் புறத்தேநல்ல
அன்புடையாள் போலவவ ளுரைத்தாளையோ
ஏகுதவ ஞானியர்கள் பொருப்பில்வாழு
மிடர்க்குழுமா டானதினல் மடியவெண்ணி
ஆகுலமில் லாமளவள் சொன்னளல்லா
லன்புடன்செப் பினதன்றென் றறியலாமே 101

அருந்தவரை யருகணைத்து முழுதுந்தானு
யாள்பவன்றன் றிருவுளத்தை யவனிமீது
திருந்தவவர் தரித்திடவுஞ் செயல்வேறுண்டோ
தேவனுடை கிருபையினற் சிட்டரந்த
பெருந்தவத்தை யுடையசந் தியாகுநாமம்
பெருக்கவெண்ணி மலைநோக்கிப் போகும்நேரம்
குருத்தையொத்த கடுவிலங்கு வெகுண்டுசீறிக்
கொலைவிளைக்க மாதவர்முன் குறுகிற்றன்றே 102

ஆறுத கொடுங்கோப முடனேவந்த
அடல்குழுக்க ளதனைப்பார்த் தன்பர்தாமும்
மாறுத பெரும்பிழைக்காய்க் குருசிலேறி
மரித்துயிர்த்த மனுமகனை மனத்தேயெண்ணி
நீறுக வன்விலங்கு மடியப்பள்ளை
நீண்மறிபோற் குழுநீங்கி நேர்ந்தகோக்கள்
பேறுக வந்ததினற் றவத்தோரெல்லாம்
பிரியமுற்றுத் தேகமெடுத் தேகினரே 103

அம்மானை

ஐயையோதாரணியில் ஆங்காரமானபவ
வெய்யபகைக்கணையால் மெத்தமெலிவாகி

மங்கையுலோப்பாள் மகிமையாக்கோபுடலை
அங்கடக்கவந்த அருந்தவரைக்கொல்லவெண்ணி
மாமலையிலங்கிருக்கும் மாடுகொடிதானதினால்
தாமவரைக்கொல்லவென்று தன்மனதிலெண்ணமுற்றுப்
போகவிடைகொடுத்தாள் புண்ணியர்களானாலும்
ஏகன்திருவுளத்தால் எண்ணமுற்றுத்தங்களிலே
வாழும்மலைநோக்கி வனங்களுந்தான்கடந்து
நாளுந்தவத்தோர்கள் நாடிவரமாமலையில்
வன்கானில்வாழுகின்ற வஞ்சமிருகமொடு
துன்குழுமாடுகளுஞ் சுத்தர்தமைச்சூழ்ந்து
வன்மிருகக்கண்ணால் மழைபோற்கனல்தூவ
இன்னுங்குழுமாடு ஏற்றுங்கொடுஞ்சினமாய்
கொக்கரித்துவேகமுற்றுக் கோபம்புகையார்ப்ப
மிக்கவேவந்தெதிர்த்து மெய்த்தவரைத்தானடர்ந்து
கொல்லவரும்வேளையதிற் கொற்றகுருவோர்கள்
கல்லறையிலன்றிருந்த கர்த்தன்றனைநினைந்து
தானவர்கள்தங்களிலே சற்குருசுதான்வரைய
ஈனமிருக மியல்பாய்மடிந்ததுவே
வஞ்சமிருகம் மடிந்ததற்பின்மாடுகளும்
அஞ்சிப்பயந்தொடுங்கி ஆடுகள்போலேமடங்கி
செஞ்சொற்றவத்தோர்கள் சேருகில்வந்ததினால்
கஞ்சத்திருக்கரத்தாற் காளைகளைத்தான்தொடுத்து
மங்காதகல்லுடனே மாதவத்தன்தன்னுடலை
அங்கேயெடுத்து அருஞ்சகடமேலேற்றி
ஆனந்தம்பாடி அறிவாளர்தங்களிலே
வானந்தனிலிருக்கும் வண்மையாக்கோபுடலை
ஏற்றும்பரனருளால் எண்ணரியநற்செயல்கள்
தோற்றமனப்படியே துங்கவுடலிழுத்து
மங்கையுலோப்பாள் மனைவாசல்தன்னில்வந்து
அங்குமிங்கும்போகாமல் அற்புதமாய்நின்றதினால்
சுத்ததவத்தோருந் தொல்புவியிலுள்ளோரும்
மெத்தவதிசயித்தார் வேதன்றிருவுளத்தால்
மங்கையரான மகிமையுலோப்பவுந்தான்
இங்குவந்தகாரணத்தை யென்னசொல்வேனென்னவெண்ணி
மானுள்மகிழ்ந்தாள் மனதுபிரியமுற்றாள்
வானதியைப்புகழ்ந்து வாழ்த்தினாள்மங்களங்கள்
ஏகபொருளான இஸ்பிரீத்துச்சாந்தவட்கு
ஆகத்தில்மெத்த அறிவுகொடுத்ததினால்

முன்னிருந்தவஞ்சகத்தை மோசமென்றுதள்ளிவிட்டு
நன்மைபெறவேணுமென்று நாடினாளம்மானை

திருவுடலை. அடக்கல்.

விருத்தம்.

ஆருமெண்ணத் தாலறியக் கூடாநின்ற
அம்பரன்றன் பெருமைதனை யறியாளாகிப்
பாரிலெண்ணத் தாற்கபடு புரிந்தமானாள்
பனிபோல வினைநீங்கிப் பழுதொன்றில்லாச்
சீருலவு திருவேத மேற்றாள்கோயில்
செய்துதன்றே கத்தையதி லடக்கக்கூறி
ஏருலவு மந்தவா லயத்திற்சுத்த
யாக்கோபின் தேகமதை யடக்கச்சொன்னாள் 104

குருவோர்கள் மிகமகிழ்ந்து தவத்தோன்தேகங்
கொள்கையுட னடக்கமங் களங்கள்பாடி
தருஞான வேதமுறை நடக்கநாளுந்
தற்பரனை மிகப்புகழ்ந்து தழைக்கவாழ்த்தி
ஒருபோது மறவாமல் மாந்தரானோ
ருண்மைச்சந் தியாகுதனை யோதிநின்றார்
திருவருளாற் சிறிதுரைத்தே னின்னுந்தானே
சிறிதுநவ மானதுவுஞ் செப்புவோமே 105

அம்மானை.

ஏதுசொல்லமானிடரே யெங்களற்பபுத்தியினால்
போதுமோவெவ்வுயிர்க்கும் புண்ணியத்தான்தாயினருள்
தன்னால்வினையகன்று சங்கையுலோப்பவென்பாள்
உன்னுந்திருவேதத் துட்பட்டுத்தன்னுடைய
மாளிகையும்மச்சும் மதில்களும்மண்டபமும்
ஆழியுலகறிய அக்கணத்திலேபிடித்து
முத்தர்புகழ்ந்தேத்த முன்னோர்களிகூர
எத்தலமுங்கொண்டாட ஏத்தரியகோயில்கட்டி
துங்கமுறுசந்தியாகின் தூயதிருவுடலை
அங்கடக்குமென்று அனுமதியுந்தான்கொடுத்து
தன்னுடைமையான தரணிதனிற்செல்வமெல்லாம்
அந்நகரோர்தானறிய ஆலயத்துக்கேகொடுத்து
மன்னுமரசியுந்தான் வாழ்ந்தேயிருக்குமட்டும்
மின்னுந்திருப்பதிக்கு வேண்டும்பணிபுரிந்து

மங்கையர் தான்மடிந்தால் மகிமையுள்ள ஆலயத்தில்
அங்கேயடக்குமென்று அறிக்கையிட்டாயிழையும்
தேகத்தோடிந்தச் செகதலத்திலேயிருந்து
வாகொத்தவிண்ணில் மருவினாரென்பார்கள்
ஆனயாக்கோபுடலை யங்கேயவர்மனுஷர்
தானடக்கவேணுமென்று சந்தோஷங்கொண்டாடி
மெய்ஞ்ஞானங்கற்றோர் மிகுநேசமாமுனிவர்
அஞ்ஞானமில்லா ஏருந்தவத்தோர்நற்குருக்கள்
மன்னரிராசாக்கள் மண்டலிகர்வன்னியர்கள்
அந்நகரிலுள்ள அரியகிறீஸ்தவர்கள்
கூடினார்வேதமுறை கொள்கையுடனெல்லோரும்
பாடினார்மங்களங்கள் பந்திபந்தியாகநின்று
வெண்மெழுகாற்செங்கரத்தில் வேண்டுஞ்சுடரேந்தி
பண்ணொழுங்காய்வேதமுறை பாடிச்சடங்கறுத்து
சன்னாசிமாருந் தவத்தோருங்கொண்டாடி
முன்னோரும்வானவரும் மூவுலகுந்தான்மகிழ
அப்போஸ்தலரான ஆதிதிருச்சீஷருக்கு
இப்புவியிற்செய்யு மியல்பின்படியேந்தி
சங்கையுடனே தவத்தோன்றிருயுடலை
அங்கடக்கிச்சீஷ ரகமகிழ்ந்தாரம்மானை
மாதவஞ்செய்யாக்கோபின் மாணாக்கரானவர்கள்
போதப்பிரியமுற்றார் பூரித்தார்சோபனத்தால்
ஆனந்தஆஞ்சுகளும் அம்பரத்திலுள்ளோரும்
தானிந்தச்சுத்தனுடல் சங்கைபெறவைத்ததினால்
பேரின்பக்கொண்டாட்டம் பேசரியசந்தோஷம்
பாரின்பத்தால்மகிழ்ச்சி பாடலுற்றாரம்மானை
சங்கைமிகவுள்ளோருந் தாயாருந்தான்மகிழ்ந்து
எங்குலத்தோர்பூச்சியமே ஏற்றதிருவொளியே
நங்குலத்தில்வந்த நடுவனேயென்றுஅன்னாள்
மங்கலமாய்ச்சொன்னார் வடிவின்திருச்சீஷர்
துங்கயாக்கோபு சுருதிதனக்காக
பங்கமிகவடைந்து பாருலகோர்போற்றிசெய்யத்
துஞ்சுநாளின்னதெனத் தொல்புவியோர்கேட்டருள்வீர்
வஞ்சப்பேய்மோசமதால் மண்ணில்முதலானமனு
செய்தபெரும்பாவந் தீர்க்கவெனவேதோன்றித்
துய்யனந்தச்சூரியன்போற் சோதிதிருமகனார்
வந்துபவமறுத்து மானிலத்தைத்தான்மீண்டு
இந்தவுலகு இடராலழியுமட்டும்

கல்லின்மேற்கல்லாகிக் கர்த்தர்திருச்சபைக்கு
சொல்லரியமூப்புமுடி சூட்டித்திருச்சிரசில்
பாவத்தைக்கட்டப் பகர்விண்பதிதிறக்க
ஆபத்தாம்பாவ மவிழ்க்கக்கதிசேர்க்க
விண்ணவரும்மண்ணவரும் மேதினியிலெவ்வுயிரும்
எண்ணவொண்ணாதவரம் இனிமையுறவடைந்த
அர்ச்சியசிட்ட அரியதவப்பேதுருவின்
சர்ச்சங்கநீதி தன்னையவரிடமாய்
எச்சங்கமானதுக்கு மியல்பாகவேசெலுத்தி
அச்சங்கள்தீர்க்கும் அவரவர்கள்நாயகமாய்
சுத்தரிற்சுத்தன் சுருதிமறைத்தலைவன்
மெத்துமுறோமையிலே வீற்றிருக்கும்நீதகுரு
இப்புவியில்மாந்த ரெவருமவருடைய
ஒப்பமின்றிமேற்குருவென் றொருவரைச்சொல்லவொண்ணா
ஆனசந்தப்பாப்பு அறுக்கைதவறாது
தானந்தவஞானசபைச் சங்கமுறைப்படியே
ஓதவருள்புரிந்த உற்றதிருமந்திரத்தில்
நீதியுறுசித்திரையில் நீள்நாள்முகனையிலே
ஆனதவயாக்கோபு அந்நாள்மடிந்ததென்று
தானெழுதிவைத்தார்கள் சற்சங்கத்துள்ளோர்கள்
இம்பர்தனையாளும் இறைவன்குலாவுதிய
எம்பரதோராக விருந்தவிரண்டாமாண்டு
அந்தநாள்யாக்கோபு மம்பரத்திற்சேர்ந்ததென்று
இந்தச்சரித்திரத்தில் மேலோர்கள்தீட்டிவைத்தார்
கற்றோர்கள்சுத்தர் கலைஞானவேதமதை
மற்றோரறிந்துதொழ வானோனுதவியினால்
அன்னாளிருந்த அரியசுத்தமானவுடல்
மின்னுமெஸ்பானாவெனும் மேன்மையுள்ளதேசமதில்
கொண்டுவந்துயாக்கோபின் கொள்கையுள்ளமாணாக்கர்
அண்டர்சந்தியாகுடலை அங்கேயடக்கியதால்
மாதமெனுமாடி வருமிருபத்தைந்தாநாள்
நீதசந்தியாகுவுக்கு நீணிலஞானச்சபையோர்
இன்னாளுமென்னாளு மென்றுமிந்தநாள்தனிலே
பொன்னாடர்போற்றப் புகழ்திருநாட்செய்யுமென்று
கட்டளையிட்டபடி காசினியோர்மூவுலகுஞ்
சிட்டசந்தியாகுவுக்குத் திருநாளநடத்துவர்கள்
உண்மையிதுவானாலு முற்றபுவியோரே
வண்மையயாக்கோபுவிங்கே வாழ்நாளிழந்ததற்பின்

மண்ணோர்தனக்காக வானவனைமன்றாடி
திண்ணமாய்ச்செய்த திகழ்நவங்கள்கேட்டருளீர்.

முதற்பிரிவு முற்றும்.

இரண்டாம் பிரிவு.

பாயிரம்.

விருத்தம்.

ஆறிருவ ராகிருப ரங்கிஷமுமாகி
யவனிதனி லேயுருவ தாகிவருதேவன்
பேறுடைய ராகியென்றே டேவருவீரென்று
பெருமையொ டழைத்தவரி லிப்பெரியநாமம்
கூறுசந்தி யாகுவெனும் பேறுடையஞானி
கோமளம தானவிணி லேகினபின்னனை
வாறுநவ மானதனை யேசிறிதுகூற
மகிமையழி யாதமரி யாள்சரணமக்கே 106

விண்ணவர்கள் தன்னிலொரு மன்னுதவனாகி
மேதினியி லாறிருவ ருள்ளொருவனாகி
அண்ணலே ரோதைமுனி வால்மடிவதாகி
யாதியனை யானமரி யாளூறவனாகி
மண்ணிலுயி ரோடுவெகு பாடுளனுமாகி
மானமதி லேமகிழ வானநவமாகி
எண்ணரிய யாக்கோபு விப்புவியிற்செய்யு
மியல்புதுமை கூறமரி யாள்சரணமக்கே 107

அஞ்சுநடை பூதியமு மாளிறைவர்சீஷன்
அன்றுலக மோடியி ரளித்தவரின்சீஷன்
அஞ்சுமுறி வோடுகுரு சேறினவர்சீஷன்
அன்றழுது வழியில்வரு மரிபுதல்வர்சீஷன்
அஞ்சுபொறி யஞ்சருளு மந்தமிலார்சீஷன்
அண்டமொடு தாலமதை யாள்பனின்சீஷன்
அஞ்சுநில மீதுபுவி யோர்மகிழநாளு
மருளுநவ மோதமரி யாள்சரணமக்கே 108

கற்புஅழி யாதுதவ யோகியுடல்தன்னைக்
கடுகமுடு கிச்சுகம தடைபவர்கடம்மை

நற்கதைக ளானவுண்மை யெழுதினவர்தம்மை
நாவிலொரு போதுமிழை யேற்றவர்கள்தம்மைப்
பொற்குருசி லாதியரு காக்குமதினாயன்
புவியிலுடல் காணமரி யாதமரியான
அற்புதம தானகனி நேசமுளனிங்கே
யருள்புதுமை பாடமரி யாள்சரணமக்கே 109

அம்மானை.

முன்னோர்களிகூர மூவுலகோர்கொண்டாட
அன்னாட்சுவக்கீனு மானாளுமீன்றெடுத்த
பெண்ணைமனுக்குலத்தின் பேரின்பபாக்கியமே
மண்ணோர்கதிதிறக்க வாசலேமாதவமே
நின்கிளையில்வந்துதித்த நேசப்பிறவியெனும்
அன்புடையாளான அருஞ்சலோமைபெற்றெடுத்த
வாலக்குமாரன் மகிமையுள்ளசந்தியாகு
ஞாலத்திற்றன்னுயிரைத் தற்பரனுக்காயீந்து
என்றுமுடியாத வேகாந்தமோக்கிஷத்தில்
சென்றுபரன்சன்னிதியிற் சேர்ந்தங்கிருந்தாலும்
நீணிலத்திலேயிருக்கும் நேசக்கிறீஸ்தவர்க்குத்
தாணிரக்கத்தோடே சருவேசுரனிடத்தில்
மன்றாடியென்றும் மகிமைநவஞ்செய்ததெல்லாம்
நன்றாகயானும்நவிலவென்றெண்ணுகிறேன்
ஆயிரம்நாட்காக்கை அரும்புனலிற்றோய்ந்தாலும்
தூயவெளுப்பாமோ தொல்புவியில்மானிடரே
எப்பரிசாயென்நாவா லெண்ணிவசனித்தாலும்
ஒப்புவிப்பதல்லா லொழுங்குரைக்கக்கூடுமோதா
காவியங்கள்பாடுதற்குக் கற்றோர்கள்மானிலத்தில்
ஆவிதனக்கருட்செய் அன்னைகிருபையின்றி
பாடுவரோவாரும் பரகதியைவேணுமென்று
தேடுவரோவம்மாள் திருவிரக்கமில்லாமல்
முன்னாள்முனிவுகொண்டு மூவேவல்காத்தேந்தி
பொன்னாடர்காணப் புவியழிக்கவேண்டிவர
மைந்தனுடனிரந்து மானிலத்துள்ளவர்கள்
உய்ந்துகதியடைய உன்னுதவிதந்திலேயோ
நற்றுணையேநீதி நடுவென்றிருத்தாயே
முற்கிளையிலுன்மரபில் முந்துசலோமைபெற்ற
பொற்கதிருக்கொப்பான புண்ணியனாய்யாக்கோபு
வெற்றியுடெஸ்பானியவில் வீற்றிருக்குங்காரணமும்

அம்மண்டலத்துக் கரசானமன்னவர்கள்
எம்மண்டலமு மிறைஞ்சுயாக்கோபுவுக்கு
ஆலயங்கள்செய்ததுவு மன்பாகவேயறிந்து
கோலதேவாலயத்தைக் கொள்கையுடன்வந்துகண்டார்
எண்ணவொண்ணுப்பாக்கியத்தை இவ்வுலகிற்பெற்றதுவும்
அண்ணாம்றெம்மிலென்ற ஆனந்தநீதிமன்னன்
கப்பமென்றுகன்னியரைக் கன்மசோனர்கைக்கு
அப்போகொடாததினுல் அங்குவந்தசண்டையிலே
வேந்தரிருபடையும் வெம்பிப்பொருததுவும்
போந்தசந்தியாகுஅந்தப் புத்தியில்லாச்சோனகரை
வெட்டித்துரத்தியதும் வெங்கரிமேலேற்றியதும்
பட்டணமாங்கும்பரென்ற பண்பானமாநகரைச்
சோனர்பிடித்ததுவும் தொம்பறுணுந்தென்றரசன்
தானையுடன்சென்றுபதி தன்வசமாய்க்கொண்டதுவும்
ஆனசந்தியாகி னரியதேவாலயத்தில்
ஞானமுறுவிசுப்பும் நன்மையுறுசேனைகளும்
கண்குளிரமன்னர் களிகூரவானவர்கள்
வெண்பரிமேற்சந்தியாகு மேதினியில்வந்ததுவும்
பாதகர்சோனர் படையாற்றிருவுடலும்
சேதமுறுமண்ணிற் றிருந்தாண்டுஅஞ்ஞூறும்
தங்கியவாறுமங்கே தற்பரனுர்தன்னருளால்
பொங்குகதிரெறிக்கப் பூவுலகிற்கண்டதுவும்
கற்பழியாத்தொம்போஞ்சு காரணமாம்நீதிமன்னன்
அற்புதமாய்க்கண்ட அழகுத்திருவுடலை
சேனைபுடைசூழச் சென்றுகண்டசெய்திகளும்
நானியன்றமட்டில் நவிற்றத்துணிந்துகொண்டேன்
அந்நகரிலுள்ள அலங்காரமானதெல்லாம்
இன்னுஞ்சிலதுரைக்க எல்லோருங்கேட்டருளீர்

நகரச்சிறப்பு.

விருத்தம்.

இந்நிலமேல் மன்னுமெஸ் பானியாவென்னு
மெண்டலமு மண்டலமு மன்றுபுகழ்தேசம்
தன்னில்வரு காரணமெய்ஞ் ஞானவுண்மையான
தருமநெறி யோர்க்குநகர் முறைவழமையெல்லாம்
பன்னுகலை யுன்னுகவி பன்னுதமிழ்வாணர்
பாடரிது நாடரிது தேடரியவம்மாள்
கன்னிமரி யென்னுமனை தன்னடியைநம்பிக்
காதலொடு மாநகரை யோதிடுவதாமே 110

வேறு.

மங்காதவெஸ்பானு மண்டலமதாளுமுடி
மன்னர்தேசங்கள்கேளீர்
பொங்காழிசூழுபோர்த் துக்கால்மல்காவியொடு
புகழ்பெறுகசித்தலேயும்
தங்குகலிலேயமா நகராமுடனேகீர்த
தக்கரக்காளினுடனே
சிங்காசனத்திருந் தெழில்முடிபுனைந்துஇத்
தேசமதைஆண்டனனரோ 111

அங்கங்கிலுள்ளமுடி மன்னவர்கள்தேசமதில் அரியபுகழ்கூறவெளிதோ
துங்கநற்கவிஞர்கள்தம் நாவாலியம்பரிய தூயவெஸ்பானுநகரில்
சங்கையும்மனுநீதி பெருமையும்வளமையும் தாணியுளமுறைமையான
மங்கலவிதங்களும் தங்களில்லறங்களும் வரிசையுங்கெளுமறுவே 112

முத்தர்கள்பிறந்தநகர் முதுபேரிறந்தநகர் முன்னேனுயர்ந்திடுநகர்
தத்தறும்ஞானமொடு வேதமனுநீதியும் தவறுதுநிறைவாநகர்
மெத்துமுடிமன்னரொடு மிசைவீருள்ளநகர்மேதினியில்மேன்மைநகரே
புத்தியுடனறியுநெறி சருவமும்மிகவளரு பொங்குமெஸ்பானுநகரே 113

சிட்டர்கள்குருக்களும் கலைவாணர்தேசிகர்கள் தேவாலயங்கள்மறைதேர்
பட்டணசுவாமியர்கள் பெரியோர்கள்துரைமக்கள் பாடிகாவற்றலைவமார்
செட்டியர்கள்பலகலைகள் செய்யுந்தொழிற்குரிய சேனுபதித்தலைவரும்
கெட்டியாய்ப்பட்டவர்த் தனர்மகுடவர்த்தனர் கிளர்ந்தவெஸ்பானுநகரே.

காவெங்குமலர்தங்க கனிபொங்குகனல்தங்க கனவிலங்கெங்குமங்கே
நாவெங்குமிரதங்கள் நலதுங்ககவிதங்கள் நடனங்களிடமங்கலம்
பாவெங்குமமிர்தங்கள் பார்தந்தைமறைகொண்டு பாடுற்றநாதகீதம்
கோவெங்கள்மரிதாய்தன் மகவினருள்கொண்டுநகர் குறைவின்றிவளர்கி
ன்றதே 115

தோதகவனக்கிள்ளை மஞ்ஞைஅன்னப்பேடை துலங்கலங்காரசவிை
கீதகவனக்குயில் வரிப்பூவைபுள்ளரசு நீரோசைகொண்டாடிடும்
சூதகீதத்திறெடு வண்டுபாடப்பரவு சுந்தரசுகானந்தமாய்
போதகமகிழ்ச்சிமனு வோர்வெகுபுகழ்ச்சியுள பொங்குமெஸ்பானுநகரே.

அம்மானை.

எண்ணமற்றுமண்ணி லிருக்கும்பெரியோரே
நண்ணுமெஸ்பானுவெனும் நாட்டிலுள்ளகாரணத்தை
கற்றோருரைக்கரிது காசியோர்கேட்கரிது
முற்றுங்கலைவாணர் மோசமாய்ச்சொன்னாலும்
வற்றுக்கிருபையுள்ள மாதாவின்தன்னருளால்
எற்றுங்கடல்சூழ்ந்த எண்டிசையாமிவ்வுலகை

மண்ணிற்பெரியோர் மகிழ்ந்துநாற்கூறாகும்
என்னவுரைத்தார் இதின்பேரைக்கேட்டருளீர்
ஆப்பிரிக்காஆசியாவோ டரியவயிரோப்பா
நாப்பயிலும்வாணர் நவிலுமமரிக்கவென்று
சொன்னதிக்கிற்கூறிடுகில் துங்கவைரோப்பில்
மன்னுமெஸ்பானாவெனும் மண்டலமுமுள்ளதுவே
சூழுமெஸ்பானாவெனுந் துங்கப்பெரும்பதியை
ஏழுகூறாக்கி யிராசாக்களாண்டிருந்தார்
ஏற்றுமெழுவேந்தர் எண்ணமறவாண்டிருந்தார்
போற்றும்பதிப்பேர் புகலக்கேளம்மானை
பேரார்ந்திலங்கும் பெரியபோர்த்துக்காலும்
சீரார்கமல்காவியென்ற செல்வத்திருப்பதியும்
பொங்குகசித்தேல் புகழுங்கிரனாகம்
தங்குங்குலிசவுடன் தக்கவரக்கானும்
ஆனலேயானென்ற அன்பாரெழுபதியும்
தானாகுமெஸ்பானா தன்னில்மன்னராண்டநகர்
வட்டக்கடல்சூழ்ந்த மன்னுமெஸ்பானாவுக்கு
பட்டணவளூரவர்கள் பதிகள்வெகுவானாலும்
அந்நாளிலேழுமன்ன ராண்டிருந்தராச்சியத்தை
இந்நாட்களிலேயிரண்டு ராசாக்களாளுகின்றார்
ஆரென்றாலிப்போ தரசாளும்மன்னவர்கள்
பேரார்போர்த்துக்காற் பெருமையுறுமன்னவனும்
துங்கவிஸ்பான்யாவின் தொல்வேந்தராமிருவர்
மங்காக்கிறீஸ்தவராய் மாநிலத்தையாளுகிறார்
அன்னாளுமின்னாளு மங்கரசர்செய்முறைமை
என்னாவினாலே எடுத்துரைக்கக்கூடியதோ
சொன்னாற்றாலேந்திடுமோ துங்கவெஸ்பானாநகர்
தன்மேன்மைதன்னைச் சரியாயுரைப்பவரார்
ஆராருமிந்த அரியவெஸ்ஸ்பானாவைப்போற்
பாருள்ளேவேறு பதிகாணோமென்பார்கள்
நாவாலியம்பரிய நாதன்திருவேதத்
தேவாலயமுந் திருப்பதியுமுள்ளநகர்
முந்துதவக்குருக்கள் முன்னோர்பெரியோர்கள்
கந்தமுறுவாணர் கலைஞானதேசிகர்கள்
கற்றோர்களுள்ளநகர் கல்விபெருகுநகர்
உற்றமனுநீதி யோதுதிருநகராம்
புத்திமிகுத்தநகர் புண்ணியங்களுள்ளநகர்
சித்தமும்ஞான சிறைவேதமோதுநகர்

மாமண்டலீகர் வரிசையுள்ளநன்னகராம்
தாமெண்டிசைபோற்றுஞ் சங்கையுள்ளமாநகராம்
மந்திரிமாருள்ளநகர் வன்னியர்களுள்ளநகர்
சந்ததமுஞ்செங்கோல் தழைத்தோங்குமாநகராம்
கற்பால்மிகுத்தநகர் கன்னியர்களுள்ளநகர்
அற்புதனைநோக்கி யனைவோரும்போற்றுநகர்
மன்னர்மனுநெறியும் மாதவத்தோன்றன்னொழுங்கும்
உன்னிக்கலைவாண ரோதவெளிதாமோ
ஈவோரேயல்லாம லிரப்போரிழிகுலத்தோர்
தாவுநகரிதனிற் றுர்க்குணத்தோர்காணரிது
ஓலக்கமேடை யுயர்வீதிகோபுரங்கள்
கோலவழகான கொற்றத்திருநகராம்
சிங்காரத்தோப்புந் திகழ்வீதியுந்தெருவும்
அங்கேசிறந்திலங்கு மரியதிருநகராம்
காரணங்கடோறுங் கடவுடனையேற்றித்
தாரணியிலேபோற்றுந் தவத்தோர்களுள்ளநகர்
மந்தாரம்பிச்சி மயிலைமருக்கொழுந்து
நந்தாவனங்கள் நறைவீசும்பூஞ்சோலை
பூந்தோட்டமான புகலரியதண்டலையில்
வார்ந்தோடுந்தேனை வரிவண்டெடுக்குநகர்
தீயாற்செழுமலராற் செந்தேனொழுகிவிழ
வாயாற்கனவிலங்கு வந்துகளிகொண்டருந்த
அன்னம்விளையாட வஞ்சுவன்னப்புள்ளாட
வன்னப்பசுந்தோகை மயிலினங்கள்தானாட
கொஞ்சுபசுங்கிளியுங் கோகிலமுந்தானாட
பஞ்சவர்னச்சேவல் பகர்பூவைதானாட
கீதமெனவே கிளர்சுரும்புதானாட
ஓதுமலையிலுள்ள ஓவியத்தையொத்தபுட்கள்
நாதகீதம்பாட நானிலமுங்கொண்டாட
சேதங்களின்றிச் செழிக்குந்திருநகராம்

எஸ்பானாவின் நிலைமை.

விருத்தம்.

எண்டிசையுமதிக்கரிய மண்டலவிஸ்பானிய விறையவன்றிருவுளமதால்
பண்டுள்ளபிரதான வரிசைமானங்களும் பட்டணப்பெரியோர்களும்
திண்டிறல்சேர்வீருஞ் செங்கோலினிருபருஞ் சேனாபதித்தலைவரும்
மண்டலமதானதினில் மிகநோகவெவந்த வரலாறுகேளுமனுவே

இன்னகர்குளப்பமும் மன்னவரிழப்பமும் இந்நாளிலங்கான தால்
மன்னுமைரேப்பமேல் மின்னுகிரிடத்தலைவ மாபாவிசோனகன்றான்
தன்னுடைசெயத்தினா லன்னவெஸ்பானாவிற் றானைவிட்டேயமர்செய்து
மன்னவர்பயப்படத் தன்னெறிநடத்தியே வந்ததுஞ்சிலகாலமே 118

மன்னரெழுபேர்களும் மண்டலவெஸ்பானாவில் மாபாவிசோனகன்றான்
சொன்னபடிகப்பமுத லெக்காரியங்களுஞ் சோர்வின்றியேகொடுத்து
தன்னகர்தளப்பமும் மன்னவர்துளக்கமுந் தலைவருங்கண்டிரங்க
இன்னமெஸ்பானாவெனு நன்னகருளோரிந்த வியல்பாயிருந்தனரே.

அம்மானை

கொண்டல்மழைசொரியக் குளிராற்கொடுங்கியழ
பண்டுமலையிற் பழந்துணியினாற்பொதிந்து
அன்னையருஞ்சூசையரு மாவுமொருவேசரியுந்
தன்னைவணங்கத் தனித்திருந்தோன்காரணத்தை
ஆராலளவிடலா மம்புவியிலுள்ளோரே
பாராரெஸ்பானாவெனும் பட்டணத்தையாண்டமன்னர்
ஏழுபேரென்று மிவர்பெரியமைந்தரென்றும்
வாழும்புவிக்குளிந்த மண்டலம்போலில்லையென்றும்
சொன்னோமேயானாலுஞ் சோதிபரன்சோதனையால்
மன்னுமெஸ்பானாவெனும் மண்டலத்தையக்காலம்
செங்கோல்செலுத்துகின்ற தேர்வேந்தரானோரும்
மங்காவமைச்சர் மகிமைத்துரையோரும்
சேனாபதிகள் திரள்வீரர்சேனைகளும்
நானாவிதத்தோரும் நாடும்நகரிகளும்
பட்டணமுமூரும் படையும்பலமனுவும்
தட்டழிந்துகெட்டுத் தளம்புமந்தவேளையிலே
வாளாண்மைகொண்டு வலுவுடையசோனரசன்
ஆளுமெஸ்பானாவெனு மானந்தமண்டலத்தில்
மன்னரெழுவரையும் மானகரியானதையும்
தன்னுள்ளேகிழாக்கித் தானேபெரியவனாய்க்
கப்பமும்வாங்கிக் கடுங்கோல்தனையோச்சி
எப்போதும்போலே இயலைரோப்பிலிருந்து
வஞ்சநிறைசோனன் வலியாயரசாள
அஞ்சுநிலமு மடக்கினானம்மானை

கப்பங்கேட்டல்.

விருத்தம்.

அட்டதிக்கும்புகழு மெஸ்பானாதன்னிலே யந்நாளிலுள்ளகொடுமை
மட்டிதோசோனகர் வருத்துமநியாயங்கள் வசனிக்கவுங்கூடுமோ
கட்டுகெப்பங்களா லந்நகரியெங்குமே கலகங்களானதுயரம்
பட்டணமுமூர்களும் பலவுந்தவிர்க்கவே பகைமுடித்தாரிவர்களே 120

வஞ்சனையிடுக்கமும் பஞ்சபாவங்களும் வலிமையுமியற்கையான
நெஞ்சிடைதரித்ததுய ரானதும்பெரியோர்கள் நிலைதழன்றேயுறுதலும்
அஞ்சுநிலமானநக ரெங்குமேவந்தவவ மானமதையேதென்னவே
பஞ்சிவெகுவாயென்று அறிவானமுறைகண்டு பாடினார்பாவாணரே 121

ஆதிக்குவந்ததிரு வடியார்தலங்கடோறு மாகத்தயங்குதுயரம்
நீதிக்குவந்தநா ரோருக்குமங்குபெரி யோருக்குமுந்தவிதனம்
சூதிக்கொடும்வினையு மூருக்குவந்தவடு வாகிக்கொடுஞ்சோனரால்
சோதிப்பரன்கிருபையாமத்தலங்கடோறுஞ்சோனர்ப்படுந்துயரமே 122

அம்மானை.

கேட்டீரோமானிடரே கீர்த்தியெஸ்பானாவெனும்
நாட்டிலேசோனர் நடத்துமநியாயம்
காதாலேகேட்பர்களோ கண்ணாலேபார்ப்பர்களோ
ஏதோதிருவுளந்தா னிக்கொடுமைகண்டறியோம்
ஏற்றுங்கிறீஸ்திறைவன் ஏகன்றிருமறைக்குக்
கூற்றுவன்போல்வந்த கொடும்பாவசோனர்சனம்
மங்காதவெஸ்பானா மண்டலத்தையாண்டிருந்த
துங்கவரசர்களைத் தோற்றும்பெரியோரை
அவ்வூர்த்துரையை அறிவாளரானோரைக்
கவ்வைப்படுத்திக் கலக்கமிட்டுத்தேசமெங்கும்
செய்வதெல்லாந்தீமை திரும்பாதவஞ்சநெஞ்சன்
உய்வதேதையோ ஒருதுணையுங்காணாத
மாதர்கடம்மை வருபகுதிதான்வாங்கிச்
சேதப்படுத்திச் சிலரைக்குடியோட்டி
மண்ணாளச்சோனன் வழக்கோதான்வையகத்தே
மண்ணைட பிசைந்துஅன்று வாய்நீராலந்தகர்க்கு
கண்ணைக்கொடுத்தாதி கர்த்தன்றிருவுளத்தால்
எண்ணத்தைச்சற்றுரைக்க எல்லாருங்கேட்டருளீர்
வையத்துக்கில்லாத வஞ்சநெஞ்சநெட்டூரஞ்
செய்கொடுஞ்சோனரசன் தேசந்தழம்புவதைப்
பூமிபொருமற் பொருமிப்புதைத்ததுவே
நாமுமிருக்கையிலே நம்மக்களானோர்கள்

ஈனராய்வன்னிக் கிரையாயிருக்குமந்தச்
சோனகரால்மண்ணிற் றுயரப்படுவதெல்லாம்
கண்டுமுகம்வாடிக் காவல்புரிசம்மனசு
கொண்டலனையநெடுங் கூந்தல்தனைவிரித்து
நீண்டகுரலெடுத்து நீலவிழிநீர்சொரிய
ஆண்டவனைநோக்கி யழுதழுதுசொல்லலுற்றார்
எவ்வுயிருங்காத்தளித்து எங்கள்தனைப்படைத்து
செவ்வையுடனே திரிகாலமுமறிந்து
மூவரொருமுதலாய் மூந்தாமற்பிந்தாமல்
தேவபரலோக சிங்காசனத்திருக்கும்
ஆதியேசோதி யடியோர்தனைப்படைத்து
நீதியாய்ச்சென்ற நிகழாண்டுஆனதுகள்
ஐயாயிரத்து அறுநூற்றுத்தொண்ணூறும்
மெய்யாகவொன்பதுவும் வீற்றிருந்தேனஞ்சாமல்
அன்னுட்சலத்தா லவனிதனையழித்து
முன்னேனெனும்நோவை முத்தித்தவமுனியை
என்துணையாய்வைத்தா யிரண்டாயிரம்வருஷம்
பின்புதொழாயிரமும் பேசரியவோரேழும்
அன்பதுவுமின்று மடைவாகச்சென்றதற்பின்
என்துயரங்கண்டு எனக்கினியபோரகி
மூவைந்துஆண்டும் முதியவிரண்டாயிரமும்
கோவஞ்சமில்லாத கொற்றவபிராமை
தந்தாரதற்பின் தனிமைகண்டுதாரணியில்
அந்தஇசிறே லரியமக்களானோர்கள்
தூயவெசித்தான தொன்னகரைவிட்டவர்கள்
ஆயிரமுமஞ்ஞூறு மையிரண்டுஞ்சென்றவந்நாள்
இன்னுந்தவிது இறையானகொற்றவனை
சொன்னமொழிப்படியே தோற்றியோராயிரமும்
எண்ணுன்குமென்னை யியல்பாகஆளவைத்தாய்
நன்னுடுரேமை நகர்தோன்றியிவ்வளவும்
அன்பத்திரண்டு மதின்பின்னெழுநூறும்
முன்புற்றபின்னர் முடிசூட்டுமெம்பரதோர்
ஒத்தவியானுவென்போ னேங்குமொருகுடைக்கீழ்
இத்தரையையோச்சுகின்ற ரெண்ணைந்துமோரிரண்டு
முத்தியொலிம்பவென்ற மோசமற்றநீதிதவம்
பத்தாயிருந்த பகர்வருஷமானதுகள்
தொண்ணூறும்நூறுந் தொடுத்ததொருநாலும்
எண்ணமாய்ச்சென்று எனதுதுயர்நீங்காமல்

அன்பேநிறைந்த அபிருமெனுமுனிக்கு
முன்பேநீர்சொன்ன முறைமைதவறாமல்
கோமளப்பொன்மேனிக் கொஞ்சுகிளிப்பாலகனுய்
நாமழக்கண்டிரங்கி நம்பிழையைத்தீர்க்கவைத்தாய்
வித்தாரமாஞ்சிமியாம் வீட்டில்விருந்தான
கத்தாவேநீதிக் கடவுளனேகாரணனே
விண்ணேற்றவேண்டிநம்மை மேதினியில்நீர்பிறந்து
கண்ணுகக்காத்தாயே கர்த்தாவேயிந்நாளில்
உற்றகிறீஸ்தவர்க ளுன்வேதத்துள்ளவர்கள்
குற்றமில்லாநீதி குலவுமெஸ்பானோரை
வெங்கோபங்கொண்டு விஷம்போலச்சோனர்களும்
பங்கப்படுத்தப் பரனேதிருவுளமோ
நச்சுமரமாலும் நானிலத்திலுள்ளமுறை
வைத்தவன்கொல்லும் வழக்குண்டோவையகத்தே
காப்பதுவுமன்றிக் கடவுளேயுன்கிருபை
ஈற்றிலளிப்பதுவு மெல்லாமுன்சித்தமையா
என்றுமிகவணங்கி இப்புவியைக்காத்திருக்கும்
நன்றிசேர்சம்மனசு நாதனுக்குச்சொன்னதினுல்
ஒன்பதுகூட்டாஞ்சுகளு முற்றரிவருடனே
அன்புகொண்டுவானத் தனைவோரும்போற்றிசெய்ய
திரிகிரீடஞ்சூட்டித் திரித்துவமுமேகமுமாய்
அரிசுடருமேதினியோர்க் காகச்சிறக்கவைத்த
ஏகாதிகர்த்த னிரக்கங்கேளம்மானை
வாகாய்மரிமகவாய் மாடாடுறைமலையில்
மெய்க்கோலமாக விழியிரண்டும்நீரொழுக
வைக்கோலின்மீதே மலர்ப்பாதந்தோயநின்ற
ஆண்டுஎண்ணூறு மதிற்கூண்டொருநான்கும்
கூண்டவந்நாளிலந்தக் கோவேந்தர்வங்கிஷத்தில்
உதிக்குங்குலக்கொழுந்தே யுண்மைதவறாமல்
கதிக்குமல்காவியென்ற காரணமாநகரில்
பதிக்கும்புகழோங்கப் பட்டந்தனைச்சூட்டி
சதிக்கும்பகைநீங்கித் தாங்கிக்குடியனைத்தும்
தொம்மிறெம்மிலென்றுசொல்லுந் துங்கத்திருநாமம்
தம்மிற்றரித்தோன் றலம்புரந்தானம்மானை
இறெம்மிலேன்னும்வேந்த னேகன்றிருவருளால்
மறைசேர்கிறீஸ்தவனுய் வாழ்ந்திருக்குநாளையிலே
பொய்வேந்தன்சோனனெனும் பூவுலகில்மாபாவி
மெய்வேந்தன்தொம்மிறெம்மில் வீற்றிருக்குந்தேசமதில்

SWAMI GNANAPRAGASAR LIBRARY
O. M. I.
No.
Hospital Rd
Jaffna

எப்போதும்போலே யிருநூறுகன்னியரைக்
கப்பமாய்வாங்கிவரக் காவலாட்போக்கிவிட்டான்
வாழுமைரோப்ப மன்னன்விடுத்தவர்கள்
ஆளுமல்கார்வியென்னு மண்ணவிடம்வந்தணுகி
அண்ண லுரைத்தபடி அரிவையரைக்கப்பமென்ன
மண்ணிலேதாருமென வந்துரைத்தாரம்மானை
வேந்தனைரோப்பான் விட்டதானுபதியை
வந்தவிறெம்மில்கண்டு என்னசெய்வோமென்றுஎண்ணி
அழகியசெம்மறியை யாகக்கொடும்புலிக்கு
இளகிக்கொடுத்தால் இளப்பமிகுமென்றுசொல்வி
வேதமறியாத வெங்கோபச்சோனனுக்கு
நீதமடவாரை நீணிலத்திலீயாமல்
வேறேதும்வேண்டியது மிக்காகநான்தருவேன்
கூறியகன்னியரைக் குவலயத்தில்நாமளித்தால்
நங்குலத்தில்மிக்கவடு நாதனுக்குமேராது
எங்குலத்தோருள்ளளவு மிந்தவசைபோகாது
என்றுசொல்விப்போகவிட்டா னேந்தவிறெம்மியலும்
மன்றில்வந்தசோனனினுள் வந்ததனைச்சொல்லலுற்றான்
தன்னுளுரைகேட்டுத் தங்குமைரோப்ப
மன்னனேன்வந்தழிந்த வாறுகேளம்மானை

படையெடுத்துவரல்.

விருத்தம்.

தலங்கடன்னிற் றருத்தளிர்போற் றூனையுள்ளான்
தலைவர்முறை நாலாறுந் தளைக்குமேலான்
துலங்குமை ரோப்பைதன்னை யாளுஞ்சோனன்
சோதிமறை யறியாத் துட்டன்மட்டில்
புலன்கள்கன லெழுந்துபொங்கிப் பொருமிமோதிப்
புவனமதில் வாகைமேரு மன்னன்றானே
பெலன்களறி வோம்றெம்மி லாசன்போிற்
பீடேனே பெரும்படையை யெடுமென்றானே 123

வன்முசலம் கதகுலிசம் குந்தம்வச்சிரம்
வாள்வளைந்த துவிதவகை தனுவும்வேண்டும்
துன்முசுண்டிப் படையுடனே சூலம்வேளம்
தூகதங்கள் துலங்கவெகு சேனைசூழ
முன்னகன்ற முழவதிரத் தேரிலேறி
மூதண்டஞ் செவிடுபட மோதும்வெள்ளம்
கன்மரெனுஞ் சோனர்படை கடல்கள்போலக்
காவலன்றெம் மில்முன்னே கதித்தேசென்றார் 124

அம்மானை.

கொண்டல்சொரியக் குளிர்சேரும்மாதமதில்
பண்டுமலையிற் பழந்துணியினுற்பொதிந்து
அன்னையுஞ்சூசையரும் ஆயருமானினமும்
தன்னைவணங்கத் தரித்திருந்தோன்காரணத்தை
நம்பித்தொழுதிறைஞ்சும் நரபாலனுனறெம்மில்
செம்பொற்கிரீடமணிச் செம்மலுடன்போர்புரிய
மாறுச்சினத்துடனே மன்னனெனுஞ்சோனகனும்
கூறுகக்காந்திக் கொடும்புலிகள்போல்நடந்து
ஆனைகுதிரை அடர்பரிதேர்காலாட்கள்
சேனைதகுதியிடச் செம்பொற்கொடி துலங்க
கொம்புதவிலுங் குழலுங்கொடிபடையும்
பம்மையுஞ்சூழப் பவளமணித்தேரேறி
இறெம்மில்பதியழித்து வந்திழைமார்தங்களையும்
திறையாகவேவாங்கிச் சீக்கிரத்தில்மீண்டுவர
வேணுமெனவவனும் வேண்டாத்தலையுடனே
தானுமிறெம்மில்பதி தன்னில்வந்தானம்மானை
வந்தான்படையெடுத்து மாற்றானெனக்கேட்டு
கொந்தார்குழலியரைக் கொற்றவர்க்குக்கப்பமிட்டால்
சந்தானந்தாழ்வடைந்து தற்பரார்க்குமோமல்
எந்தெந்தவேந்தர்களு மெணநகைப்பரென்றுசொல்லி
வேந்தனிறெம்மியலும் வேதக்கிறீஸ்தவரும்
போந்தபடைபொருதப் புறப்பட்டாரம்மானை
ஊர்க்குப்பறைசாற்றி உள்ளூறவேநாலுசுற்றும்
காக்கும்படியாகக் காவல்வைத்துத்தேசமெங்கும்
கற்றகுருக்களையுங் காரியப்பேர்தங்களையும்
உற்றபடிகேட்டு உடையவனைநெஞ்சில்வைத்து
அந்நாட்டொம்போஞ்சு அரசனுக்காய்ச்சோனர்படை
தன்னைக்கெடுத்துத் தலமாளவைத்தபரன்
என்னையுங்காப்பா ரெனவேஇறெம்மியலும்
உன்னியேயெம்பரனை உள்ளந்தனிலிருத்தி
அச்சந்தவிர்த்து அமர்க்கோலமும்புனைந்து
மெய்ச்சங்குதானூதி வெற்றிக்கொடிபறக்க
வேற்படையும்வாட்படையும் விற்படையும்மற்படையும்
போர்ப்படைகளுள்ளதெல்லாம் போதவணிநிறுத்தி
ஆர்க்காகுமிவ்வார்த்தை அம்புவியிற்கற்பழியாப்
பேர்க்குரியகன்னியரைப் பிணைகொடுப்பதில்லையென்று

தீச்சோனர்மேலே செவிடுபடஓலமிட்டுப்
பாச்சினார்தேர்பரியைப் படையிரண்டும்முட்டியதே

றெம்மில்படை தோற்றோடலும் தேற்றலும்.

விருத்தம்.

தேரினுக்குரிய வீரடர்தேரோடு
    தேரைமுட்டிட முனைந்தனர் முனைந்தகணைப்
போரினுக்குரிய சிங்கமதடர்ந்தெனப்
    போர்விளைத்தனர் புரண்டுபடையங்குதிரக்
காரினுக்குரிய மேகமதுவொன்றுபுனல்
    காரணப்படி சொரிந்ததென வங்கமிரு
பேரினுக்குரிய வீரிருபங்குமிகு
    பேதமுற்றிட மடிந்தனர்களத்திடையே 125

சிலைவளைத்தட லெதிர்த்தேயிரண்டருகு
    தேரைமுற்பட வளைத்தனர்கள்தேரிலுள
கலையறுத்திட வுதிர்த்ததுசரங்களொடு
    கவசமற்றிட வடர்ந்ததுகடுஞ்சமர்கள்
தலையறுத்திட விழுந்ததுசிரங்கள்பட
    சாமறுத்திட வுதிர்ந்ததுதகர்ந்துஇரு
மலையெதிர்ப்பென விடிப்பெனவெதிர்ப்புலிகள்
    வயணமென்னமண் மடிந்தனர் மதித்தவாசர் 126

அம்மானை.

புத்திக்கிறீஸ்தவரும் பொய்யரெனுஞ்சோனகரும்
கத்திக்குமுறுங் கடலிரண்டுசூழ்ந்தாற்போல்
தேருஞ்சிலையுந் திரட்பரியுங்காலாளும்
ஆருமதிக்க அவரவரேதானெதிர்த்து
சிந்தக்குருதி திரள்மடிந்துமண்ணில்விழ
குந்தக்குரல்மடியக் கொற்றவர்கள்கால்சாய
சென்னிதுணித்துவிழச் செம்மல்முடிபுரள
மன்னரிருபடையும் மாண்டார்காணம்மானை
காலாளுந்தேருங் கடும்பரியுங்கண்ணடங்கா
மேலாளுமங்குமிங்கும் மேய்யறவேபட்டாலும்
எண்ணுங்கொடுஞ்சோன ரெல்லையில்லாராகையினால்
மன்னுமிறெம்மில்படை மாற்றானுக்காற்றாமல்
ஓடினார்கெட்டா ருடையவனேதஞ்சமென்றார்
வாடினார்மெத்த மனஞ்சலித்தாரம்மானை
கவ்வியிளங்கன்று நாடுபுலிக்குப்பயந்து
செவ்வியதாயொழிக்குஞ் செய்திபோற்சேனையெல்லாம்

மாற்றலர்கள்காணாமல் மன்னனிறெம்மிலுடன்
காற்றுமியங்காத கானகத்தில்வந்தொதுங்கி
பரவியொளிபரந்த பாருலகமானதெல்லாம்
இரவியொளிமறைந்து எங்குமிருண்டதற்பின்
தொம்மிறெம்மில்தானுமற்றச் சூழ்ந்தபெரும்படையும்
எம்மிறையைப்பார்த்து இருகரங்கள்தான்குவித்து
விண்ணோக்கியேக விமலனையேயோதினார்
கண்ணோக்கியாதி கடவுளனுங்காவலனைப்
பார்த்துமனமிரங்கிப் பாரிலிறையவனைப்
பேர்த்துஇறெம்மில்வெல்லப் பேசியேயாக்கோபை
மண்ணில்வரவிடுத்தார் மாற்றானைத்தோற்கடிக்க
கண்ணிலிவர்முன்னே காரணவான்வீட்டியக்கோ
தோற்றியேநின்று சுடரிலங்கவாய்மலர்ந்து
மாற்றமுரைத்த வகையதுகேளம்மானை
தந்தைசெபதேசுவென்றுந் தாயார்சலோமையென்றும்
முந்தவேசோனர் முறைமைதவறாமல்
அதிர்ந்துமுழக்கமிட்டு அட்டதிக்குந்தான்குமிறி
எதிர்ந்துவருமிடிபோ லெல்லோருமச்சமுற
தூங்குமிருளகன்று சுற்றுஞ்சுடரொளிகள்
பாங்குடையவெய்யோன் பதினாயிரம்போலே
காவலன்முன்னே கனவனத்திற்றோன்றிநின்று
ஏவலனாகி யியாக்கோபுமென்சொல்லுவார்
அஞ்சாதேமன்னவனே யாதியிரக்கமுண்டு
வெஞ்சமர்க்குநான்வருவேன் வென்றுதரச்சோனகரை
ஆத்துமசுத்திபண்ணி ஆயத்தமாய்நீங்கள்
மாற்றலர்முன்போங்கள் மறுகாலுமென்றுசொல்லிக்
கூறுமொழிகேட்டுக் கொற்றவனுந்தான்மகிழ்ந்து
மாறுசெய்யுஞ்சோனகரை மறுகாற்பொருதுவெல்ல
மீண்டும்படையெடுத்து வேந்தன்சந்தியாகைநம்பி
வேண்டுமுரசுடனே வெல்லப்படையெடுத்து
புரவிதனிலேறிப் போர்த்துவசம்நின்றாட
இரவியுதிக்க எதிர்த்தார்கள்றெம்மில்படை
பேரிகைபொங்கப் பெருஞ்சேனைதற்சூழ
ஆரிதோவாறதிங்கே அஞ்சாமலென்றுசொல்லி
ஏந்தலாஞ்சோனகனும் எண்ணவொண்ணாச்சேனைகளும்
வேந்தனிறெம்மில்முன்னே வெம்புலிபோல்வந்தெதிர்த்தார்
ஆற்றாமலோடிவிட்ட அண்ணலிறெம்மியனும்
மாற்றான்படையுடனே வந்துபொரும்வாறதுகேள்.

மறுபடி போர்பொருதல்.

விருத்தம்.

நிருபாங்கங்கவர்கள் நிகழ்கரந்தங்கொசொரு
நெடுகொங்கொண்டுடல நிலமதின்றங்கிவிழ
கிரிடமங்கங்குதிர கிளர்சிரங்கங்களற
கெடியோடங்கங்கிருவர் கிரிடமங்கிடுபொடிகள்
பெருகியங்கிங்கவனி பிரபையங்கிங்கிருள்கள்
பிணமுதிர்ந்தங்கிருவர் பெருகிநின்றங்குருதி
வருணனன்றங்கதிக மழைபொழிந்தென்றதென
மணில்மடிந்தங்குருள மறுகிநின்றனரே 127

அரசாங்கிருதிரளு மறவெகுண்டமர்முடுக
வகிலமுங்கிடுகிடென வடர்விலுங் கதைகவணும்
இரதமுந்தங்கபரி யெதிருநின்றென்றெடுட
லதிரதந்தங்குபுகை யிணையறுஞ்செங்குருதி
கரமதுஞ்செம்பொன்முடி கவசமுங்கண்டமறு
களபிணங்கங்கைநிகர் குருதியெங்கெங்குமுற
வரமுறைந்தங்கிறெமில் மனர்மனந்தெளியவரு
வளமைகண்டண்டுவெண் டர்கள்மனதுடைந்தனரே 128

அம்மானை

கர்ய்மர்வுந்தேருங் கதலியுஞ்சூழ்காவனத்தே
பாய்மாவிலேறிப் பரவிவிழிநீர்சொரிய
ஆகாமைசெய்த அசடனுக்குஅன்றொருநாள்
போகாமல்வன்னரகிற் புத்திசொன்னேன்றன்றமையன்
இசக்கோவுதவிகொண்டு ஏந்தலாமெஸ்பாளு
திசைக்கோனிறெம்மில்படை சென்றெதிர்த்தாரம்மானை
வாளிதொட்டுவாளெடுத்து வன்முசலந்தண்டுகொண்டு
ஆழியொப்பதாக அமர்புரிந்தாரம்மானை
கைதுணிக்கமெய்துணிக்கக் கண்டங்கழல்துணிக்க
கொய்யுளையுந்தேருங் கொடிப்படையுங்கால்சாய
செய்யபடைத்தலைவர் சேனைக்களத்தில்விழ
கையில்மழுவேந்துங் காலாட்கள்பட்டுவிழ
தேர்க்காலொடிந்துவிழச் செம்பரிகள்தாம்மாழ
ஆற்றுமலோடி அரசர்புறங்காட்டத்
தண்டுஞ்சிலையுந் தனுவுங்கொடுவாளும்
அண்டிப்பொருந்தி யனலார்க்கும்வேளையிலே

பொய்ச்சோனர்மாளப் புரவியின்மேல்யாக்கோபு
மெய்ச்சோடணிந்துகளம் மேவினாரம்மானை

கிறீஸ்தவரின் வெற்றி.

விருந்தம்.

ககனமந்தரமகில கனகமின்னின்பிரபை
கதிர்கள்நின்றொளிவிழிகள் பளபளென்றிடவதிரச்
செகமதுங்கிடுகிடென திசைகளென்றுடலசையத்
திருவுறுஞ்செபதேசுடை திருமகன்திடுதிடெனவே
அகமகிழ்ந்துறுபரியி லதிகவெண்கொடியினொடு
அறவெகுண்டுறுமவுணர் நடுநடுங்கிடமண்மிசை
உகமிதென்றவர்கள்பய முறமெலிந்திடவமரி
லொருகணந்தனில்வருக வுலகமுய்ந்ததுவே 129

சிரமுயங்கணிகருவி திருமுகந்தபனவொளி
செயலெனவிலங்கவுதி செயமதுதுலங்க
காமுமங்கணிகடக களிறுவெண்பரியினொடு
ககனவெண்கொடியசையக் கன்மவெதிர்செல்லக்
கரமிழந்தனர்கொடிகள் தனுவிழந்தனர்பகைவர்
தலையுருண்டனர்சமர்கள் தனில்வெகுண்டனரிறைவர்
வரமிழந்தனரதிக வடிவிழந்தனர்நாகில்
வருடிநொந்தனர்கரிய வணர்மயங்கினரே 130

அம்மானை.

அம்பரம்மேலந்நா ளகுஸ்தீசாரென்றுசொல்லும்
எம்பரதோர்காண இருபாலும்முத்தர்தொழ
நாயறுமூன்று நடுவேயிராசகன்னி
ஆசறுபாலகனை அங்கைதனிலேயேந்தி
எங்குமாய்நின்றவர்க்கு மினியதிருத்தாயார்க்கும்
தங்குமாநேசந் தழைத்தசந்தியாகுவென்பார்
திக்கெங்கும்மின்னெறிப்பச் செங்கதிரோன்தோற்றமென
ஒக்கெங்கும்பொங்கி உருவிட்டுலகதிர
கோடைவடவையெனக் கொண்டல்பொழிந்தாற்போல்
ஆடைவிசும்பளக்க அண்டரகங்களிக்க
உள்ளக்கருணையினு லும்பர்பதியாளுலகில்
வெள்ளைப்பரியேறி வேந்தர்படைநடுவே
அங்கஞ்சுவடணிந்து அங்கையிலேவாளெடுத்து
மங்கைசலாமைமகன் வந்தெதிர்த்தாரம்மானை
மாற்றார்களானவர்க்கு மன்னனிறெம்மில்படை
தோற்றாரெனவறிந்து சொல்லாமற்சொல்லிருக்க

பாச்சினார்வெள்ளைப் புரியைப்படைநடுவே
பேய்ச்சோனர்தங்கள்படை பேதலித்தாரம்மானை
பொங்கப்பரிசைதொட்டுப் புகழ்வாள்கரத்தேந்தி
வங்கக்கடல்கிழிய வாறதுபோல்மாவோச்சி
அங்கம்பிளக்க அரசர்சிரமுருள
எங்கும்வளைந்துகொண்டு எத்திசையுந்தானைக
பற்றுப்படைகளெல்லாம் பட்டுவிழப்பாருலகில்
கொற்றவன்சந்தியாகு கொன்றனர்காணம்மானை
கந்துகத்தின்காலாலுங் கையிற்கடகாலும்
வந்தெதிர்த்தபேர்க்கு வலுவுடையவாளாலும்
தாக்கினார்தஞ்சமற்றுத் தாரணியிற்சோனர்படை
போக்கினார்தம்முயிரைப் பொன்னவன்சந்தியாகுவினால்
கோலப்பரியிழந்தார் கொற்றப்பரியிழந்தார்
பாலப்படையிழந்தார் பட்டவர்த்தனர்மடிந்தார்
செங்கைத்தனுவிழந்தார் சேனைத்திரள்மடிந்தார்
துங்கப்பரிதேர் துரகதங்கள்தானிழந்தார்
சூலப்படையிழந்தார் தொல்வேந்தர்தான்மடிந்தார்
நீலக்குடையும் நெடுங்கொடியுந்தானிழந்தார்
திண்டிமம்பம்பை திடிமண்திடாரிதக்கை
அண்டுவிருதும் அரசருங்கால்சாய்ந்தார்
பட்டார்கொடுஞ்சோனர் பார்த்திபன்தீபோகுகையால்
கெட்டாரிறந்துமங்கிக் கீழ்நரகிற்போய்விழுந்தார்
ஆயிழைமாரானவரை அன்றுகப்பம்வாங்கவந்த
பாயுழைச்சோனரெல்லாம் பட்டார்படுகளத்தில்
பாவிகளான பகைச்சேரனர்பட்டதினால்
ஆவலுடன்யாக்கோபு அண்ணலிறெம்மிலுக்கு
வெற்றிவிருதளித்து மேலோகஞ்சேர்ந்ததற்பின்
முற்றுமிறெம்மில் முழக்கினான்மேல்விருதை
கொம்பதிரத்தம்பூர் குறித்தமுழவதிர
பம்பைமுழவதிரப் பார்த்திபர்கள்தற்சூழ
முத்துமணிக்குடையும் முந்துபவளக்குடையும்
கத்துங்கடலொலிபோல் காவலனைச்சூழ்ந்துவர
வேடிக்கைதானைக வேந்தனுஞ்சேனைகளும்
பாடியும்மற்றப் பதியும்வளைந்துகொண்டு
சோனரையோட்டியந்தச் சுற்றார்தனைப்பிடித்துத்
தானரசனான தலைவனெனுமிறெம்மில்
சந்தியாகென்னுந் தவப்புனிதன்றன்னருளால்
வந்தியாச்சோனகரை வளர்கரத்தில்வாளாலே

அறுத்தபடிக்கு அளவேதெனவறிகில்
செறுத்தபுரவிகளுஞ் சேனைகளுமல்லாமல்
எண்ணிக்கணக்கிடுகி லெழுபதினாயிரம்பேர்
மண்ணில்மடிந்துமங்கி மாண்டார்காணம்மானை
ஆதிக்கிணங்கு மரசனெனுமிறெம்மில்
காதிப்பகைமுடித்தான் கன்மனெனுஞ்சோனகரை
மடியப்பொருதியவர் வன்பாய்ப்பிடித்திருந்த
படியில்கண்போருவென்ற பட்டணமுஞ்சுற்றூரும்
தங்கள்வசமாக்கித் தம்பிரான்றன்வேதம்
எங்கும்நடத்தி யிருக்குங்குருக்களையும்
தானும்படையுந் தலைத்துக்கெழுந்தருளி
ஆனசந்தியாகுதனக் கடைக்கலந்தானைக
அவ்வூர்ப்பெரியோர் அரசர்செழுமரபில்
இவ்வூர்மதிக்க எழுபத்திருபேரைக்
கூட்டமதாகக் குலவுசந்தியாகுவுடை
கூட்டந்தனிலிருந்து கோலப்பணிபுரிந்து
பேரெழுதிவைத்துப் பிரதானமாய்வேந்தன்
சேரழுகைமாறித் திருவருளால்வீற்றிருந்தான்
துறைமீதொருதூணிற் றோன்றிநின்றதாயருளால்
இறைம்மிலெனுமரசன் ஏந்தல்சந்தியாகுவுடை
ஆலயத்துக்கந்நா ளடிமையெனப்பேரெழுதி
ஓலைசெய்துவைத்தபடி உற்றவிருபத்தெழுவர்
அன்னாளளவா யவனியிலிந்நாளளவும்
மன்னுமெல்பாரு மண்டலத்திலுள்ளவர்கள்
மாயாவரமுடைய மன்னவனுனைசுத்தன்
தீயோகுகோயிலுக்குச் சேர்ந்தபணிபுரிந்து
செய்யுந்தவஞ்சிறந்த சிட்டசந்தியாகருளால்
வையந்தழைக்க மகிழ்ந்திருந்தாரம்மானை
அந்தநாட்சென்று அதன்பின்னொருபுதுமை
வந்தவகையை வழுத்தவின்னுங்கேட்டருள்வீர்
தன்னகத்தால்நீங்காத் தவறுகொண்டுசோபமுற்று
பன்னகத்தால்வந்த பழிநீங்கவந்திறைவன்
ஐயெட்டுமஞ்சுமொரு ஆயிரமுஞ்சென்றவந்நாள்
பொய்யோட்டுஞ்சோனர் பொருதனதுகேளம்மானை
வம்பாகாநாடாளும் வணங்காமணிமுடியான்
தொம்பறுநாந்துவெனுந் தொல்வேந்தன்காலமதில்
மானமற்றகூப்பிரென்ற வண்மைத்திருநகரை
சோனகர்கொள்ளைகொண்டு சுற்றெங்குங்காவல்பண்ணி

மெய்வேதத்துள்ள விசுவாசக்காரர்களை
பொய்வேதச்சோனர் புரியுங்கொடுவினையால்
ஊர்க்குவெகுகுழப்ப முண்டானவஞ்சகத்தை
பார்க்குப்பொழுது பகரிதுமேதினியில்
உற்றகிறீஸ்தவரை ஊறுசெய்யுஞ்சோனகரால்
வற்றுநீர்தன்னில் வருந்துகின்றதப்பளைபோல்
மாதர்கடம்மை வருபகுதிதான்வாங்கிச்
சேதப்படுத்திச் சிலரைக்குடியோட்டி
தேவாலயங்களையுஞ் சிட்டகுருக்களையும்
நாவாலியம்பரிய நாசமிகப்புரிந்து
செய்யாதவஞ்சஞ் செலுத்தியரசாளுகையில்
வையாழிமேல்நடந்த வானோன்மனதிரங்கி
வம்புற்றசோனர் வலிமடியமாநிலத்தில்
தொம்பறுநாந்து சுருதித்தலைவனுக்கு
ஏகனிரக்க மியல்வாகவேபுரிந்து
வாகாய்ப்படையெடுத்து வஞ்சரைக்கொல்லவென்று
ஆகாக்கொடுஞ்சோன ரானவர்கள்தன்பேரிற்
போகத்துணிந்து புறப்பட்டாரம்மானை
கந்துகங்கோடி கனசேனைதான்கோடி
முந்துகங்கள்தன்னில் முடிவேந்தர்சேனையென்ன
வேளப்பரியுடனே வெற்றிமுரசதிர
வர்ளுக்குரிய வலுவேந்தன்சேனையெல்லாம்
வாயிற்கருவிதொட்டு மாணிக்கச்சேணமிட்டு
பாயிற்கடிய பரிமேலுந்தேர்மேலும்
சாற்றுமறுவகையின் தானையுடன்வேல்வேந்தன்
போற்றுயக்கோகோயில் புக்கினர்காணம்மானை
பொங்குந்திமில்முழங்கப் போர்வேந்தன்சேனையுடன்
தங்குயாக்கோகோயில் தன்னிலமர்ந்திருக்க
காசியதேசமதிற் கற்றவனுமோர்விசுப்பு
வாசிவருயாக்கோபு மாதவன்றன்கோயில்தன்னை
சேணிற்கைகூப்பித் தெரிசித்துமீளவென்று
காணிக்கைகொண்டுமெற்றக் கற்றகுருக்களுடன்
தங்கியஞானச் சபைக்குவந்ததாழ்ச்சியுடன்
மங்கலங்கள்கூற மகிழ்ந்திருந்தானம்மானை
வந்தவிசுப்பான மாமுனியைக்கண்டுமன்னர்
முந்துமுகமலர்ந்து முற்றுமகாசோபனமாய்
ஆனந்தங்கொண்டாடி அங்கைகொண்டுமெய்தழுவி
தானந்தக்கோயில் தனிலிருக்கும்வேளையிலே

அண்ணலைப்பார்த்து அறத்திவெனும்விசுப்பு
எண்ணமாய்ச்சொல்லு மியல்புகேளம்மானை
போர்க்கோலங்கொண்டு பொருபடைகள்தற்சூழ
ஏற்கவேயிங்கே யெழுந்தருளக்காரியமேன்
மாற்றான்வினையோ மறுமன்னர்வஞ்சகமோ
கூற்றாகச்சோனர் குழப்பமோவென்றுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உலகிலிறையவனும்
தரைக்குளெமதுநகர் தானனகூம்பரென்ற
ஊரைக்கொடுஞ்சோன ருக்கிரங்கொண்டேபிடித்துப்
பாரிற்கிறீஸ்தவரைப் பாடுசெய்யும்வாறுகண்டு
வந்தேன்படையெடுது மன்னர்சந்தியாகைகப்பி
முந்தோர்படையில் முடிவேந்தன்தொம்பிறெப்பில்
சோனகரைவென்றான் துலங்குசந்தியாகுகவித்
தானகரையாளத் தலத்தில்நாங்கண்டதிறல்
இன்னமும்யாக்கோ பிடாகற்றுவாவெனவே
மன்றாலயத்தில்வந்தேன் வரம்வேண்டவென்றுசொன்னார்
சொன்னதுகேட்டுச் சுருதிமுனிவிசுப்பு
மன்னவன்யாக்கோபு வாளாண்மைக்காரனல்ல
தந்தைசெபதேசுந் தன்பிறவியுந்தானும்
முந்துதிமிலோட்டி மோதுபுனல்வாரிதியில்
மீனம்படுத்ததொழில் வேந்தனேநீயறிந்தும்
ஏனம்பியிவ்வார்த்தை யிங்குரைத்தாயென்றுசோன்னார்
உள்ளன்புகொண்டு உறைவிசுப்புவேந்தறிய
மெள்ளன்பிறலே விளம்புகின்றவேளையிலே
அந்தோவென்றேங்க வரியவியாக்கோபும்
வந்தார்வளப்பரியில் மன்னவன்றன்முன்னாக
அங்கஞ்சுவடணிந்து அங்கையிலேவாளேந்தி
துங்கத்துறவிரண்டுந் தூயகரத்தேயேந்தி
தோன்றச்சுடரெறிப்பச் சுற்றெங்கும்மின்னெறிப்ப
சான்றோனுதயமென்னத் தரித்தமுடியுடனே
அண்டமதிர அகிலங்கிடுகிடென
கண்டெவருமஞ்சக் கதித்தமகாசேவகனுய்
சேதிமந்தன்னிற் றிகழ்முனியதாம்விசுப்பு
சாதுரியமன்னனுக்குச் சாற்றுவதேனிவ்வார்த்தை
பொய்யல்லயாக்கோபு போர்பொருதுவெற்றிகொளல்
மெய்யிதுவென்றெண்ண வெளிப்பட்டாரம்மானை
ஆங்காரமாகவல்ல அதிகஅன்பினால்விசுப்பு
ஏங்காமல்மன்னனுட னிசைந்துமொழிசொன்னதினல்

பாவகத்தாரின் பகைதணிக்கும்யாக்கோபு
சேவகதாரியெனச் செப்புவதைக்கேட்டருளீர்
என்பேரியாக்கோபு எனைநீயறியாயோ
முன்போவெல்லவினி மூவுலகுந்தானறிய
சேனுபதிநானே சிறந்தகிறீஸ்தவர்மேல்
வானுதிக்கொத வஞ்சர்கள்வந்தெதிர்த்தால்
இன்றுமுதலா யினியவனியுள்ளளவும்
வென்றுதவிசெய்திடுவேன் வேதக்கிறீஸ்தவர்க்கு
இவ்வார்த்தைமெய்யெனவே எல்லோருநம்புதற்கு
செவ்வார்த்தையோதுமுடிச் செம்மல்பறுநாந்துவுக்காய்ப்
பாயும்பரியுடனே பற்றலர்கள்சேனையெல்லாம்
நாயுங்கழுகுமுண்ண நாசமிடநாள்முடுகிச்
செய்யாதவஞ்சஞ் சேலுத்துகின்றசோனகரை
கொய்வதுமன்றியின்னுங் கூம்பிரென்றமாநகரை
வேளைதனிற்கிறீஸ்தோர் மேன்மேலும்நேசமுற
நாளைதிறப்பேன் நமதுமொழியுண்மையென்று
பசித்தோர்க்குணவளிக்கும் பண்பாகவேயிரங்கும்
எசித்தேவமென்னு மினியவிசுப்புவுக்கு
கூறுமொழிகேட்டுக் கொற்றசந்தியாகைநம்பி
வேறேதுமெண்ணமின்றி வெகுநேசந்தானுக
ஆகங்குளிர்ந்து ஆனந்தநல்விசுப்பு
மாகங்கண்மீதிருக்கும் மன்னர்சந்தியாகருளால்
பாரோசைகொண்டாடப் பார்த்திபனும்நல்லுளமாய்
நீரோசைகொண்டாடி நீண்டபடையுடனே
கூம்பிரென்றேறுதுங் குலநகரியுட்புகுந்து
தீம்பறவேசென்று செருமுடித்தாரம்மானை
மாற்றுரவர்களுடன் மன்னன்பறுநாந்தும்
காற்றுனதோடே கனல்மூண்டெரிந்தாப்போல்
சூழ்ந்துபெரும்போரில் சோதியருளாலியக்கோ
தாழ்ந்துநரகுறையும் தன்மமற்றசோனகரை
பண்பாம்விசுப்புவுக்குப் பகர்ந்தவுரைபோல
வெண்பரியிலேறிவந்து வெற்றிகொண்டாரம்மானை
கடகங்கரத்தேந்திக் கையிலொருவாளெடுத்து
குடசங்கதுநாலு கோணமும்நின்றதிரக்
சுற்றெங்கும்மின்னெறிப்பத் துங்கப்பரியுடனே
கற்றவனந்தக் கணத்தில்நின்றவாறுகண்டு
ஓவென்றபயமிட்டு உறுவஞ்சச்சோனர்படை
ஆவென்றலறி யடிசாய்ந்தாரம்மானை

அர்ச். யாகப்பர் போர்செயித்தல்.

விருத்தம்.

வரிசையுற்ற பதாகைகண்டு மயங்கினின்றன ரெண்ணிலார்
பெரியகைத்திர நவிலுநாவறப் பின்மடிந்தன ரெண்ணிலார்
பரியிலுற்றது பாதமானது படமடிந்தன ரெண்ணிலார்
வரிசைபெற்ற சலோமைபுத்ரன் வதைப்படுத்தின ரெண்ணிலார் 131

அம்மானை

மண்ணேறுகின்ற மனிதர்க்கறிவுசொல்லி
தொண்ணூற்றிரெண்பதுவுந் தொல்புவியிற்ருனிருந்து
துஞ்சியுந்தன்தேகந் தொல்புவியிற்காணுத
மஞ்சுதவஞ்சிறந்த மன்னுசுவானிமுன்னேன்
செங்கரத்தில்வாளெடுத்துச் சேனையென்னுஞ்சோனர்படை
மங்கப்பொருதழித்த வாறுகேளம்மானை
வாளோங்கவெண்ணிறந்தார் மன்னன்மகாபரியின்
தாளோங்கவெண்ணிறந்தார் தங்குகொடிகண்டுஅஞ்சி
சென்னியற்றுரெண்ணிறந்தார் தேகமற்றுரெண்ணிறந்தார்]
வன்மமுறுஞ்சோனர் மடிந்தார்காணம்மானை
குலவுந்திருநகராங் கூம்பிரென்றபட்டணத்தில்
பலுகுங்கொடுஞ்சோனர் பட்டபிணமெல்லையில்லை
எல்லாரும்பட்டு இருந்தவருங்காடுகொண்டு
பொல்லாதார்சோரப் பொருதழித்துக்கோட்டைவிட்டு
போனார்புவிதனைக்கப் பொன்னுலகிற்பூவுலகில்
மானார்சலோமைமகன் வந்துபடைபொருதிச்
சோனகரைவென்று சுருதிமறைக்குவந்த
தானரசனுன தலைவன்பறுநாந்துவுக்கு
காட்சிகொடுத்துக் கதிர்வானிலாதியிடம்
வாச்சியம்பொங்க வழிப்பட்டாரம்மானை
அம்பரந்தன்னி லரியவியக்கோவுசெல்ல
தொம்பறுனுந்துவுடை தூதர்பதாதியுடன்
மேளமதிர விருதுத்தொனிமுழங்கத்
தாளந்தொனிக்கத் தவளக்குடைநிழற்றப்
போந்தபெரும்படையின் போர்க்கோலங்கொண்டுவந்தே
வேந்தரிருபாலும் வெய்யோனெனச்சிறந்து
மண்டலிகனுன மகுடமுடிவேந்தன்
அண்டுபடைசிறக்க ஆனந்தங்கொண்டாடி

கோவேந்தராகிக் கொடும்படைக்குவந்திருந்த
மாவேந்தர்செல்ல வரிசைகொடுத்தருளி
மங்காதகூம்பிரென்ற பாநகரைமுன்போல
அங்காளவேண்டி யவைசமுதாயங்காத்து
வேதக்கிறீஸ்தின் விசுவாசமென்மேலும்
போதக்குருக்களையும் புண்ணியமாயங்குவைத்து
மன்னவன்றன்னுடைய மங்காச்செங்கோல்செலுத்தி
முன்னிருந்தபட்டணத்தில் மோசமறவீற்றிருந்தார்

திருவுடலெடுத்தடக்கிக் கோயில்கட்டல்,

விருத்தம்.

பெருவருத்தம் புரியுஞ்சோ னகருக்கஞ்சிப்
        பெரியயாக் கோபுடலைப் பிறங்குதாசர்
மருவியெடுத் தோரிடத்தில் மறைவுசெய்து
        மண்ணுலே மூடிவைத்தா ரஞ்ஞூருன
வருடமது சென்றபின்பு புதுமையாக
        வளர்கிறீஸ் தோரெடுத்து மகிழ்ந்துபோற்றி
திருவுடலை யடக்கியே யவ்விடத்திற்
        சிறப்புடைய ஆலயமுஞ் செய்திட்டாரே 132

அம்மானை.

அப்பருத்தூணி யடர்கருவிதானையுடன்
கொப்பருத்தந்தியுறுங் கோவர்குடிலில்வந்து
முத்தொகையுந்தோன்ற முடிதேந்தர்காணநின்ற
கத்தன்திருவருளாற் கண்டபுதுமையொன்று
மாந்தரேகேளும் மகிமைஎஸ்பாஞூளும்
வேந்தர்மடிந்துஅந்த மேதினியுங்கொந்ததினுல்
ஈனராய்வன்னிக் கிரையானமாபாவிச்
சோனகரான துரோகிகள்தான்கதித்துச்
சிறந்தசருவேஸ்பரன்றன் தேசத்தையாண்டதினுல்
இரந்துகிறீஸ்தவர்க ளெல்லாருமாள்கையினுல்
சொல்லாத்துயரடைந்து தொல்புவியெல்லாம்மயங்கி
எல்லாக்கிறீஸ்தவரு மென்செய்வோமென்றுஅஞ்சித்
தன்மசந்தியாகு சரீரத்தைத்தானெடுத்து
கன்மரெனுஞ்சோனகர்கள் காணுமலேதூக்கிக்
கலிசவெனுஞ்சீமை காத்திருந்தபேர்கள்சிலர்
வலியசந்தியாகுடலை மண்ணுல்மறைத்தடக்கி

அந்நாளில்வைத்தபடி ஐஞ்ஞூறுஆண்டுமட்டும்
பொன்னூரியவுடல் புக்கிருந்ததம்மானை
கற்றவர்கள்சேருங் கலீசவெனும்பட்டினத்தில்
மற்றுநிகரில்லாத மன்னர்சந்தியாகுடலை
அடக்குமிடத்தை அறிந்தோரெல்லாமறந்து
வடக்குங்குடக்குமற்ற மாநிலமுமொன்ருக
மாந்தர்கள்சொல்லா வனவாசமானதிலே
போந்தபெரும்புனத்திற் போவாரொருவரில்லை
ஆளியுமாவு மரியுங்கரடிகளும்
ஊழியுமங்கே உறவுசெய்யுங்கானகமாம்
கோடரங்கள்மெத்துங் கொடுவனத்தில்வாழ்விலங்கு
ஆடரங்கமாக அகமகிழ்ந்துவீற்றிருக்கும்
புந்தியாற்கீதம் புனற்கிளிகள்தான்பாடச்
சந்தியாகென்னுந் தவத்தன்றிருவுடல்தான்
சேதமறப்புவியிற் சென்றுண்டுஐஞ்ஞூறும்
வேதபரனருளால் வீற்றிருந்ததம்மானை
அஞ்சப்பந்தன்னுலே ஐயாயிரம்பேர்க்கு
மிஞ்சப்பசிதீர்த்த வேதபரன்மண்ணில்வந்து
பண்ணேறுமாண்டு பக்ருமிந்தப்பாருலகில்
எண்ணூற்றுமுப்பத்தைந் தென்னுமந்தக்காலமதில்
தப்போய்ந்துமண்ணிற் றவக்கற்பழியாத
அப்போஞ்சுமன்ன னரசாளுங்காலமதில்
கலீசவெனுங்கரிற் கற்றசந்தியாகுடலை
மெலியவடக்கிவைத்த வெங்கானமானதிலே
பகலோன்குடக்கடைந்து பாருலகெல்லாமிருண்ட
புகலுமந்தவேளைகண்ட புதுமைகேளம்மானை
பாதியிரவிற் பகலோனுதயமென்ன
சோதிப்பிரகாசந் தோன்றிநின்றதம்மானை
அல்லிற்சிறந்தவொளி அம்புவியோர்கண்டதினுல்
சொல்லித்தவத்துடைய தூயவிசுப்பானவர்க்கு
சொன்னூர்நவக்கதையைச் சுத்தனுந்தான்விரைந்து
அன்னூர்மொழிப்படியே அந்தப்பெருவனத்தில்
மண்வெட்டிகோடரியும் வாகுபெறுங்கையரிவாள்
எண்பட்டபேர்க ளெடுத்துவரச்சொல்லியங்கே
துண்டவனத்தருகே சுற்றிக்குழிதிறந்து
கண்டித்தவெல்லையிலே கற்றவனும்பார்ப்பளவில்
ஒட்டகமீதேறி ஊர்க்குவந்தோன்றன்னுடலைப்
பெட்டகமாகநல்ல பிரவைமிகச்சூழ

மங்கியழியாத வச்சிரகாயமென்ன
அங்கமழுகெறிக்க அங்கேயிருந்ததினுல்
மெய்ஞ்ஞானநல்விசுப்பு மெத்தமனமகிழ்ந்து
வையாமுலாந்தாளும் மன்னவன்தொம்போஞ்சு
இருக்குந்திருநகர்க்கு எண்ணரியநல்லசெய்தி
பொருக்கெனவேஆளாலே போகவிட்டாரம்மானை
மன்னவனிந்த மகிமைநவங்கேட்டு
இந்நிலமேல்வந்த இயல்பறியவேணுமென்று
கொண்டாட்டமாகக் கொடிதாரைகொம்புகுழல்
கண்டார்க்குச்சோபனமாய்க் காளத்தொனிமுழங்க
மெய்யிலுடுப்பணிந்து வெண்டாளமாலையிட்டு
கையிற்கணையாளி கற்கட்டுந்தான்புனைந்து
கரியபடையேறிக் காலாள்புடைசூழ
முடியின்மணியிசைய முத்தமிழோர்வாழ்த்திவர
ஓலக்கவீதிவிட்டு உற்றார்கள்தன்னுடனே
கோலப்பதிக்குக் குறுகிவந்தாரம்மானை
கற்பழியாவேந்தன் கருதிவந்தகாரணத்தை
பொற்புத்தியாங்கவிச புக்கிருதநல்விசுப்பு
மாராயமாக மறைவிளங்கமன்னனுக்கு
ஆராயுமென்று அழகுசந்தியாகுடலைக்
காண்பித்துநின்று கலைஞானவாக்கியங்கள்
பூண்பித்துத்தங்களிலே புண்ணியனைத்தான்புகழ்ந்து
சுந்தரவேதந் துலங்குந்தவவிசுப்பு
வந்தபெருஞ்சேனையுடன் மன்னர்சந்தியாகுடலைப்
பாரிற்பணிந்து பவுள்சுகளுந்தானளித்து
ஆரம்பம்பண்ணி யழகியகோயில்கட்டி
சிங்காரஞ்செய்து திருக்கோயிலானதுள்ளே
மங்காதசுத்தனுடல் மகிமைபெறத்தானடக்கி
உப்பீளிக்கைவிட்டு உவந்ததிருப்பதிக்கு
அம்புவிக்குமன்னனென ஆனந்தமாயிருந்தார்

கோயிலுக்குச் சென்றோன் கொலைப்படல்.

விருத்தம்.

சுத்தனுடலடக்குபதி தன்னைநோக்கித்
தொகைதொகையாய்மானவர்கள் தொடர்ந்துசென்று
உத்தமமாமருளடைத லுவந்தேகேட்டு
உயருமலுமாஞவெனு மூரில்வாழும்

வர்த்தகனும்மகனுஞ்செல் வழியில்துட்ட
வஞ்சகன்றுனொருவன் செய்சதியினுலே
சத்தியமற்றுரெனவே குற்றமேற்றித்
தனையனைக்கொலைபுரிந்தார் தவறாய்த்தானே.

அம்மானை

அண்ணல்தொம்போஞ்சு மாசனிறெப்மீலும்
மண்ணிற்பறுநாந்தாம் மாவேந்தாம்மூவர்
சலோமைதிருமகனார் தன்னுதவிகொண்டுமிக
நிலமீதரசாண்டு நீண்டவெஸ்பாஞகரை
காத்தார்முடிபுனைந்த காவலருந்தாயான
ஆத்தாள்மரிக்குவந்த அன்பர்சந்தியாகருளால்
மன்னுமெஸ்பாஞ மன்னருக்குமைந்தருக்கும்
உன்னுமியாக்கோபுக் குவந்தகிறீஸ்தவர்கள்
என்னுமனைவருக்கும் எல்லாமனிதருக்கும்
கன்னிசலோமைமகன் கத்தன்திருவருளால்
வானத்துமண்ணில் வகைவகையாகவொரு
ஈனத்தைநீக்கி யிடாகற்றுங்காரணங்கள்
கற்றவர்கள்சொல்லிக் கரைகாணமாட்டார்கள்
மற்றவருங்கேட்டு மனந்தரிக்கமாட்டார்கள்
ஆனுற்பெரியோ ரறிந்தெழுதிவைத்தபடி
தானுன்சிறிதுஇன்னுஞ் சாற்றுகிறேன்கேட்டருளீர்
கைச்சங்குவாழுங் கடலிற்பலநாளும்
மச்சம்படுத்திருந்த வல்லபத்தைத்தான்மறந்து
பொய்ச்சங்கச்சோனகரைப் பொருதழிக்கவேமாறி
அச்சங்களற்றுநின்ற அண்ணல்சந்தியாகுடலம்
இருக்குந்திருப்பதியை யின்றுமென்றுமேயுலகோர்
உருக்கமுடனே உவந்துதெரிசித்தவர்கள்
பெற்றபெருந்தவத்தைப் பேசவரிதென்னுலே
முற்றுமலேமாஞவெனும் மோசமற்றதேசமதில்
இருக்குமொருமனித னேற்றதவஞ்சிறந்து
திருப்பதியாளுசுத்தன் றியோகுகோயில்தன்னில்
சென்றுதெரிசித்துத் திரும்பிவரவேணு
மென்றுமனதில் விசாரமிட்டானம்மானை
மங்காத்தவிது மாபில்மரிவயிற்றில்
எங்கோன்மனுவாகி யிவ்வுலகில்வந்தாண்டு
ஆயிரமுமூன்று மன்பாயவணியிலே
பாயிரமாய்ச்சென்ற படியானவந்நாளில்
பெரியவியாக்கோபு பிரதானகோயில்தன்னை
அரியவலேமாஞ வாமூர்தனிலிருந்து

போய்க்கண்டுமீளவந்த புத்திரனுந்தந்தையுமாய்த்
தாய்க்கன்றுகோயில்செய்த சந்தியாகின்னருளாற்
புக்குமவ்வழிதனக்குப் பொதிச்சோறுந்தீபனமும்
மிக்கதெல்லாந்தேடி விரைந்தங்கிருபேரும்
போனார்புனங்கடந்து பொழுதுபுகுந்ததினால்
தானோர்மனைதேடித் தந்தையரும்புத்திரனும்
தோலேசவென்னுந் துலங்குநகரியிலே
மேலோனருளாலோர் வீட்டில்வந்தாரம்மானை
என்னையிவர்க்கு இடங்கொடுத்தமாபாவி
பொன்னோடிவர்களுடை பூஷணமெல்லாம்பறிக்க
பூராயமாகப் புவியிலிருவருக்குஞ்
சாராயந்தன்னைத் தவறாகவேகொடுத்தான்
நன்மைக்குத்தீமை நடக்குமோநானிலத்தில்
புன்மையினையறியாப் புத்திரனுந்தந்தையரும்
வாங்கிக்குடிக்க மயங்கிச்சாராயமதாற்
றூங்கியவர்கள் துயிலுமந்தவேளையிலே
பரதேசர்கொண்டுவந்த பைக்கூறையைத்திறந்து
வரதேவர்க்கோராத வஞ்சகனுந்தன்மனையில்
வெள்ளியின்கிண்ணமதை மெய்யடப்பத்துள்ளடக்கித்
தெள்ளியகண்வளர்ந்தான் செங்கதிரோன்தோன்றியபின்
அறத்தொர்க்கிடங்கொடுத்த அன்னியனைத்தாம்வினவி
புறத்தேயிருபேரும் போனார்வழிதேடி
புண்ணியர்போகப் புவியிலிடங்கொடுத்த
அன்னியனோடி யவரைவழிமறித்து
எண்ணிமனையில்வந்து இங்கிருந்துநல்லவர்போல்
கிண்ணிகளவெடுத்துக் கேள்வியற்றுப்போறீரோ
என்றுவலுப்பேசி யில்லாதவார்த்தைசொல்லி
மன்றிலிருப்பவன்முன் வந்தான்வழக்கெடுத்து
மாயத்தாற்சூழ்ச்சிபண்ணி வண்டன்செய்மாகொடுமை
ஞாயத்தால்மிக்கோர்கள் ஞாலத்தறியாமல்
பொல்லாதான்சொன்னவந்தப் பூராயம்மெய்யெனவே
நல்லோர்க்குத்தீமை நடுவுரைத்தாரம்மானை
ஏற்குமோமானிடரே ஏகன்திருவிரக்கம்
ஆர்க்குமளவாகா தன்புடையோர்கொண்டுவந்த
நிதியங்களைப்பறித்து நீதியில்லான்கைக்கொடுத்து
சதிகொண்டொருவன் தனைத்தூக்கத்தீர்வையிட்டார்
அன்னவர்கள்சொல்லவந்த அத்தனும்புத்திரனும்
இன்னும்நடுவுரைப்போ னெல்லாமறிவனென்று

இறுதிவந்தால்நாளைக் கென்றுசொல்லநீதியல்லப்
பொறுதிபெரியதென்று போந்தசந்தியாகைநம்பி
தந்தைதிருவடியிற் றவப்புதல்வன்தெண்டனிட்டு
எந்தையேநான்தா னிறப்பேனெனமொழிந்தான்
அப்பரேயென்று அழுதுமகன்சொன்னமொழி
ஒப்பில்லாத்தந்தைகண்டு ஒருமகனைத்தான்பார்த்து
மைந்தாநீமாள மனந்துணிந்துமாபாவி
எந்தனுயிரிங் கிருக்குமோவையகத்தில்
பாவியெனும்நானிருக்கப் பாலகனீதுஞ்சுவது
பூவுலகிலேயெவர்க்கும் புகலரியபொல்லாங்கு
என்னேமகனாரே யான்மடிவேனல்லாது
உன்னைக்கொலைபுரிய வொட்டேனெனமொழிந்தான்
தந்தையுரைக்கத் தருமமகனென்னசொல்வான்
எந்தையேயின்று எனக்கிறுதிகாலமிது
பெற்றபிதாமடியப் பிள்ளைசுகமிருந்தால்
முற்றும்பெரியோர் முழுமோசஞ்சொல்லுவர்கள்
அப்பாசலியாதே ஆதியிரக்கமுண்டு
எப்போதுஞ்சாகா திருப்போமோமேதினியில்
மைந்தனருமையல்ல மாதாப்பிதாவருமை
எந்தையேயிந்த இருநிலத்தில்நீரிருந்தால்
புத்திரர்பாரமல்லப் புண்ணியமுஞ்செய்திடலாம்
கத்தனுதவிகொண்டு கற்றவியாக்கோகோயில்
தெரிசித்தபின்னர் திரும்பியேநம்மூர்க்கு
பிரியத்துடன்போம்நீர் பேதலிக்கநீதியல்ல
எம்மூர்க்குப்போனா லெமையீன்றதாய்சரணம்
தம்மூர்க்குப்போம்புதல்வன் றான்பணிந்தானென்றுசொல்லும்
என்றான்குமார னிருவிழியும்நீரோட
நின்றான்பிதாமகனை நேசமாய்த்தான்தழுவி
கண்ணேமரகதமே காணரியபாக்கியமே
எண்ணுத்துயரமுட னிப்புவியில்நானிருக்க
நெஞ்செழுமோநானும் நிலத்திலிருப்பேனோ
வஞ்சனெனைப்போல மாநிலத்திலாருமுண்டோ
முதிர்ந்தகிழவனியான் முன்மடிந்துபோவதல்லால்
எதிர்ந்தகொலைக்கு இளமகனைத்தான்கொடுத்தால்
ஏற்குமோவென்மகனே யென்றனுயி ரடனே
ஊர்க்குநான்போக வொருமனமுமுண்டாமோ
கோயிற்றிருப்பதிகள் கும்பிட்டுப்போற்றிசெய்து
தாயும்பிதாவுந் தவமிருந்துபெற்றபிள்ளை
தின்னக்குறையோ செகத்திற்றிருடுசெய்து

அன்னைபிதாவிருக்க அரசர்கொலைக்குட்புதல்வன்
பட்டானெனவுரைப்பார் பாருலகிலிந்தவடு
ஒட்டாமல்மாற்று முபாயமில்லையென்மகனே
வேண்டாம்நீமாள மிகமனதுபுண்ணாகத்
தூண்டாததீபமெனத் துக்கவனல்மூளுகுது
என்றுபிதாவானோ னெத்தனைதான்சொன்னாலும்
ஒன்றும்மகன்கேளா னுற்றவறிவெய்தியவன்
சிறுவன்மனந்துணிந்து தீவினைசேர்தீர்வையினால்
மறுவொன்றுமில்லாத மைந்தன்கொலையானான்
பாக்கியமில்லார் பகைபுரிந்துபாலகனை
ஆக்கினையிட்டு அவர்கழுத்தில்நாண்பூட்டி
வல்லகொலைக்காரர் வஞ்சக்கொலைக்களத்தில்
நல்லவனைத்தூக்கி நடுவர்சொன்னசொற்படியே
போனார்கள்தங்கள் புகழ்சேருமாளிகைக்கு
ஆனவிதுகொடுமை அத்தனுங்கண்டிரங்கி
எண்ணுதளண்ணமுற்று இருந்துதந்தைதான்சலித்து
கண்ணானோன்துஞ்சுகின்ற காரணத்தைத்தான்பார்த்து
நின்றுவயிறெரிய நேசவிழிநீரொழுக
அன்றுபிதாவு மழுததுகேளம்மானை

தந்தை புலம்பல்.

விருத்தம்.

கண்ணிரண்டும் புனலொழுகக் கண்டத்திட்ட
        கயிறுகொண்டு தருமீதுபுதல்வனாலே
தண்ணிமைகொண் டத்தனந்தோ வந்தோவென்று
        தன்காத்தை முகத்தறைந்து சலிப்பினோடு
மண்ணில்விழுந் தழுதுநொந்து மகனேயிந்த
        வஞ்சகஞ்செய் தான்கொடிய மாயவாழ்க்கை
எண்ணியந்த வெரிநரகுக் கீடதான
        வியற்கைசெய்தா னென்செய்வோ மெனவேநொந்தான்.

மன்னுயாக்கோவுப்தி தொழுதுமீண்டு
        மனையிடத்தில்வந்தாலென் மகனேயுன்றன்
அன்னையருமெனைவினவி மைந்தனெங்கே
        ஆருடன்போனானெனவே யறையும்நோம்
என்னசொல்வேனென்மகனே யெனதுதேவி
        இறந்தானென்புதல்வனென்று ணிந்தமண்ணில்
தன்னுயிர்கொண் டிருப்பதுண்டோ வந்தோவென்று
        தஞ்சமற்றுச் சிரத்தறைந்து தரையில்வீழ்ந்தான். 135

திருப்பதிகள் பலதொழுது விரதநோன்பு
        சிறந்ததவஞ் செய்திரப்போர் சிலருக்கீந்து

உருப்பெறவே பெற்றபிள்ளை சோருகி
        யுயிர்மடிந்தா னென்றுலகோ ருவர்த்துவார்த்தை
விருப்பமுட னுரைப்பதற்கு விதியோமைந்தா
        வீணிலிந்த வினைமுடித்தார் வேந்தனென்று
பொருப்பதனி லிருந்தசந்தி யாகைநம்பிப்
        புலம்பியங்கே யிருந்துமனம் புழுங்கினரே. 136

அம்மானை.

பொய்யகத்தில்வாழுகின்ற பொல்லாதபேய்மதியால்
வையகத்தில்வாழ்வைநம்பி வஞ்சகப்பேய்ச்சோதனையால்
தூக்குமிளமதலை துஞ்சவவன்தந்தைதுயர்
வாக்குண்டோசொல்ல மனதெழுமோமானிடரே
நம்பியேபோற்றி நமஸ்கரித்துயாக்கோபைக்
கும்பிட்டுப்பெற்ற குமாரன்றனைப்பார்த்து
செங்கைவயிற்றறைந்து சென்னிமேற்கையைவைத்து
எங்கேபறப்பே னெனவழுதானம்மானை
அங்கம்புழுதிபட ஆகமெல்லாம்புண்ணாக
வங்கக்கடலில் வருமோசம்போல்மயங்கி
கண்ணிரண்டும்நீரோடக் கையாற்றிருமகனை
தன்னிரண்டுகையாற் றழுவிமுகத்தறைந்து
கூண்டார்நகைக்கக் கொலைப்பட்டவனியிலே
மாண்டாயோவென்றன் மகனேயெனவழுதான்
ஓயாவிரத முணர்ந்துதவம்புரிந்து
தாயாரும்நானுந் தரணிதனிலேயின்று
கண்போல்வளர்த்த கருவூலவென்மகனே
கண்போலமாண்டு கலங்கவென்னகாரணமோ
நாடிவழிநடந்து நானுந்திருமகனும்
தேடியேயாக்கோ திருக்கோயில்கண்டதற்பின்
வேண்டாதார்செய்த வினையாலிருநிலத்தில்
மாண்டாயிலையே மகனேயெனவழுதான்
ஊருமுறவு முடனிருக்குமுற்றோரும்
ஆருமில்லாத அடர்ந்தபெரும்வழியில்
பாக்கியமற்றுப் பரதேசியாகவிங்கே
ஆக்கினைக்கிடா யகப்பட்டாயென்மகனே
அன்பாகவீன்றெடுத்த அப்பரினன்னையரின்
முன்பாயிருந்து முதியமிடிதீர்த்து
நாங்களிறக்க நமதுகடன்தீர்த்தல்லவோ
பாங்காய்மடிதல்முறை பாலகனேயென்றழுதான்
தந்தையுந்தாயுந் தலத்திற்றனியிருக்க
மைந்தனுயிர்மடிதல் மாபாவமென்றழுதான்
வாரியெடுத்து மகனைமடியில்வைத்து
காரியஞ்சொல்வார்போல் கையிரண்டுங்கண்ணில்வைத்து

அப்பாவுனையீன்ற அன்னைவந்தென்னுடனே
எப்போவருவா னெனதுமகனெங்கேயென்றால்
அப்போதுசொல்வ தறியேனேயென்மகனே
ஒப்பாருமில்லை உனதுதிருத்தாயார்க்கு
பிள்ளையும்பெற்ற பிதாவுமியாக்கோபின்
விள்ளரியகோயில்சென்று மீண்டிடவேபோனவெமை
இன்றுவரும்நாளைவரு மென்றேவழிபார்த்து
மன்றிலிருந்து மறுகுகின்றவேளையிலே
நான்பாவிப் பானால் நமதுமகனெங்கேயென்று
தான்தாயார்கேட்டாலத் தாய்க்குநானென்னசொல்வேன்
நண்ணியொருவளவில் நாம்போய்விடுதிவிட்டுக்
கிண்ணிகளவாண்டு கீழ்சாதியானவர்போல்
நோக்குண்டியாக்கோவின் னுண்ணுருவங்காணுமுன்னம்
வீக்குண்டொருவரல்ல மேதினியெல்லாங்காணத்
தூக்குண்டானென்றுசொல்லிச் சொல்லவுஞ்சொல்லாமலுந்தான்
நாக்குண்டோமைந்தா நமக்கெனவுந்தானழுதான்

கொலையுண்டவனுயிர்த்தல்.

விருத்தம்.

தந்தைமிகவழுதுவிம்மியாக்கோபென்னுந்
தவப்புனிதன்கோயில்தனைத்தரிசித்தற்குச்
சிந்தைதனிலெண்ணியங்கேதுயரத்தோடு
சென்றுதொழுதேத்தியேதிரும்பிவந்து
மைந்தனும்மரித்தவிடந்தன்னில்நின்று
மறுபடியும்புலம்புகையில்வல்லபஞ்சேர்
எந்தையருளாலுயிர்த்தானிதனைக்கண்டு
எண்ணில்லாத்துத்தியங்கள்பண்ணினானே. 137

அம்மானை.

எண்ணாதவெண்ணமெண்ணி யென்செய்வோமென்றுதந்தை
கண்ணோடுகண்ணைவைத்துக் கற்றமகன்மேல்விழுந்து
அழுதுசலித்தாலு மன்பர்சந்தியாகுடலைத்
தொழுதுவரவேணுமென்று தாயமகனைவிட்டு
போனாரியாக்கோவின் புண்ணியக்கோயில்தன்னைத்
தானாகக்கண்டு தனித்திறைஞ்சித்தெண்டனிட்டு
பூண்டபுவியிற் புதல்வனார்வன்கொலையில்
மாண்டாலுந்தான்போன வாறுகளுந்தானினைந்து
ஓதிவணங்கி யுவந்தசந்தியாகைம்பி
சேதிமந்தன்னிலுள்ள தேசிகரையும்வினவி
மீண்டுந்தம்மூர்க்கு விரும்பிவரும்வழிக்கே
பூண்டமனச்சலிப்புப் போகாதவாறுகண்டு

கூறஞ்சாப்பொய்யர் கொலைப்படுத்தித்தன்மகனை
ஆறஞ்சாம்நாளில் அவன்புதல்வன்மாளிடத்தே
வற்றாமலன்போடு வளர்விழியால்நீரோட
புத்திரசோபம் பொறாதபடியாலே
நின்றுவயிறெரிந்து நெஞ்சுதடுமாறி
என்றுஇனிக்காண்பே னென்மகனேயென்றுசொல்லி
நிற்கின்றவேளையிலே நீரோசையாகவொரு
சொற்கொண்டுகூறுகின்ற சோபனங்கேளம்மானை
அம்புவியிலீன்றெடுத்த ஐயரேஅஞ்சாதே
வம்புசெய்தார்வஞ்சர் வளர்த்தாரெனையாக்கோ
செத்தாலுஞ்சாகாமற் றேவனுதவிகொண்டு
சுத்தனும்யாக்கோபு துணையாயிருந்தெனக்கு
வானத்திற்றீபனங்கள் வாகுபெறவீந்து
தானிலத்திலேயெனையுந் தற்காத்துவைத்திருந்தார்
துஞ்சாதுயிருடனே சோபனங்கள்கொண்டிருந்தேன்
அஞ்சாதேஅப்பாவென் றானந்தமாய்க்கூறத்
தந்தைகளிகூர்ந்து சந்தியாகின்பதத்தைச்
சிந்தைதனிலிருத்தித் திருமகனையுந்தழுவி
மைந்தனுந்தானுமந்த வஞ்சநடுவருக்கு
வந்தவகையை வழுத்தலுற்றாரம்மானை
சொல்லவதிசயித்துத் தொல்புவியிலேநடுவர்
பொல்லாங்குமுன்பு புரிந்தவனைத்தாம்பிடித்து
எல்லாருங்காண இவன்கழுத்திலேமாட்டிக்
கொல்லுமென்றார்வஞ்சகனைக் கொன்றார்காணம்மானை
பாவிகொலையானான் பாருலகெலாமறியப்
பூவிலெவரும் புதுமையெனவேமகிழ்ந்து
அன்பர்சந்தியோகி னருள்பெற்றிவ்வம்புவியில்
இன்பமிகவாகி யெல்லோரும்வீற்றிருந்தார்

கழுத்தறுத்தோ னுயிர்த்தல்.

விருத்தம்.

திருப்பதிநாடிச்சென்ற சிறந்தயாத்திரிகன்றானும்
துருப்படுபசாசுசெய்த சோதனையதனாட்பட்டு
விருப்பொடுகழுத்தறுத்த விக்கினம்நீங்கிச்சிட்டன்
உருப்பெறத்துயின்றார்போல உயிர்த்தெழச்செய்திட்டாரே.

அம்மானை.

இன்பக்கனியு மிலைபூவுங்காயுமென்ன
துன்பத்தையுண்டாக்கித் தொல்புவியிற்றோன்றிநின்ற
நச்சுத்தருவினது நாற்பகையுங்கால்சாய
இச்சித்துஆனாரே மேந்தல்சுவக்கீனும்

ஈன்றகனியான இரக்கமுள்ளதாயார்க்குத்
தோன்றலாய்க்கண்ட சுருதிமுறைப்படியே
வேலைக்கரையில்வந்து மெத்தவன்புகொண்டாட
வாலக்குமாரன் மகிமையுள்ளயாக்கோபு
ஆனந்தக்கோயில்தன்னை அந்நாட்கலிசவென்ற
தானந்தவூரான் தவஞ்சிறக்கவேதேடி
போய்க்கண்டுநித்தியமும் புண்ணியத்திலேநிறைந்து
தீக்கொண்டபாவமின்றித் தேனுலகில்வீற்றிருந்தான்
அன்னவன்முன்போல அக்கோயில்கண்டுவர
இன்னமுந்தானே யிவற்கேற்றபேருடனே
சென்றொருநாளிற் றீயிருக்கும்பேய்வினையால்
அன்றேயொருபாவ மன்பனுஞ்செய்தமையால்
நெஞ்சத்திருத்தி நிலைகொண்டபாவமுடன்
அஞ்சவழிநடந்து அங்கேகும்பேர்களுடன்
தங்குமிருட்டாய்த் தபனன்மறைந்தபின்னர்
கங்குலிலவ்வழியிற் கண்துயின்றாரம்மானை
எல்லாருங்கண்துயில என்றேகொடும்பேயின்
பொல்லாங்குதன்னைப் புகலக்கேளம்மானை
மேலாம்பதியிழந்து மெய்யுருவம்வேறாகி
நாலாம்நரகில் நடுங்குமொருகூழி
புந்தியாலெண்ணரிய பூராயந்தானாக
சந்தியாகென்னுந் தவமுனிவன்வேஷமதாய்
மாநேசமாக வருதவத்தன்முன்தோன்றித்
தானேசவார்த்தைத் தவறுரைத்ததம்மானை
என்பேரிலன்புகொண்டு இங்குவந்துகண்டாலும்
உன்பேரில்மெத்த உவப்பெனக்கானாலும்
இந்தமுறையதனி லென்கோயில்காணவந்த
பந்தமுடனே பலபேருடன்கூடி
ஏன்வந்தாயையா எனக்கிதுபயமல்ல
தான்வந்ததேசந் தனைநோக்கியேமீண்டு
வெம்பியியம்பாமல் விதிக்குருக்கள்தன்னிடமாய்
கொம்பிசம்பண்ணிக் குலவுமுனதாத்துமத்தைப்
பழக்குங்கருணையினால் பார்த்தேதவங்கள்பண்ணி
விளக்குஞ்சுகத்துடனே மீண்டுவாவென்றுரைத்தான்
இத்தரையிற்கண்துயின்ற ஏழைப்பரதேசி
நித்திரையிற்கண்டதெல்லாம் நீதியெனவேயுணர்ந்து
எல்லோனுதித்தபின்பு இனிமைசேர்தம்பதிக்குச்
செல்லலாமென்று திரும்பியுங்கண்வளர்ந்தான்
தான்தோன்றிச்சொன்னதெல்லாஞ் சாவுரையென்றெண்ணாமல்

வான்தோன்றியின்னுமந்த வன்னரகிற்றங்கியபேய்
வேளையறியாமல் மீண்டுமங்கேகண்வளரும்
ஏழையிடத்தே யிரகசியமாய்த்தோன்றி
அரியகிறீஸ்துவுடை ஆறிரண்டுசீஷர்களில்
பெரியவியாக்கோபு பிரதானிநானல்லவோ
என்கோயில்கண்டு எனக்குவந்தபோராகி
அன்போடிருந்து அருந்தவத்தியானவர்போல்
ஊர்க்குநீபோனாலு முற்றதவஞ்செய்தாலும்
பார்க்கும்பொழுதுனது பாவமதுபோகாது
என்னசெய்யவேணுமென்றா லென்னாணையெப்படியும்
உன்னுயிரைத்தான்போக்கு உன்கரத்தில்வாளாலே
நம்பிரானை நமைப்படைத்தநாயகமாம்
தம்பிரானுக்காகத் தான்மடிந்ததாயிருக்கும்
மெய்யென்றுசொன்னான் விழிவிழித்துவீணன்மொழி
பொய்யென்றறியாமல் புகழ்வாள்கரத்தெடுத்து
தன்கழுத்தைத்தானறுத்துத் தாரணியிலேமடிந்தான்
துன்கொலையைக்கண்டு துணைவந்ததொல்புவியோர்
ஓடினாரந்த உளத்துரோகமானபழி
நாடிநம்மேலே நண்ணுமெனப்பயந்து
அங்கவரும்போனா ரவனுமுயிர்போனான்
எங்குமிதுகரும மெண்ணாமல்வந்தவினை
போம்பரிசுபாரீர் புவியில்மனுவோரே
வாம்பரியிலேறி வருமியக்கோவானவரும்
வந்தவகையறிந்து வஞ்சகப்பேய்க்கணங்கள்
அந்தமனிதன் அழகுறுமாத்துமத்தை
தீகொண்டுநாளுந் தியக்கமுறுவன்னரகிற்
பேய்கொண்டுபோகாமற் பெருமையுடன்விலக்க
முன்னான்குவெள்ளி முடிபுனைந்தநாயகிக்குச்
சொன்னார்கொடும்பேய்த் துரோகமெல்லாந்தீயோகு
தாய்கேட்டுஏக தனதுதிருச்சுதற்குப்
பேய்சூட்டும்வஞ்சகத்தைப் பேசிவிடைவாங்கிச்
செத்தோனுயிர்கொடுத்துத் தீநரகிலெந்நாளும்
வைத்தேபசாசுகளை வானில்மகிழ்ந்தாற
அச்சந்திதன்னி லறியாமற்றுஞ்சினவன்
மெய்ச்சந்தியாகருளால் மேதினியிற்றானுயிர்த்து
முன்னோடிப்போனவந்த யோசத்தவர்களுக்குப்
பின்னோடித்தன்னையந்தப் பேயலைத்தசெய்தியெல்லாஞ்
சொல்லித்துயர்தீர்ந்து சுத்தசந்தியாகுபதி
வெல்லத்தொழுதுதம்மூர் மேவினானம்மானை

முடிவுரை.

அம்மானை.

கானாவூர்தன்னிற் கலிலேயமாநகரிற்
றோணாதநீதிமொழி தோன்றும்வதுவைதனில்
சாடியிற்றண்ணீர் தனைமதுவதாக்கியுண்ட
பாடியிற்றோன்றும் பானுக்குவந்தசுத்தன்
முந்தியயாக்கோபு முத்தருக்குமுன்பிறந்த
சந்தியாகின்கதையைத் தாரணியிலுள்ளவர்கள்
மெச்சியறியவென்று மேவுயாழ்ப்பாணமதில்
பச்சிலைப்பள்ளியென்னும் பற்றிற்கிளாலியிலே
நம்பனருள்செறிந்து நானிலமுந்தான்விளங்கும்
கொம்பாஞ்யதேசேசுக் கூட்டத்திலுள்ளவர்கள்
செழிக்குநதிசூழ்ந்த தென்கரையில்முன்னாக
வெளிப்படச்செய்தவ்விடத்தில் மேவுங்கிரந்தமதைக்
கேட்டுமனமகிழக் கேளாதோர்கேட்டுவச
நாட்டுத்தமிழ்ப்படுத்தி நற்குருக்கள் தந்தவுரை
நெல்லிலுமியுமுண்டு நீரில்நுரையுமுண்டு
சொல்லில்வழுவுமுண்டு சூரியனிற்குற்றமுண்டு
கல்லார்மனத்திலிருள் கற்றோர்கணம்விளக்கும்
எல்லாமறிவோ ரெனைப்பழுதுசொல்லாமல்
கண்டவினைநீக்கிக் கற்றோர்கள்முன்னேற்றி
அண்டர்சந்தியாகுகதை யன்பாயவனியிலே
ஆசையுற்றுக்கேட்போ ரறிந்தெழுதியேபடிப்போர்
வாசமுற்றபூவைவிடின் வானுலகஞ்சேருவர்காண்
மாதமும்மூன்றுமழை மங்காமலேதினமும்
சேதமின்றிப்பெய்யுந் திருந்துகிளாலிநகர்
மேற்குத்தெருவில் விளங்குமந்த ஆலயத்தில்
ஆர்க்குமொருவேத மகமகிழப்போதுவித்த
வேதமிகவாழி வேல்வேந்தர்தாம்வாழி
ஓதுமறைக்குருக்க ளூற்றகிறீஸ்தவர்கள்
சத்தியவேத சபைக்குரியபேர்களெல்லாம்
நித்தியம்மேன்மேலும் நேசமாய்வாழியவே
கன்னியர்கள்கற்புக் கலங்காதிலங்கிடவே
பண்ணுதமிழ்ப்பாடும் பாவலர்கள்வாழியவே
பாதகத்தைவிட்டொதுங்கிப் பராபரனைநெஞ்சில்வைத்து
தீதற்றுலகர்கதி சேர்ந்தென்றும்வாழியவே.

முற்றிற்று.

005236